301

# தமிழக சட்டப் பேரவை

## நடவடிக்கைகள்

பணித்துறை வெளியீடு

1967 - ஜூலை

தொகுதி-4, எண்-4

C

D
4V, 11, 31 'N67
N67. 4.4
65020

வெளியீடு—8—5—1968]
Issued—8—5—1968]

MADRAS STATE ARCHIVES
4957/L
22 JUL 1968
EGMORE, MADRAS

# தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

301

சனிக்கிழமை, 1967 ஜூலை 8
Saturday, 8th July 1967

தொகுதி IV—எண். 4
Volume IV —No. 4

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

211, 31 N67
N67-4-4

65020

# உள்ளடக்கம்.

பக்கங்கள்

1. வினாக்கள்-விடைகள் .. .. .. .. .. 357–385

2. முதலமைச்சரின் அறிக்கை—
சென்னை நகரில் ஏற்பட்ட தீ விபத்துக்களும், அவற்றை யொட்டிய பிரச்சினைகளும் .. .. 386–395

3. ஒற்றிவைப்புத் தீர்மானம்—
சென்னை நகரில் தீ விபத்துக்கள் .. .. .. 395–396

4. அறிவிப்பு—
அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு தேர்தல் .. .. .. .. .. .. .. 396–397

5. 1967–68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—
கோரிக்கை எண் XX—தொழில்கள் .. .. ..
கோரிக்கை எண் XL—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு .. .. .. .. .. } 397–468

6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. 468–469

MADRAS STATE ARCHIVES
22 JUL 1968
EGMORE, MADRAS



D
Y211,51 N67
N67.4.4.

## தமிழக சட்டப் பேரவை.

### சனிக்கிழமை, 1967, ஜூலை 8

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மன்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. சி. பா. ஆதித்தனர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

301

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல் வினாக்கள்-விடைகள். உறுப்பினர்கள் கேட்கின்ற வினாக்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடை அளிப்பார்கள். வினா எண் 206 தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

### மதிய உணவுத் திட்டம்.

* 207. வினா.—திரு. ஆ. கு. சுப்பையா:<br>
திரு. சோ. அழகர்சாமி:<br>
திருமதி கே. பி. ஜானகியம்மாள்: } மதிப்பிற்குரிய

கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதிய உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் ஆசிரியர்களின் வேலைப் பளுவை நீக்குவதற்காக, அரசினர் ஆலோசனையில் உள்ள நடவடிக்கைகள் யாவை?

(இ) மதிய உணவுக்காக வழங்கப்படும் நிதி உதவியை ஆறு பைசாவிற்கு மேல் அதிகரிக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) 1957-ம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட மதிய உணவுத் திட்டப்படி. சமையல்காரர்களும், வேலையாட்களும் உணவைத் தயாரிப்பதற்கும், வழங்குவதற்கும் அமர்த்தப்படலாம். இந்த வகைக்கான செலவானது அங்கீகரிக்கப்பட்ட செலவாகும். மதிய உணவுக்கு மான்யம் (உதவி நிதி) வழங்கும்போது இச்செலவும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

அரசாங்கம் மையச் சமையலறை முன்னோடித் திட்டம் ஒன்றை "கேர்" உதவியை கொண்டு பூந்தமல்லி பஞ்சாயத்து ஒன்றிப்பில் துவங்க சமீபத்தில் அனுமதியளித்துள்ளது. அத் திட்டத்தின்படி ஒரு இடத்தில் தயாரிக்கப்பட்ட உணவானது பஞ்சாயத்து ஒன்றிப்பில் உள்ள எல்லாப் பள்ளிகளுக்கும், மோட்டார் வண்டியில் ஏற்றிச் செல்லப்பட்டு வழங்கப்படும்.

இந்த முறையினால் ஆசிரியர்கள் உணவு தயாரித்து வழங்கவேண்டிய அவசியம் இருக்காது. இந்த முன்னோடித் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுமானால், இந்த முறை எல்லாப் பஞ்சாயத்து ஒன்றிப்புகளுக்கும் விஸ்தரிக்கப்படுமா என்பதை விசாரிக்கப்படும்.

(இ) இல்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஐயா, அமைச்சர் அவர்கள் கூறிய விவரம் இந்த முன்னோடித் திட்டத்தில் ஒரு ஒன்றிப்பு மன்றத்தில் இருந்து சமைத்து, மற்ற இடங்களுக்குக் கொண்டுபோகவேண்டுமென்று சொன்னால், வசதி இல்லாத இடங்களுக்கு அது சாத்தியப்படுமா? அப்படி சாத்தியப்படாமல் இருந்தால், 4, 5 பள்ளிகளுக்கு ஒரு மையம் ஏற்படுத்தி இந்த உணவு கொண்டு செல்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்பொழுது கேர் ஸ்தாபனத்தின் முயற்சியால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. கூடுமானவரை ஒவ்வொரு ஒன்றிப்பு மன்றத்திற்கும் ஒரு விடுதியை ஏற்பாடு செய்வதற்கு முயற்சி செய்யப்பட்டு வருகிறது. ஒரு இடத்திற்கும், மற்றொரு இடத்திற்கும் குறுக்கே ஆறுகள் இருக்குமானால், அப்படிப்பட்ட இடங்களுக்கு தனியாக உணவு தயாரித்து அனுப்புவது என்பது கவனிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் எவ்வளவு கொண்டுவர முடியுமோ, அவ்வளவு கொண்டுவர முயற்சி செய்யப்படுகிறது. பூந்தமல்லி ஒன்றிப்பிலே 57 சிற்றூர்களில் 48 பள்ளிகள் ஒருமுகப்படுத்தப்பட்ட நிலையில் இருப்பதால், அவைகளுக்குக் கொண்டுபோக முடியும். மொத்தம் இருக்கிற 9 பள்ளிகளில் மோட்டார் கார் அல்லது வேறு வகையாகச் செல்ல முடியாத பகுதிகளுக்குத் தனியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடந்தால், எல்லா இடங்களுக்கும் ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி :** இந்த முன்னோடித் திட்டம் எப்பொழுதிலிருந்து ஒன்றிப்பு மன்றங்களில் நடைமுறைக்கு வரும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பூந்தமல்லியில் பரீட்சார்த்தத் திட்டம் போடப்பட்டு, அங்கே சமையலுக்கு வேண்டிய பாத்திரங்கள் போன்றவற்றை கேர் ஸ்தாபனமே கவனித்துக் கொள்கிறார்கள். அதற்கு நிலம் வழங்குவதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. மற்றவற்றையெல்லாம் கேர் ஸ்தாபனம் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இன்னும் 5, 6 மாதங்களுக்குள் முடிவடைந்துவிடும். அப்படி முடிவடைந்தவுடன் மற்ற இடங்களுக்கு விஸ்தரிப்பதுபற்றி யோசிக்கப்படும்.

**திரு. ஆலடி அருணா :** நண்பகல் உணவிற்குச் செய்யப்படும் உதவியை ஊர் ஆட்சி ஒன்றிப்புகளுக்கு வழங்கப்படுவதற்குப் பதிலாக அதை ஒவ்வொரு ஊர் ஆட்சிப் பொறுப்பிலும்விட அரசாங்கம் முயற்சிக்குமா?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** விவரம் இல்லை. இதற்காக அரசாங்கம் 6 காசும், ஊர்ஆட்சி ஒன்றிப்பு 2 காசும், பொது மக்களிடமிருந்து 2 காசும், ஆக மொத்தம் 10 காசுகள் என்ற அளவிலே நடந்து வருகிறது. இதற்காக கேர் ஸ்தாபனத்திலிருந்து 3, 4 காசுகள் வழங்கப்படுகிறது.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state whether there is any proposal to extend this to other capitals in the districts and whether further lands have been allotted to such pilot scheme for cultivation of vegetables and greens?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இந்தப் பூந்தமல்லி ஒன்றிப்புத் திட்டம் வெற்றிகரமாகவும், எளிதாகவும் அமைகிற சூழ்நிலை ஏற்பட்டால், எல்லா ஒன்றிப்புகளுக்கும் இதைக் கொண்டுவரக்கூடிய நிலைமை ஏற்படும். இதற்காக இரண்டு மூன்று மோட்டார் வாகனங்களையும் தருவதாகக் கேர் ஸ்தாபனம் வாக்களித்திருக்கிறார்கள். சமையல் செய்வதற்கு பாத்திரங்களையும், கட்டடம் போன்றவற்றிற்கு ஆகக்கூடிய செலவையும், அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். கட்டடம் கட்டுவதற்காக 15 ஏக்கர் நிலத்தை தருவதற்கும், கூலி ஆட்கள் தருவதற்கும் மாநில அரசு ஏற்பாடு செய்யும். அங்கங்கே நெல் உற்பத்தி செய்ய முடியுமானால், செய்யபடும். இல்லாவிட்டால், வேறு காய்கறி உற்பத்தி செய்யப்படும். அதற்காகத்தான் அவர்கள் 15 ஏக்கர் நிலம் கேட்டிருக்கிறார்கள். எல்லா ஒன்றிப்புகளிலும் இந்த வசதியைச் செய்யத்தான் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

**திரு. முனு. ஆதி:** தலைவர் அவர்களே, மையமாக வைத்து சமையல் செய்து 50 பள்ளிகளுக்கு 12 மணிக்கு விநியோகம் செய்யவேண்டுமானால், அங்கு 10 மணிக்குள் சமையலை முடிக்க வேண்டும். ஆகையால் சமையல் செய்வதற்கு இயந்திரங்கள் வைத்து, சமையல் செய்வதற்கு உத்தேசம் இருக்கிறதா? அல்லது அடுப்பிலே வைத்து சமையல் செய்யவேண்டும் என்பது உத்தேசமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தத் திட்டம் மேற்கொள்ளும்போது இயந்திரத்தினால் விரைவாகவும், எளிதாகவும், மற்றவர்களுக்குத் தொல்லையில்லாத வகையிலும், தூய்மையாகவும் இருப்பதற்கு மேற்கொள்ளப்படும்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** பஞ்சாயத்து யூனியன் ஏரியாக்களில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வதற்கு போதிய ரோடு வசதிகள் இல்லை. அப்படிப்பட்ட இடங்களில் இந்த முறை வெற்றிகரமாக இருக்க முடியுமா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** முதலில் இதுபற்றி குறிப்பிட்டிருக்கிறேன். மையமாக உள்ள இடத்தில் பல

இந்த முறையினால் ஆசிரியர்கள் உணவு தயாரித்து வழங்கவேண்டிய அவசியம் இருக்காது. இந்த முன்னோடித் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுமானால், இந்த முறை எல்லாப் பஞ்சாயத்து ஒன்றிப்புகளுக்கும் விஸ்தரிக்கப்படுமா என்பதை விசாரிக்கப்படும்.

(இ) இல்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா:** ஐயா, அமைச்சர் அவர்கள் கூறிய விவரம் இந்த முன்னோடித் திட்டத்தில் ஒரு ஒன்றிப்பு மன்றத்தில் இருந்து சமைத்து, மற்ற இடங்களுக்குக் கொண்டுபோகவேண்டுமென்று சொன்னால், வசதி இல்லாத இடங்களுக்கு அது சாத்தியப்படுமா? அப்படி சாத்தியப்படாமல் இருந்தால், 4, 5 பள்ளிகளுக்கு ஒரு மையம் ஏற்படுத்தி இந்த உணவு கொண்டு செல்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்பொழுது கேர் ஸ்தாபனத்தின் முயற்சியால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. கூடுமானவரை ஒவ்வொரு ஒன்றிப்பு மன்றத்திற்கும் ஒரு விடுதியை ஏற்பாடு செய்வதற்கு முயற்சி செய்யப்பட்டு வருகிறது. ஒரு இடத்திற்கும், மற்றொரு இடத்திற்கும் குறுக்கே ஆறுகள் இருக்குமானால், அப்படிப்பட்ட இடங்களுக்கு தனியாக உணவு தயாரித்து அனுப்புவது என்பது கவனிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் எவ்வளவு கொண்டுவர முடியுமோ, அவ்வளவு கொண்டுவர முயற்சி செய்யப்படுகிறது. பூந்தமல்லி ஒன்றிப்பிலே 57 சிற்றூர்களில் 48 பள்ளிகள் ஒருமுகப்படுத்தப்பட்ட நிலையில் இருப்பதால், அவைகளுக்குக் கொண்டுபோக முடியும். மொத்தம் இருக்கிற 9 பள்ளிகளில் மோட்டார் கார் அல்லது வேறு வகையாகச் செல்ல முடியாத பகுதிகளுக்குத் தனியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடந்தால், எல்லா இடங்களுக்கும் ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி:** இந்த முன்னோடித் திட்டம் எப்பொழுதிலிருந்து ஒன்றிப்பு மன்றங்களில் நடைமுறைக்கு வரும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பூந்தமல்லியில் பரீட்சார்த்தத் திட்டம் போடப்பட்டு, அங்கே சமையலுக்கு வேண்டிய பாத்திரங்கள் போன்றவற்றை கேர் ஸ்தாபனமே கவனித்துக் கொள்கிறார்கள். அதற்கு நிலம் வழங்குவதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. மற்றவற்றையெல்லாம் கேர் ஸ்தாபனம் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இன்னும் 5, 6 மாதங்களுக்குள் முடிவடைந்துவிடும். அப்படி முடிவடைந்தவுடன் மற்ற இடங்களுக்கு விஸ்தரிப்பதுபற்றி யோசிக்கப்படும்.

**திரு. ஆலடி அருணா:** நண்பகல் உணவிற்குச் செய்யப்படும் உதவியை ஊர் ஆட்சி ஒன்றிப்புகளுக்கு வழங்கப்படுவதற்குப் பதிலாக அதை ஒவ்வொரு ஊர் ஆட்சிப் பொறுப்பிலும்விட அரசாங்கம் முயற்சிக்குமா?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** விவரம் இல்லை. இதற்காக அரசாங்கம் 6 காசும், ஊர் ஆட்சி ஒன்றிப்பு 2 காசும், பொது மக்களிடமிருந்து 2 காசும், ஆக மொத்தம் 10 காசுகள் என்ற அளவிலே நடந்து வருகிறது. இதற்காக கேர் ஸ்தாபனத்திலிருந்து 3, 4 காசுகள் வழங்கப்படுகிறது.

THIRU T. MARTIN: May I request the Hon. Minister to state whether there is any proposal to extend this to other capitals in the districts and whether further lands have been allotted to such pilot scheme for cultivation of vegetables and greens?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இந்தப் பூந்தமல்லி ஒன்றிப்புத் திட்டம் வெற்றிகரமாகவும், எளிதாகவும் அமைகிற சூழ்நிலை ஏற்பட்டால், எல்லா ஒன்றிப்புகளுக்கும் இதைக் கொண்டுவரக்கூடிய நிலைமை ஏற்படும். இதற்காக இரண்டு மூன்று மோட்டார் வாகனங்களையும் தருவதாகக் கேர் ஸ்தாபனம் வாக்களித்திருக்கிறார்கள். சமையல் செய்வதற்கு பாத்திரங்களையும், கட்டடம் போன்றவற்றிற்கு ஆகக்கூடிய செலவையும், அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். கட்டடம் கட்டுவதற்காக 15 ஏக்கர் நிலத்தை தருவதற்கும், கூலி ஆட்கள் தருவதற்கும் மாநில அரசு ஏற்பாடு செய்யும். அங்கங்கே நெல் உற்பத்தி செய்ய முடியுமானால், செய்யபடும். இல்லாவிட்டால், வேறு காய்கறி உற்பத்தி செய்யப்படும். அதற்காகத்தான் அவர்கள் 15 ஏக்கர் நிலம் கேட்டிருக்கிறார்கள். எல்லா ஒன்றிப்புகளிலும் இந்த வசதியைச் செய்யத்தான் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

**திரு. முனு. ஆதி:** தலைவர் அவர்களே, மையமாக வைத்து சமையல் செய்து 50 பள்ளிகளுக்கு 12 மணிக்கு விநியோகம் செய்யவேண்டுமானால், அங்கு 10 மணிக்குள் சமையலை முடிக்க வேண்டும். ஆகையால் சமையல் செய்வதற்கு இயந்திரங்கள் வைத்து, சமையல் செய்வதற்கு உத்தேசம் இருக்கிறதா? அல்லது அடுப்பிலே வைத்து சமையல் செய்யவேண்டும் என்பது உத்தேசமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இந்தத் திட்டம் மேற்கொள்ளும்போது இயந்திரத்தினால் விரைவாகவும், எளிதாகவும், மற்றவர்களுக்குத் தொல்லையில்லாத வகையிலும், தூய்மையாகவும் இருப்பதற்கு மேற்கொள்ளப்படும்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** பஞ்சாயத்து யூனியன் ஏரியாக்களில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வதற்கு போதிய ரோடு வசதிகள் இல்லை. அப்படிப்பட்ட இடங்களில் இந்த முறை வெற்றிகரமாக இருக்க முடியுமா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** முதலில் இதுபற்றி குறிப்பிட்டிருக்கிறேன். மையமாக உள்ள இடத்தில் பல

[1967 ஜூலை 8

பள்ளிக்கூடங்கள் அடங்கக் கூடிய முறையில் கொண்டுவருகிறார்கள். வசதி இல்லாது விடப்பட்ட பள்ளிகளுக்குத் தனியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

THIRU K. VINAYAKAM : In the matter of distribution of mid-day meals to the children studying in private schools, it has been the practice now-a-days to entrust the cooking work to the teachers and separate cooks are not provided for the purpose. That being the case, will the Government consider the possibility of allotting adequate grants to the institutions concerned so that they may appoint separate cooks to cook the food supplied to the children under the mid-day meals scheme?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஆசிரியர்களோ அல்லது பள்ளியிலே பணியாற்றுகிறவர்களோ, சமையல் செய்யவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. சமையல் செய்வதற்காகவும், பரிமாறுவதற்காகவும் அரசாங்கம் அந்தச் செலவையும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்தச் செலவும் திட்டத்தில் அடங்கும்.

**திரு. பெ. மலைச்சாமி :** மதிய உணவுத் திட்டத்திற்காக பொது மக்களால் வழங்கப்படும் நன்கொடைகள் முறையாக வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியிருந்தால், அதற்காக என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அது முறையாகப் பல இடங்களில் வரவில்லை என்ற குறைபாடும் சொல்லப்படுகிறது. ஆர்வமும், அக்கறையும் உள்ளவர்கள் நல்ல முறையில் பணியாற்றவும், பணம் திரட்டவும் முடிகிறது. நன்கொடைகளைத் திரட்டுவதற்கு செவ்வையாகவும், சீராகவும் நடைபெற எந்த முறையை மேற்கொள்ளவேண்டும் என்பதுபற்றி ஆராய்ந்து வருகிறது. இது பற்றி அதிகாரிகளையும், மற்றவர்களையும் கலந்து தக்க முறையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஸார், இதற்காக வேண்டி எந்த எந்த விதத்திலேயெல்லாம் வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது? வெளி நாடுகளிலிருந்தும் ஏதாவது உதவி கிடைக்கிறதா? போக முடியாத இடங்களுக்கு ஜீப்பின் மூலம் கொண்டுபோகும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி இந்தத் திட்டதின் கீழே கொண்டுவரக் கூடிய பள்ளிகளையெல்லாம், இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டு வருகிறார்கள். பூந்தமல்லியில் உள்ள 56 பள்ளிகளில் 47 பள்ளிகள், சேர்ந்தாற்போல உள்ள பள்ளிகளை, இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டுவரக்கூடிய நிலைமையும், பாக்கிப் பள்ளிகளுக்கு மோட்டார் வாகனங்கள் போக முடியாத சூழ்நிலையும் இருக்கின்றன. அந்த 9 பள்ளிகளுக்குத் தனித்தனியாக ஏற்பாடு செய்யும் முறை பூந்தமல்லியில் மேற்கொள்ளப்படுகிறது. இந்தத்



1967 ஜூலை 8]

திட்டம் விரிவு அடைந்த பிறகு இப்படிப்பட்ட பள்ளிகளுக்கு என்ன செய்யலாம் என்று யோசித்துத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, இந்த நண்பகல் உணவுத் திட்டம் ஆசிரியர்களால் சரிவர அமல் நடத்தப்படவில்லை. ஆகவே, இதற்காக ஊர் மக்கள் அடங்கிய ஒரு குழுவை ஏற்படுத்தி, இந்தத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு உணவு **வினியோகிக்க அரசாங்கம் முற்படுமா?**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்த முறைதான் இப்போது மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு ஊருக்கும் மதிய உணவுக் குழு என்று அமைத்து, அந்தக் குழுவின் மேற்பார்வையில் நடைபெறவேண்டும் என்று அந்தக் குழுவினிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, மதிய உணவுத் திட்டத்தில் இப்போது ஆசிரியர்கள்தான் அந்தப் பணியை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதிலே புகார்கள் நிறைய வந்திருக்கின்றன. இது அரசாங்கத்திற்குத் தெரியும், என்னைப் போன்ற அங்கத்தினர்களுக்கும் தெரியும். இந்த முறையை மாற்றி வேறு ஒரு முறையைக் கைக்கொள்ளும் எண்ணம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அரசாங்கம் தெரிந்த முறைகளையெல்லாம் கையாண்டிருக்கிறது. உறுப்பினர் அவர்களுக்கு ஏதாவது புதிய முறை தெரியுமானால், அதை எடுத்துச் சொல்லுவார்களானால், அதைப்பற்றிப் பரிசீலித்து நடைமுறைக்கு கொண்டுவர முயற்சி எடுக்கப்படும்.

**திரு. பி. வேலுசாமி :** தலைவர் அவர்களே, மதிய உணவுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற பள்ளி ஆசிரியர்களுக்கு ஏதாவது விசேஷ அலவென்ஸ் கொடுக்கப்படுமா? அப்படியானால் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்தப் பொறுப்பே ஆசிரியர்களுக்கு விடப்படவில்லை என்று சொல்லும்போது, அலவன்ஸ் பற்றிய கேள்வியே எழவில்லை.

* 208 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :**
**திரு. இல. பலராமன் :**
**திரு. கே. விநயகம் :**
} மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதிய உணவுத் திட்டத்தைத் தீவிரமாக செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள முறைகள் யாவை?

[1967 ஜுலை 8

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இம்மாநிலத்தில் மதிய உணவுத் திட்டம் கிட்டத்தட்ட எல்லாத் துவக்கப் பள்ளிகளிலும் செயல்படுகிறது. அப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு மாணவர்களுக்கு உணவளிக்கப்படுகிறது. ஆனால், இப்போது "கேர்" உதவியைக்கொண்டு பூந்தமல்லி பஞ்சாயத்து ஒன்றிப்பில் ஒரு முன்னோடித் திட்டத்தை துவங்க அரசு அனுமதியளித்துள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** ஸார், இந்தத் திட்டம் நிறைவேறக்கூடிய நேரத்திலே, ஒவ்வொரு பஞ்சாயத்து போர்டிலும் இருக்கக்கூடிய விவசாயம் செய்வதற்கு லாயக்கான நிலங்களில் நெல் சாகுபடி செய்து, அந்த நெல்லை உபயோகப்படுத்தி மதிய உணவு கொடுக்க ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இந்த 'கேர்' திட்டத்தின் நோக்கமே, அவர்கள் போட்டிருக்கக் கூடிய கணக்குப்படி, 15 ஏக்கர் நிலம் இருக்குமானால், அதிலே நெல் உற்பத்தி செய்தால், காய்கறி உற்பத்தி செய்தால், ஒரு ஆண்டுக்குப் போதுமான அளவுக்கு நெல்லும், காய்கறிகளும் கிடைக்க முடியும் என்று இருக்கிறது. அப்படி நெல் பயிரிடுவதற்கு நிலம் எல்லா ஒன்றிப்புகளிலும் கிடைக்குமா என்ற ஐயப்பாடு இருக்கிறது. ஒவ்வொரு ஒன்றிப்பிலும் நிலத்தில் உழுது, பயிரிட்டு, அறுவடை செய்து, மணிகளைச் சேகரிப்பதிலே, அந்தப் பொறுப்பை யாரிடம் ஒப்படைப்பது என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. அப்படி இல்லாமல் குறிப்பிட்ட சில இடங்களில் நிலங்களிலே பயிரிட்டு, நெல்லைச் சேகரித்து எல்லா ஒன்றிப்புகளுக்கும் வினியோகிக்கலாமா என்று ஆலோசிக்கப்படுகிறது. அதைப்பற்றி ஆராயும்படி ரெவின்யூ ஹைச் செயலாளர் அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். தஞ்சை, திருச்சி போன்ற இடங்களில் கோவில்களுக்குச் சொந்தமான நிலங்களைக்கூட மதிய உணவுத் திட்டத்திற்கென்று ஒதுக்கி, அதிலே பயிரிட்டு, நெல்லை எல்லா ஒன்றிப்புகளுக்கும் விநியோகிக்கலாமா என்றும் ஆலோசிக்கப்படுகிறது. நியமிக்கப்பட்டுள்ள அதிகாரியினுடைய அறிக்கைகள் வந்த பிறகு தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

THIRU K. VINAYAKAM: In the matter of effective implementation of this mid-day meals scheme, CARE is providing us with a lot of consumer goods. Are they given to our Government gratis or are there any political strings attached?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அவர்கள் உணவுப் பொருள்களை இனமாக வழங்கவும், அதற்கான வசதிகளை இனமாகச் செய்து தரவும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். பரிமாறுகிற பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. பின்னால் என்ன நோக்கம் இருக்கிறது என்று இந்த அரசாங்கத்திற்குத் தெரியவில்லை.



1967 ஜுலை 8]

**திரு. இல. பலராமன்:** தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்கு ஒதுக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களைப் பண்படுத்தி, பள்ளிகளுக்கான மதிய உணவுத் திட்டத்திற்காகப் பயிரிடவேண்டுமென்று சர்க்கார் ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இந்தத் திட்டத்தை எல்லா ஒன்றிப்புகளிலும் மேற்கொள்ளும் போது, அந்தந்த ஒன்றிப்புகளிலும் பயிரிடும் நிலங்கள் இருக்கின்றன, புறம்போக்கில் இருக்கின்றன, எடுத்தால் பயன்படும் என்ற நிலை வரும் போது அது ஆராயப்படும்.

**திரு. நா. கிருட்டிணன்:** தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் உள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் எல்லாம் மதிய உணவுத் திட்டத்திற்காகப் பொருள்களைச் சேகரிக்க வாரத்திற்கு ஒரு நாள் பள்ளிகளை விட்டுச் சென்று விடுகிறார்கள். அதனால் பள்ளிகளில் வேலை குந்தகப்படுகிறது. இதற்கு ஒரு மாற்றுத் திட்டமாக லாரிகளின் மூலம் மதிய உணவுத் திட்டத்திற்கான பொருள்களை வினியோகிக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** நான் முதலிலே கூறியபடி இதிலே கட்டாயம் இல்லை. தலைமை ஆசிரியர்களும், ஆசிரியர்களும் போய்த் திரட்ட வேண்டிய கட்டாயச் சூழ்நிலை இல்லை. இதற்குச் சமையல்காரர்களையோ, வேலைக்காரர்களையோ கூட அமர்த்திக்கொள்ளலாம். அதற்கான செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்ற முறையில்தான், இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் மாணவர்களிடம் உள்ள அன்பின் காரணமாக, பணிபுரியவேண்டும் என்ற தொண்டு மனப்பான்மை காரணமாக, அவர்கள் முன்வந்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**திரு. க. கோமதிசங்கர திட்சிதர்:** கனம் சபாநாயகர் அவர்களே, மதிய உணவுத் திட்டம் ஏழை மாணவர்களுக்குப் பயன் அளிப்பதால், இந்தத் திட்டம் நல்ல முறையில் வெற்றியுடன் செயல்பட, உபாத்தியாயர்களுடைய தலையில் இந்தப் பொறுப்பை வைக்காமல், அரசாங்கத்தினுடைய கன்ட்ரிப்யூஷனையும், பஞ்சாயத்து யூனியனுடைய கன்ட்ரிப்யூஷனையும் கொஞ்சம் அதிகப்படுத்தி, இந்தத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இந்தத் திட்டத்திற்கு அரசாங்கம் ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய் அளவுக்குச் செலவிடுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதி மாணவர்களுக்காக உதவி கிடைக்க வேண்டுமென்று உத்திரவிடப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களிடம் இந்தப் பணியை விடக்கூடாது என்ற எண்ணம் அரசாங்கத்திற்கும் இருக்கிறது, ஆசிரியர்களுக்கும் இருக்கிறது. ஆசிரியர்களும் தங்கள் சங்கங்களின் மூலமாக, மகஜர்கள் மூலமாக இருக்கக்கூடிய தொல்லைகளை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். வேறு எந்த வகையில் திருத்தி,

செம்மையாக, சிறப்பாக நிறைவேற்றி நடத்தலாம் என்று அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தில் ஒன்றுதான் பூந்தமல்லியில் மேற்கொள்ளப்படும் பரீட்சார்த்தத் திட்டம். அந்தத் திட்டம் வெற்றிகரமாக இருந்தால், எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்க ஏற்பாடு செய்யலாம்.

**திரு. பி. துரைராஜ் :** தலைவர் அவர்களே, நண்பகல் உணவுத் திட்டத்தின் கீழ் உணவு வழங்குவதற்குப் பதிலாக சத்துள்ள பொருட்களாகிய ரொட்டி, பிஸ்கெட் கொடுக்க இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அது கூட ஆராயப்பட்டது. ஆனால், ரொட்டி, பிஸ்கெட் போன்றவைகள் இந்தக் குறைந்த அளவுக்குக் கொடுக்கிற வகையில் ஏற்படாது. மற்றும் இப்படிப்பட்ட சமைக்கப்பட்ட உணவுப் பொருள்களைத்தான் விரும்பும் நிலையில் இருக்கிறார்கள். ரொட்டி, பிஸ்கெட் கொடுப்பதாக இருந்தால், ஒரு இடத்தில் தயாரித்து பொட்டலமாக வாரத்திற்கு ஒரு முறை எல்லா இடங்களுக்கும் அனுப்பப்படலாம். இப்போது பரீட்சார்த்த முறையில் பூந்தமல்லியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டம் வெற்றிகரமாக இருந்தால், அதை எல்லா இடங்களிலும் கொண்டுவரலாம்.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, மதிய உணவுத் திட்டத்திற்காக, குறைந்த விலையில் அரிசி கிடைக்காததால், இப்போது கட்டுபடியாகவில்லை. ரேஷன் கடைகளிலிருந்து அரிசியைக் குறைந்த விலையில் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ? மதிய உணவுக் குழுவிற்கு பஞ்சாயத்துத் தலைவர்கள் தலைவர்களாக இருந்தார்கள். ஆசிரியர்களிடம் இப்போது பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பதால், பஞ்சாயத்தில் இரண்டு பைசாக்கள் நன்கொடை வசூலிப்பது கஷ்டமாக இருக்கிறது. இதை மாற்றி பஞ்சாயத்துத் தலைவர், குழுவின் தலைவராக இருக்க வேண்டுமென்று அரசாங்கம் கட்டாயப்படுத்துமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** உறுப்பினர் அவர்கள் தரும் விவரங்களையும், கூறும் கருத்துக்களையும் ஆராய்ந்து, இந்தத் திட்டத்தைச் செம்மைப்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபடும்.

**திரு. பெ. மலைச்சாமி :** மதிய உணவுத் திட்டம் ஒழுங்காக செயல்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு தனி அதிகாரி நியமிக்கப்படுவாரா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அந்த அதிகாரிகளைக் கண்காணிப்பதற்கு வேறு அதிகாரிகளை நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்படும், ஆங்காங்கு இருக்கிற பொது மக்களும், தொண்டு புரிகிற அளவுக்கு உள்ளம் படைத்தவர்களும், ஊராட்சி



ஒன்றியப் பெருமக்களும் கொஞ்சம் அக்கறை எடுத்துக் கொண்டால், இந்தத் திட்டம் செம்மையாக நடைபெறுவதற்கு வழி ஏற்படும்.

**திரு. சோ. அழகர்சாமி :** மதிய உணவுத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு பள்ளியிலும் 100 குழந்தைகள் இருந்தால், 50 குழந்தைகளுக்கு மட்டும் உணவு அளிக்கப்படுகின்ற முறையில், பரிமாறக்கூடிய காலத்தில் சிறு குழந்தைகள் எல்லோருமே உட்காரக்கூடிய நிலை ஏற்படும்பொழுது, அவர்களை வேண்டாம் என்று போகச் சொல்லுவது ஆசிரியர்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, 1, 2, 3-வது வகுப்பிலுள்ள அத்தனை குழந்தைகளுக்கும் உணவு வழங்குவதற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலில் குறிப்பிட்டபடி 30,831 பள்ளிகளில் 30,739 பள்ளிகளில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மிகவும் ஏழை எளியவர்களாக இருப்பவர்களுக்கும், வீட்டிலே உணவு இல்லாமல் அவதிப்படும் நிலையில் இருப்பவர்களுக்கும், பள்ளிகளில் சேர்ந்து படியாதவர்களைப் படிப்பதற்கும், ஊக்குவிப்பதற்கும் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, எல்லோருமே வசதியற்ற நிலையில் ஆரம்பப் பள்ளிகளில் சேருகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. இருக்கிற நிதி வசதியை நாம் எப்படி செலவழிக்கக்கூடும் என்பதைக் கணக்கிட்டு குறைந்த அளவு மூன்றில் ஒரு பங்கு குழந்தைகளுக்கு மதிய உணவு கொடுக்கவேண்டும் என்றுதான் வற்புறுத்தப்படுகிறது. ஆங்காங்கிருக்கிற நிதி வசதியைப் பொறுத்து, அந்த எண்ணிக்கையை வளர்த்துக்கொள்வதிலே எந்தத் தடையும் இல்லை.

Dr. H. V. Hande : Sir, there is no doubt that this is an excellent scheme on paper but in practice after spending two crores of rupees, there is no satisfaction to the teachers or the children and a number of children are affected by diarrhoea and stomach-pain. So, will this Government realise the sense of dissatisfaction felt in this House through the volley of questions put in regard to this matter and appoint at least a three-man committee to see where exactly the working of the schme has gone wrong?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தத் திட்டம் நல்ல நோக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருக்கிற திட்டம் என்பதை கனம் உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதற்காக செலவழிக்கப்படும் ரூ. 2 கோடியும் வீணாகவே ஆகிறது, எந்த வகையிலும் பயன்படவில்லை என்று கூறுவதற்கில்லை. அது ஓரளவுக்கு பயன்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் சில பல குறைபாடுகள் இருக்கின்றன என்பதையும் அத்தனை பேர்களும் உணர்கிறோம். பொது மக்களுடைய ஒத்துழைப்பும், ஆங்காங்கிருக்கிற நல்லவர்களுடைய ஒத்துழைப்பும் கிடைக்குமானால், இதைச் சீர்படுத்தி, செம்மைபடுத்த இயலும்.

[1967 ஜூலை 8

அதற்கான முறைகளை இந்த அரசாங்கம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி உறுப்பினர்கள் சிலபல முறைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அவைகளையும் அரசாங்கம் மேற்கொண்டு ஆராய்ந்து, நடை முறைக்குக் கொண்டுவருவதற்கு முயற்சி எடுக்கப்படும். முதலில் சொன்னபடி கேர் நிறுவனத்தினுடைய திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. அ. ஆறுமுகம்:** கிராமப் பகுதிகளில் இருக்கிற புறம்போக்கு நிலங்களை எடுத்து உழுது பயிரிட்டு, அதிலிருந்து வரக்கூடிய வருமானத்தைக் கொண்டு மதிய உணவு போடும் திட்டம் ஏதாவது அரசாங்கத்தினிடம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப்பிலும் இந்தத் திட்டத்தை அமல்படுத்தும்பொழுது, அந்தக் கருத்தும் ஆலோசிக்கப்படும்.

**திரு. வ. ஜார்ஜ்:** இப்பொழுது எங்கள் பகுதியிலுள்ள பாடசாலைக்கு மதிய உணவுக்கான அரிசி பக்கத்திலுள்ள ஹாண்டு பவுண்டிங் சொஸைடியிலிருந்து வாங்கிவர வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அந்த சொஸைடி பாடசாலையிலிருந்து 10, 15 மைல் அந்தப் பக்கத்தில் இருக்கிறது. அவ்வளவு தூரம் சென்று அரிசி வாங்கி வருவது என்றால், தலைமை ஆசிரியருக்குக் கஷ்டமாக இருக்கிறது. இரண்டு, மூன்று தடவை போகவேண்டியிருக்கிறது. ஏனென்றால் போகிறபொழுது, சில சமயங்களில் அரிசி கிடைப்பதில்லை. ஆகவே, அந்தப் பாடசாலைக்குத் தேவையான அரிசியை பக்கத்திலிருக்கிற ரைஸ் டெப்போவிலிருந்து வாங்கிக்கொள்ள அரசாங்கம் வழி செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அரிசி எந்த முறையில் வழங்கப்படுகிறது என்பதுபற்றி விவரங்கள் இல்லை. கனம் உறுப்பினர் அவர்கள் கூறுகிறபடி அதில் ஏதாவது கஷ்டம் இருக்குமானால், அது தவிர்க்கப்பட்டு, அதை எளிமையாக்குவதற்கான முயற்சி எடுக்கப்படும்.

**திரு. மா. பா. சாரதி:** இந்த மதிய உணவுத் திட்டத்திற்காக சர்க்கார் ரூ. 2 கோடி செலவு செய்வதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு கேர் ஸ்தாபனம் வருடத்திற்கு எவ்வளவு மதிப்புள்ள பொருள்களை வழங்குகிறார்கள்? வேலூர் நகராட்சி மன்றத்திற்கு இந்த மதிய உணவுத் திட்டத்தின் கீழ் பாத்திரங்களும், இரண்டு வான்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி பல நகராட்சி மன்றங்களுக்கும் கேர் ஸ்தாபனத்தின் மூலம் பொருள்களை வாங்கிக் கொடுத்து, இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தச் சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** கேர் நிறுவனம் கிட்டத்தட்ட ரூ. 25 லட்சம் மதிப்புள்ள பொருள்களை இந்தத்



1967 ஜூலை 8]

திட்டத்திற்கு உதவியாகத் தருகிறார்கள். கனம் உறுப்பினர் குறிப்பிட்டதைப்போன்று எல்லா இடங்களுக்கும் உதவிகளைத் தந்திருக்கிறார்களா என்று தெரியவில்லை. பரவலாக தேவைப்படுகிற இடங்களுக்கெல்லாம் தரப்பட்டிருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன்:** மதிய உணவுத் திட்டம் மிக நல்லதாக இருந்தாலும், இதை அமல்படுத்துகிற விதத்தில் பல கோளாறுகள் இருப்பதாக புகார்கள் வந்திருக்கின்றன. கேர் ஸ்தாபனங்கள் போன்ற ஸ்தாபனங்கள் இதற்காக உதவியும் செய்கிறார்கள். இந்த உதவிகள் குழந்தைகள் வயிற்றுக்குப் போகாமல் வேறு வகையிலே போகிறது என்ற புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் துரிதமாக, தீவிரமாக ஆராய்ச்சி செய்து ஒரு முறையான திட்டத்தை உருவாக்குவதற்கு சர்க்கார் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** முறையான திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற ஆவல்தான் இந்த அரசுக்கு இருந்துவருகிறது. அதற்கான யோசனைகள் எப்படி வருகின்றன, எப்படி எப்படி அவற்றை நடைமுறைப்படுத்துவது என்பதில்தான் இருக்கின்ற கஷ்டங்கள். உருவான யோசனைகளை பரிசீலித்து தக்க முடிவுகளை எடுக்கலாம். கனம் உறுப்பினர்கள் இது சம்பந்தமாக கூறுகின்ற கருத்துக்களும் கருத்திலே வைக்கப்படும்.

**THIRU K. VINAYAKAM:** Sir, whereas the implementation of this mid-day meal scheme is considered to be a compulsory one in the Madras City for all primary schools and whereas out of personal experience I have found that it is almost difficult to persuade children to take part in this mid-day meal scheme and whereas they come from a higher strata of society and whereas in consideration of the efficiency of some schools, will the Government consider the possibility of exempting such of those schools which opt out of this scheme and thus save good money to be spent out of the coffers of the State Government?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** எல்லோரையும் கட்டாயப்படுத்தி இந்த உணவு சாப்பிட்டே தீரவேண்டும் என்று வற்புறுத்துகிற நோக்கம் இந்தத் திட்டத்தில் இல்லை. இந்தத் திட்டத்தினுடைய நோக்கமே ஏழை எளியவர்கள், வீட்டிலே உணவு வசதியற்றவர்கள் ஆகியோர்களுக்கு பள்ளிகளில் மதிய உணவு கொடுப்பதன் மூலம் பள்ளிகளிலிருந்து படிப்பதற்கான வசதியை ஏற்படுத்துவது என்பதுதான். இதில் அப்படிக் கட்டாயம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. மாநகராட்சிப் பள்ளிகளைப் பொறுத்தவரையிலே மதிய உணவு வழங்கப்படுகிறது. அப்படிக் கட்டாயப்படுத்தி எங்களுக்கு வேண்டாம் என்று சிலர் சொல்வார்களேயானால், அரசாங்கம் அதை ஏற்று வேறு வழிகளில் வேறு பள்ளிகளில் பயன்படுத்துவதற்கு முன்வரும்.

[1967 ஜூலை 8

THIRU K. VINAYAKAM : Sir, arising out of the—

MR. SPEAKER : All supplementaries arise out of the main question.

**திரு. எம். பூபதி :** மதிய உணவுத் திட்டத்தின் கீழ் பணியாற்றும் ஊழியர்கள், குறிப்பாக உணவு தயாரிப்பவர்கள், விநியோகம் செய்கின்ற ஊழியர்கள், லீவு நாட்களிலே சம்பளம் இல்லாத நிரந்தரமற்ற ஊழியர்களாக கருதப்படுகிறார்கள். இது பல ஆண்டுகளாக சர்க்காருக்கு எழுதப்பட்டுள்ளது. இந்த சர்க்காராவது இந்தத் தொழிலாளர்களை நிரந்தர தொழிலாளர்களாக மாற்ற ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதைப்பற்றி குறிப்புகள் இல்லை. அதுபற்றிய கோரிக்கைகள் ஆராயப்பட்டு, என்ன முடிவு எடுக்கலாமோ அதை அரசு எடுக்க முயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் விநாயகம் அவர்கள் இறுதித் துணைக் கேள்வி கேட்பார்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that two schools conducted by me, Vinayaka Vidyalaya and Saraswathi Vidyalaya, have represented to the educational authorities that they do not want to come under this mid-day meal scheme and thus waste good food-stuffs and also the authorities have compelled them to take to this scheme which is almost a failure in our State? So, will the Hon. Minister pass orders to the respective authorities to exempt these two schools?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் உறுப்பினர் கூறுகிற கருத்து ஆராயப்பட்டு, அதுபற்றி தக்க முடிவு எடுக்கப்படும். அது எந்த அடிப்படையில் கூறப்படுகிறதோ ? அவசியம் இல்லை என்று கருதப்பட்டால், அந்த தொகையை வேறு பள்ளிகளுக்கு பயன்படுத்திக்கொள்வதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம்.

### அறநிலையப் பாதுகாப்புத்துறை

மு.ப. 9-30

* 209 வினா.—திரு. கெ. இர. ஞானசம்பந்தன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) அறநிலையப் பாதுகாப்புத் துறை கமிஷனரிடம் 1965–66, 1966-67 ஆண்டுகளுக்கு தீர்வு காண வேண்டியதற்கான பிரச்சினைகளுக்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை ?

(இ) அவைகளில் பைசல் செய்யப்பட்டவை, பைசல் செய்யப்படாதவை முறையே எத்தனை ?



1967 ஜூலை 8]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| 1965-ஆம் ஆண்டில் தொடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 428 |
| 1966-ஆம் ஆண்டில் தொடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 489 |
| 1967-ம் ஆண்டு ஜனவரி 1-ந் தேதி முதல் 1967-ம் ஆண்டு மே மாதம் 15-ந் தேதி வரை உள்ள கால அளவில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 174 |
| மொத்தம் .. | 1,091 |
| 1965-ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 300 |
| 1966-ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 313 |
| 1967-ம் ஆண்டு ஜனவரி 1-ந் தேதி முதல் 1967-ம் ஆண்டு மே மாதம் 15-ந் தேதி வரை முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 46 |
| மொத்தம் .. | 659 |
| 1965-ம் ஆண்டில் முடிவு செய்யப்படாத வழக்குகளின் எண்ணிக்கை. | 128 |
| 1966-ம் ஆண்டில் முடிவு செய்யப்படாத வழக்குகளின் எண்ணிக்கை. | 176 |
| 1967-ம் ஆண்டு ஜனவரி 1-ந் தேதி முதல் 1967-ம் ஆண்டு மே மாதம் 15-ந் தேதி வரை முடிவு செய்யப்படாத வழக்குகளின் எண்ணிக்கை. | 128 |
| மொத்தம் .. | 432 |

**திரு. கே. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, இப்படி வழக்குகள் பைசல் செய்யப்படாததால், தேவஸ்தானங்களில் ஊழல்கள் ஏற்படுகின்றன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படி பைசல் செய்யப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று அறிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் குறிப்பிட்டது போல, 1,091 வழக்குகளில், 659, 15—5—1967 வரையில் பைசல் செய்யப்பட்டிருக்கின்றன. 432 வழக்குகளிலே இன்னும் தீர்ப்பு அளிக்கப்பட வேண்டும். இதிலே அறநிலைய ஆணையர் அவர்களே விசாரித்து, தீர்ப்பு அளிக்க வேண்டியிருக்கிறது. மற்றைய வழக்கு மன்றங்களைப் போல நாள் தோறும் நடக்கும் நீதிமன்றம் அல்ல. நிர்வாகத்தையும் பார்த்துக்கொண்டு, வெளியூர் பயணத்தையும் செய்துகொண்டு, அவ்வப்பொழுது நடைபெறும் வழக்குகளையும் விசாரிக்க வேண்டும். அதிலே வழக்கறிஞர்கள் வேறு ஒத்திவைப்புக் கோருவதாலும், ஆணையர் விரைவில் முடிவு எடுக்க முடியவில்லை. இந்த வழக்குகளை விரைவில் தீர்க்க என்ன

[1967 ஜூலை 8

முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்று யோசிக்கப்பட்டு வருகிறது. அதன் பேரில் தக்க முடிவு எடுக்கலாம் என்று எண்ணிக்கொண்டு இருக்கிறோம்.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, in view of the delay in the disposal of these cases, may I request the Hon. Minister to state whether there is any proposal to amend the provisions of the Madras Hindu Religious and Charitable Endowments Act abolishing the departmental appeals and revision and providing direct jurisdiction to Civil Courts in matters now covered by departmental appeals and revision?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி 432 வழக்குகள்தான் தீர்ப்பு அளிக்கப்படாமல் இருக்கின்றன. அதில் என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன, எந்தெந்த வகைகளில் விரைவில் தீர்க்கலாம் என்பதை ஆராய்ந்து கொண்டு இருக்கிறார்கள். ஆராய்ச்சியின் மீது அந்தச் சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டுமா, அல்லது வேறு முறைகளைக் கையாளவேண்டுமா என்றெல்லாம் யோசிக்கப்பட்டு, விரைவில் அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. ர. நல்லசிவன் :** சார், கமிஷனர் அவர்களே, இவற்றையெல்லாம் கண்காணிப்பது கஷ்டமாக இருக்கிறது என்றால், இதற்கென்று ஒரு தனி அதிகாரியைப் போட சர்க்கார் ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்பொழுது இல்லை. நான் முதலிலே குறிப்பிட்டபடி வழக்குகளை விரைவில் தீர்க்க என்னென்ன முறைகளை மேற்கொள்ளலாம் என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஆராய்ச்சிக்குப் பிறகு முடிவு அறிவிக்கப்படும்.

**திரு. சு. துரைசாமி :** அவனுசி திருமுருகன்பூண்டி குருக்கள் மீது புகார் சொல்லி, அந்த நிர்வாகம் நடவடிக்கை எடுத்து இரண்டு ஆண்டுகள் ஆகியும், அறநிலையப் பாதுகாப்பு ஆணையர் இன்னும் தீர்ப்புக் கொடுக்கவில்லை என்பது அமைச்சருக்குத் தெரியுமா? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி பொதுவாக இருக்கும் நிலையைப்பற்றியது. நானூற்று முப்பத்திரண்டு வழக்குகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன என்று குறிப்பிட்டேன். அவற்றில் உறுப்பினர் குறிப்பிடும் வழக்கும் ஒன்றாக இருக்கக்கூடும். ஆகவே, தனிக்கேள்வி போட்டால், சொல்லலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்த வழக்குகளில் அரிசன மக்கள் உபயோகிக்கக்கூடிய நிலையங்களைப்பற்றியதாக இருந்தால், பாடசாலைகள், மருத்துவ மனைகள்பற்றிய வழக்குகளாக



1967 ஜூலை 8]

இருந்தால், அந்த வழக்குகளுக்கு விதிவிலக்கு அளித்து, உடனடியாக பைசல் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப்பட்ட வழக்குகள் இருப்பதாக விவரம் இல்லை. எல்லா வழக்குகளையும் விரைவில் தீர்க்க முயற்சி எடுக்கப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, அறநிலைய பாதுகாப்புச் சட்டத்தை அமல் நடத்தக்கூடிய ஆணையர் சட்டப் படிப்புப் பெற்றவராக இருக்கவேண்டும் என்று செய்ய அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அறநிலையப் பாது காப்பு ஆணையாளர் சட்டப் படிப்பு உள்ளவராக இருக்க வேண்டும், பட்டம் பெற்றவராக இருக்க வேண்டும். அந்த பொறுப்பிற்கு பெரும்பாலும், டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் அல்லது சப்-ஜட்ஜ் தரம் உடையவர்கள்தான் நியமிக்கப்படுகிறார்கள்.

**திரு. க. மு. ராஜகோபால்:** தலைவர் அவர்களே, நீண்ட நாளாக, வழக்குகள் கோர்ட்டுகளுக்குப் போய் தண்டனை அடைந்திருந்தாலும், அப்படிப்பட்டவர்களையே அறநிலையங்கள் திரும்பவும் ட்ரஸ்டிகளாகப் போடுகின்றன. அதைத் தடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தண்டனை கொடுக்கப் பட்டவர் வரக்கூடாது என்று விதியிருந்து, வந்தால் அதைப்பற்றித் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். சட்டத்தை நிலைநாட்ட அரசு தக்க நடவடிக்கை எடுக்கப்படும். சட்டத்தை நிலைநாட்ட அரசு முயலும்.

## செய்திப் படம்

* 210 வினா.—**கெ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) Fairs and Festivals என்று செய்திப்படம் தயாரிப்பதற்காக தேவஸ்தானங்களிடமிருந்து எவ்வளவு பணம் வசூல் செய்யப்பட்டது?

(இ) இந்தப் பணம் படத் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்பட்டதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ரூ. 2,18,000.00

(இ) ஆம்.

**திரு. கெ. இர. ஞானசம்பந்தன்:** சார், என்னென்ன படங்கள் வெளியிலே கொண்டுவந்திருக்கிறார்கள் என்ற விவரம் சொன்னால் நல்லது.

[1967 ஜூலை 8

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு, திருக்கோயில்கள், திருவிழாக்கள் என்கிற படம் ரூ. 2 லட்சம் அளவில் எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ரூ. 8,750 பாக்கியிருக்கிறது. அந்தப் படம் 7,077 அடி நீளம் உள்ளதாக இருக்கிறது.

**திரு. ரா. ராமசந்திர துறை :** சார், கோவில்களின் பணம் கல்வி, தொழில் இவற்றிற்கு ஈடு செய்யப்படுகிறது என்பது உண்மையா? இல்லாவிட்டால், அப்படி ஈடுபடுத்தும் எண்ணம் சர்க்காருக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கோவிலில் கிடைக்கும் வருமானத்தில், மீதம் இருப்பதை கல்வித் துறைக்குச் செலவு செய்யப்படுகிறது. அந்த அடிப்படையில் பழனிக் கோவில் வருமானத்திலிருந்து கல்லூரிக்கும் மற்றதற்கும் செலவு செய்யப்படுகிறது. வேறு பல கோவில்களிலும் மிச்சம் பிடிக்கும் தொகைகளைக் கொண்டு கல்விக்கு உபயோகிக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** சார், இப்படி பிலிம் எடுப்பதன் உள் நோக்கம் என்ன என்று தெரிந்துகொள்ளலாமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தப் படம் 7,077 அடி நீளம் உள்ளது. படம் எடுக்கப்பட்டிருப்பதன் நோக்கம் அந்த இடங்களில் உள்ள கலைச் சிறப்பையும், திருவிழாக்களின் தன்மைகளையும் பெருமைகளையும் மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்பதுதான். ஆனால் இதிலிருந்து வருமானம் வரும் நிலை இல்லை. இப்படிப்பட்ட படங்களை வினியோகித்து அதன் மூலம் வருமானத்தைத் தேடலாமா என்பது யோசிக்கப்பட்டு வருகிறது.

**திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே, இதற்கு இரண்டு லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஏழாயிரம் அடி அளவில் படம் எடுக்கப்பட்டிருக்கிறது. இது எத்தனை பிரதிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஏராளமாகச் செலவழிக்கப்பட்டிருக்கிறதே, அது நியாயமான முறையில் செய்யப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தப் படம் 7,077 அடி நீளம்; அதற்கு ரூ. 2 லட்சம் வரை செலவாகியிருக்கிறது. எட்டு கோவில் கட்டடங்களிலிருந்து நிதி பெற்றிருக்கிறார்கள். ஒவ்வொரு கோவிலிலிருந்தும் ரூ. 27,250 விதத்தில் பெற்றிருக்கிறது. குறிப்பாக கோவிலின் சிறப்பை வெளிப்படுத்த என்று எடுக்கப்பட்டிருக்கிறது. வெளி நாடுகளிலிருந்து வருபவர்களை எல்லா இடங்களுக்கும் கொண்டு காண்பிப்பது சௌகரியமாக இருக்காது. ஆகவே, நம்முடைய கோவில்களில் இருக்கும் கலைச் சிறப்பை அவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் செய்யலாம் என்று செய்யப்படுகிறது.



1967 ஜூலை 8]

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** திருக்கோவில்கள், திருவிழாக்கள் பற்றி விளம்பரம் செய்வது, பிரசாரம் செய்வது இவற்றை சர்க்கார் ஏற்று நடத்துவதென்றால், சமயப்பற்றற்ற கொள்கைக்கு விரோதமானது என்று ஆட்சி கருதவில்லையா? அப்படிக் கருதினால், அதன் மீது என்ன யோசனை செய்யும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலே தெரிவித்தபடி, இதெல்லாம் அரசாங்கத்தின் பணத்திலிருந்து செய்யப்படவில்லை. கோவில்களின் வருமானத்தில் மிச்சம் ஏற்படுவதிலிருந்து செய்யப்படுகிறது.

**திரு. கே. விநாயகம் :** சபாநாயகர் அவர்களே, இந்தப் படம் எங்கே காட்டப்படுகிறது ? அமெரிக்காவிலே, ரஷ்யாவிலே காட்டப்படுகிறதா? வடநாட்டிலே காட்டப்படுகிறதா? தென்னாட்டிலே காட்டியதாகத் தெரியவில்லையே ? எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** படம் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்க விரும்பினால், ஏற்பாடு செய்யலாம். கண்காட்சி முதலியவற்றில் காட்டலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் பதினொரு வினாக்கள் இருக்கின்றன. திரு. கோதண்டராமன் அவர்கள்தான், அதிகமாக வினாக்கள் கேட்டுள்ளார்கள். அவரே இன்னொரு துணை வினா கேட்க விரும்புகிறார்களா ? சரி.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்தப் படத்திலே பணக்கார சாமி குடியிருக்கக்கூடிய கோவில்களை மட்டும்தான் எடுத்திருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அந்தப் படத்தை நானே இன்னும் பார்க்கவில்லை. என்னென்ன வந்திருக்கின்றன, எப்படியெப்படி இருக்கின்றன என்பது தெரியவில்லை. குறிப்பாகப் பெரிய கோவில்களிலே உள்ள கலைச்சிறப்பு மிக்கதும், கண்கவர்ச்சி மிகவும் அதிகமாக உள்ளதும், பொது மக்கள் கூடுகின்ற திருவிழாக்களும் எடுக்கப்பட்டிருக்கும் என்று கருதப்படுகிறது. அந்த வகையில்தான் அது எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவரவர்களே, தமிழ்நாட்டுக் கோவில்களிலே சமர சுத்த சன்மார்க்க சங்கத்துடன் சர்வ சமயமும் ஒன்று என்று அமைந்துள்ள வடலூர் சத்திய ஞான சபைக் கோவிலையும் இந்தப் படத்தில் சேர்த்து எடுக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலேயே சொல்லியபடி நானே அந்தப் படத்தைப் பார்க்கவில்லை. அது பற்றிய விவரம் இல்லை.

### சட்டக் கல்லூரி நெறியாளரின் செயலாளர்

* 211 வினா.—திரு. ஏ. எம். ராஜா : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சட்டப் படிப்பு நெறியாளரின் செயலாளர் பதவி, தொழில் நுட்ப பதவி என வகைப்படுத்தப்பட்டுள்ளதா?

(இ) சட்டப் படிப்பு நெறியாளரின் தற்போதைய செயலாளரின் பதவிக் காலத்தை நீட்டிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதா?

(உ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) ஆம்.

(உ) நிர்வாக காரணங்களுக்காக.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவரவர்களே, "செக்ரடரி டு தி டைரக்டர் ஆப் லீகல் ஸ்டடீஸை' அடிஷனல் டைரக்டர் இன் சார்ஜாக போட்டிருப்பது இந்த அரசாங்கத்துக்குத் தெரியுமா? அப்படி அடிஷனல் சார்ஜாகப் போட்டிருப்பதற்கு அடிஷனல் அலவன்ஸ் ஏதாவது கொடுக்கப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றி விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

### கிராமங்களுக்கு சிறு பஸ்கள்

* 212 வினா.—திரு. வெ. முனுசாமி :
திரு. பெ. சௌந்தரபாண்டியன் : } மதிப்பிற்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சாலை வசதியுள்ள கிராமங்களுக்கு சிறிய பஸ் விடுவதற்குரிய திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சிறிய (ஜீப்) பஸ்கள் கிராமச் சாலைகள் சிலவற்றில் முன்பே விடப்படுகின்றன. அத்தகைய பஸ்களை ஏனைய சில சாலைகளிலும் விடுவதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, கரூரிலிருந்து உப்பிடமங்கலம் வழியாக பஞ்சப்பட்டி வரையிலுள்ள கிராமங்களை இணைக்க பெருந்து வண்டிகள் துவங்க வேண்டுமென்று பல காலமாகக் கேட்கப்பட்டும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. ஆகையால், நம்முடைய புதிய அரசாங்கமாவது கவனித்து ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்பற்றிக் குறிப்பு எழுதி அனுப்பினால் கவனிக்கப்படும்.



**திரு. கொளத்தூர் கோதண்டம் :** எந்தெந்த ஊர்களில் இந்த பஸ் விடப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை தெரிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுது இந்த ஜீப் பஸ்கள் இரண்டு இடங்களில்தான் விடப்படுகின்றன. மதுரை மாவட்டம் திண்டுக்கல்லிலிருந்து சிறுமலை வரை. கோவை மாவட்டத்திலே பண்ணாரியிலிருந்து தாளவாடிக்கு திம்பம், தலைமலை வழியாக ஜீப் பஸ்கள் விடப்படுகின்றன.

**திரு செ. பாலசுப்பிரமணியன் :** கோவை மாவட்டத்தில் கிராமப் புறங்களில் அதிகப்படியான பஸ் வசதி இல்லாததால் கோவை மாவட்டத்தில் மேலும் இந்த மாதிரி பஸ்களை அதிகரிப்பதற்குச் சர்க்கார் அனுமதிதர முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதுபற்றிய கோரிக்கைகள் எதுவும் வரவில்லை. வந்தால் அதுபற்றி ஆராயப்படும்.

**திரு. வெ. முனுசாமி :** தலைவரவர்களே, இந்த வேன் பஸ்கள் எவ்வளவு மைல் நீளம் போகலாம் என்று வரையறை உண்டா? எல்லா கிராமங்களையும் தொடர்பு படுத்துகிற வகையில் இந்தத் திட்டத்தை அமலாக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பெரிய நவீன பெருந்து வண்டிகள் செல்ல முடியாத கரடுமுரடான பிரதேசங்களில் ஜீப் பஸ்கள் போகக்கூடிய அளவு செம்மைப்படுத்திய பிரதேசங்களில் மட்டும் அவை போகலாம். கிராமங்களை இணைக்கத்தக்க அளவுக்கு இருந்து, அதுபற்றிய கோரிக்கைகள் வருமானால் அவைபற்றி ஆராயப்படும் என்று முன்பே சொன்னேன்.

**திரு. கே. சகாதேவ கண்டர் :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, திருவண்ணாமலையிலிருந்து 3 மைல், 4 மைல், 5 மைல், தூரத்திலுள்ள கிராமங்களிலிருந்து ஜனங்கள் திருவண்ணாமலைக்கு வர மிக மிகக் கஷ்டப்படுகின்ற நிலை இருப்பதால், அங்கு, திருவண்ணாமலையில் ஓடுகின்ற டவுன் சர்வீஸை 10 மைல் தூரத்திற்கு விஸ்தீரணம் செய்ய அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தக் கேள்வி ஜீப் பஸ்களைப் பற்றியது.

### *Violence in villages*

* 206 Q.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to state the number of villages in which violence has broken out between Harijans and others from 1st March 1967 to 19th May 1967?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எட்டு கிராமங்கள் (ஆறு கிராமங்களில் ஹரிஜனங்களுக்கும், இந்துக்களுக்கும் மற்ற இரண்டு கிராமங்களில் ஹரிஜனங்களுக்கும், முஸ்லீம்களுக்கும்).

[1967 ஜூலை 8

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, இந்த வன்முறை நிகழ்ச்சி நடைபெற்ற கிராமங்களில் ஹரிஜனங்கள் டீக் கடைகள், ஹோட்டல்கள் போன்ற பொது இடங்களில் மற்ற அரசியல் காரணங்களுக்காக நுழையவிட மறுத்ததன் காரணமாக ஏற்பட்டுள்ளது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆம் எனில் இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் தன்னுடைய கருத்தைச் சொல்கிறார். டீக் கடைகளில் விடாததால் அந்தக் கலவரங்கள் ஏற்பட்டது என்ற தகவல் சர்க்காரிடத்தில் இல்லை.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இந்தக் கலவரங்களுக்குக் காரணம் அரசியல் குரோதமா? அல்லது ஜாதி வேறுபாடா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்தக் கலவரங்களுக்குக் காரணம் மனிதனுடைய கெட்ட சுபாவங்கள்.

*Fire accident at Madras*

*213 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that a fire broke out in Suryanarayana Chetty Street, Royapuram, Madras, on 1st March 1967;

(b) if so, the extent of damage suffered by the hut dwellers in that area; and

(c) the kind of help that was rendered to the affected people?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) ஆம்.

(இ) 210 குடிசைகள் எரிந்து விட்டன. சுமார் 350 குடும்பங்கள் வீடிழக்க நேரிட்டது. சுமார் 50,000 ரூபாய் பெறுமான முள்ள சொத்துக்கள் சேதமடைந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(உ) இந்த விபத்துக்குள்ளான மக்களுக்கு உடனடியாக மாநகராட்சிப் பள்ளிகளில் இடவசதியளிக்கப்பட்டது. தவிர அவர்களுக்கு உணவளிப்பதற்கான ஏற்பாடுகளும் மாநகராட்சி அதிகாரிகளால் செய்யப்பட்டன. அவர்களுடைய குடிசைகளை மறுபடியும் கட்டிக் கொள்ளவும் துணிகள் வாங்கிக் கொள்ளவும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வருவாய்த்துறை ரூபாய் 40 வீதம் வழங்கியது. ஒரு குடும்பத்திற்கு ஒரு புடவை, ஒரு வேட்டி, ஒரு பனியன், ஒரு துண்டு வீதம் 218 குடும்பங்களுக்கு மீனவத் துறையினால் துணி வழங்கப்பட்டது. நைலான் நூல்களும், பருத்தி நூல்களும் வாங்குவதற்காக மீனவர்களுக்கு ரூபாய் 30,000 (உதவித் தொகை ரூபாய் 15,000 கடனுதவி ரூபாய் 15,000) ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.



1967 ஜூலை 8]

THIRU K. VINAYAKAM : Sir, is it possible at this distance of time for the Hon. Chief Minister to say, what exactly was the cause of this outbreak of fire and was it a mere accident or a sabotage?

THE HON. THIRU C. N. ANNADURAI : The cause of the fire is reported to be due to a spark of a naked lamp from the hut of Thiru Periaswami.

DR. H. V. HANDE : Sir, in view of the fact that such fires have become a common feature, will this Government once for all come forward with a concrete proposal to see that the number of slums that are spread over the City are properly reorganised and asbestos sheets are put up so that their living conditions may be much safer than they are at present?

THE HON. THIRU C. N. ANNADURAI : That was exactly what the Committee set up for this purpose discussed yesterday and they have come to a tentative decision, about which I may inform the House in due course.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இப்படி வருஷா வருஷம் அடிக்கடி தீப்பிடிப்பதும், சர்க்கார் ஒரு பக்கத்திலே அந்த நிதி இந்த நிதி என்று வசூல் செய்யப்போவதும், இதேபோல உதவிக்கு போகக்கூடிய நிலை காரணமாக மக்களுக்கு வெறுப்பு ஏற்படும் அல்லவா? ஆகவே, குடிசைகளுக்குப் பதில் நிரந்தரமான, தீ புகாத அளவுக்கு ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : டாக்டர் ஹாண்டே அவர்கள் ஆங்கிலத்தில் கேட்டதன் தமிழ் மொழி பெயர்ப்பு இது.

THIRU K. VINAYAKAM : As the Chief Minister is a very good student of English History, he may remember that England having undergone the great fire and after the great fire was over a new London was constructed in its place. What are the schemes that are in the offing now to rebuild these slums and rehabilitate the slum-dwellers without giving any scope in the future for such kind of fire outbreaks?

THE HON. THIRU C. N. ANNADURAI : I would first of all, with my hon. Friend's permission, correct his knowledge of English History. It was not England fire but London fire.

THIRU K. VINAYAKAM : I said, great fire of London City.

THE HON. THIRU C. N. ANNADURAI : Such lapses are common and we need not be worried about them.

It is said by later historians that it was later utilised by the London County to rebuild London. My hon. Friend wants to know what the proposals were that were made at yesterday's committee meeting. I am amazed that when the Leader of the Opposition was present in the committee meeting, he has not instructed him and given him information about that. I do not know whether the contact between these two individuals is so

[1967 ஜூலை 8

scarce that they do not talk about these things. Anyway, at the committee meeting which was attended by leaders of all parties, we have come to a tentative decision with the objective that has been placed here by hon. Members. We should see that such occurrences do not take place as an annual or periodical affair, we should see to it that the slums are made safer, sounder and they are able to withstand all sorts of accidents.

### *Sri Ranganathaswami temple*

*214 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether the Government proposes to renovate the Sri Ranganathaswami temple at Srirangam; and

(b) if so, when and at what cost?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

THIRU K. VINAYAKAM: Is it a fact that the United Nations Fund has offered to give a very good slice of contribution for the renovation of the Srirangam temple and is it a fact that they are already at work on this scheme?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, திருவரங்கம் கோவில் திருப்பணியை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்று கூறினேன். அதற்கென்று தனித் திருப்பணிக் குழு சர். ஏ. ராமசாமி முதலியார் அவர்களுடைய தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கோவிலினுடைய சிற்பக் கலை, அதனுடைய பல்வேறு கலைச் சிறப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இதற்கு உதவி செய்யவேண்டுமென்று யுனெஸ்கோவைக் கேட்டுக்கொண்டார்கள். அதற்கிணங்க யுனெஸ்கோ பன்னிரண்டாயிரம் டாலர் அதற்கு நிதி வழங்க இசைவு தந்து, அதைச் சேர்ந்த ஒரு அதிகாரி பழம்பொருள் ஆராய்ச்சி வல்லுநர் வந்து பார்த்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** கோவில் புனர்நிர்மாணத்தில், வைஷ்ணவ கோவில்களுக்குப் பணங்கள் ஜாஸ்தி வசூலாகிவிடும். சிவன் கோவில்களுக்கு அவ்வளவாக வசூல் ஆவதில்லை. ஆகவே, சிவன் கோவில்களுக்கு விசேஷமாக 'ப்ரையாரிடி' கொடுத்து, அரசாங்கத்திலிருந்தும் கொஞ்சம் தொகை ஒதுக்கப்படுமா? (சிரிப்பு). Between Vishnu and Siva, Siva should be treated more sympathetically by the Government. Will the Government do it?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, யுனெஸ்கோ ஸ்தாபனம் திருவரங்கம் கோவிலுக்குக் கொடுப்பது கூட, சிற்பக் கலை சம்பந்தமான, ஆர்க்கியாலஜி சம்பந்தமான பணிக்குத்தான் அவர்கள் தருகிறார்களே தவிர, அதிலே இருக்கிற



1967 ஜூலை 8]

சமயச்சார்பான வேறு பல பணிகளுக்கு வேண்டிய தொகையைத் திரட்டும் பணியை இந்தக் குழுவினர்தான் மேற்கொண்டிருக்கிறார்கள். வைஷ்ணவக் கோவில்கள், சிவன் கோவில்கள் இருக்கும் நிலைமைகளைக் கனம் உறுப்பினர் அவர்களே அறிவார்கள். 108 திருப்பதிகள் என்றும் 1,008 சிவாலயங்கள் என்றும் சொல்லுவார்கள். சிவாலயங்களினுடைய எண்ணிக்கைதான் அதிகமாக இருக்கிறது. அந்தக் கோவில்களினுடைய திருப்பணிகளுக்கான முயற்சியை கனம் உறுப்பினர் மேற்கொள்ளுவார்களானால், அதை அந்தக் கோவில்களின் தருமகர்த்தாக்களும் மேற்கொள்ளக் கூடும்.

**திரு. பி. வேலுசாமி:** கோவில்களிலே பணக்கார சாமி, ஏழை சாமி என்கிற வித்தியாசம் இருக்கிறது. பணக்கார சாமிக்குள்ள வருமானத்தை எடுத்து ஏழை சாமிக்குக் கொடுத்து உதவ அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? அதிலாவது சமதருமம் நிலவுமா? (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்பொழுது ஓரளவிற்கு அப்படித் தந்துகொண்டும் வருகிறது. திருப்பணியைப் பொறுத்த வரையில், பெரிய கோவில்களுக்குள்ள வரும்படியில் ஒரு பகுதி சில சிறிய கோவில்களின் திருப்பணிக்குச் செலவழிக்கப்பட்டு வருகிறது. சில பொது முயற்சிகளின் மூலமும் பல கோவில்களின் திருப்பணிகளுக்கு நிதி திரட்டப்படுகிறது.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** கோவில்களை இப்படித் திருத்தி அமைக்கும்போது, முன்பிருந்த புராதனச் சிலைகள் அகற்றப்பட்டுப் பல இலட்ச ரூபாய்களுக்கு விற்கப்படுவதாகச் செய்திகள் அடிபடுகின்றனவே, அது உண்மையா? அப்படியானால், இனி மேலாவது கோவில்களில் உள்ள புராதனச் சிலைகளெல்லாம் பாதுகாக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** புராதனச் சிலைகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. சில பல இடங்களில் சிலைகள் களவாடப்பட்டு விற்கப்பட்டதைக் குறித்து வழக்குகள் தொடரப்பட்டு, அதுசம்பந்தப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** யுனெஸ்கோவின் சார்பாக வெளிநாட்டிலிருந்து ஒரு கட்டடக்கலை நிபுணர் அனுப்பிவைக்கப்பட்டு, அவர் ஏதோ அந்தக் குழுவிற்குச் சில ஆலோசனைகளைத் தெரிவித்ததாகப் பத்திரிகையில் நாங்கள் படித்தோம். அவர் இந்தியக் கலைச் சிற்பங்களில் தேர்ச்சி பெற்றவராக இருக்க முடியாது என்று கருதப்படுகிறபடியால், அவருடைய ஆலோசனைகளை மேற்கொண்டு, மேற்படி கோவில் திருப்பணியைச் செய்வது என்பது சரியானதாக இருக்காது என்று அரசாங்கம் கருதி, அந்தக் கட்டடக் குழுவிற்கு ஏதாவது ஆலோசனை சொல்லுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** திருவரங்கம் கோவிலைப் பற்றி, அதற்கு உதவி செய்யவேண்டும் என்று அந்தக் கோவில் திருப்பணிக் குழுவினர் யுனெஸ்கோவைக் கேட்டுக் கொண்டார்கள். யுனெஸ்கோ ஸ்தாபனம் அதற்குப் பன்னிரண்டாயிரம் டாலர் உதவியளிக்க முன்வந்திருக்கிறது. ஆர்க்கியாலஜி, சிற்பக்கலை, மற்றவைகளைப்பற்றி ஆராய்வதற்கு யுனெஸ்கோவைச் சார்ந்த நிபுணர் அதுபற்றி ஆராய வந்தாரே தவிர, நமக்கு யோசனை சொல்லுவதற்கோ மற்றதற்கோ அல்ல. அது உள்ளபடியே சிற்பக்கலை நிறைந்த கோவில்தானு, அந்த சிற்பக்கலைக்கு உதவி செய்ய வேண்டியது யுனெஸ்கோவின் இன்றியமையாத தன்மைதானு என்பதையெல்லாம் யுனெஸ்கோவின் சார்பில் ஆராய்ந்து, யுனெஸ்கோவிற்கு யோசனை சொல்ல அந்த அதிகாரி வந்தாரே தவிர, அந்தக் கோவிலின் சிற்பக் கலை எப்படி இருக்க வேண்டும் என்று நமக்கு யோசனை சொல்ல அந்த அதிகாரி வரவில்லை.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** தலைவர் அவர்களே, பெரிய கோவில்களிலெல்லாம் மடைப்பள்ளி என்ற பெயரில் சமையல் அறை இருக்கிறது. சமையல் அறை இருக்கும் கோவில்களில் 'லெட்ரின்' கட்டாததன் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இதெல்லாம் சமயச் சார்புடைய தலைவர்கள் பதிலுரைக்க வேண்டிய கேள்வி.

### திரு. கள்ளழகர் தேவஸ்தனம்.

*215. வினு.—**திரு. கரு. சீமைச்சாமி:** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) அழகர்கோவில், ஸ்ரீ கள்ளழகர் தேவஸ்தான தர்ம கர்த்தாக்குழு தலைவர் தேர்தல் 29—3—1967-ல் நடக்க இருந்ததை மதுரை அறநிலைய டெபுடி கமிஷனர் அவர்கள் நிறுத்தி வைத்திருப்பது உண்மையா?

(இ) ஆம் என்றால் அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) அழகர் கோவில், கள்ளழகர் தேவஸ்தான அறங்காவலர் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக, அறங்காவலர் மன்றம் திட்டமிட்டபடி 29—3—1967 அன்று கூடியது. மேற்படி கூட்டத்தின்போது, திரு. பி. அருணசலம் அவர்கள் தலைவராக மறுமுறையும் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனினும், மேற்சொன்ன கூட்டம் விதிமுறைகளுக்கிணங்க நடத்தப்படவில்லை எனக்குறிப்பிட்டு, மதுரையிலுள்ள இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாகத்துறை துணைக் கமிஷனரிடமிருந்து அறிக்கை வந்ததால், திரு. பி. அருணசலம் அவர்களைத் தேர்ந்தெடுத்த தீர்மானம் செயலுக்கு வருவதைச் சென்னையிலுள்ள இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாகத்துறை



கமிஷனர் நிறுத்திவைத்துள்ளார். இது இப்போது சென்னையிலுள்ள இந்து சமய அறக்கட்டளைகள் கமிஷனரின் முன் முடிவு பெருமலிருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அழகர்கோயில், கள்ளழகர் தேவஸ்தான அறங்காவலர் தலைவர் தேர்தல் முறைப்படி நடக்கவில்லை என்று சொன்னுர்கள். அதனுடைய விவரம் அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா? இதற்கான மறுதேர்தல் எப்பொழுது நடைபெறும் என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, 29—3—1967-அன்று தருமகர்த்தாவைத் தேர்ந்தெடுப்பதற்காக அறங்காவலர் மன்றம் கூட்டப்பட்டது. மற்ற தருமகர்த்தாக்களுக்கு ஒரு வார காலத்திற்கு முன்பாகவே கூட்டம் பற்றி அறிவிப்பு செய்யவேண்டும் என்பது முறை. அதன்படி யாருக்குமே அறிவிப்பு செய்யாமல் கூட்டம் நடைபெற்றிருக்கிறது. தர்மகர்த்தாக் குழுவினைச் சேர்ந்த ஒருவர், தங்களுக்கு அறிவிக்கப்படவில்லை, நோடீஸ் கொடுக்கப்படவில்லை, பத்திரிகையிலிருந்து முடிவைத் தெரிந்து கொள்ளவேண்டியிருந்தது என்று விண்ணப்பித்துக்கொண்டார். அதுபற்றி ஆராயப்பட்டு, முறைப்படி தேர்தல் நடக்கவில்லை என்ற காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்டது.

### Teachers of Valliyoor Panchayat Union

*216 Q.—THIRU M. S. SIVASAMI: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state:

(a) whether it is a fact that the teachers of Valliyoor Panchayat Union have not been paid their salary from 21st January to 20th February 1967; and

(b) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம.

(இ) 31—3—1967 தேதியோடு முடிவடையும் கால அளவிற் மு. ப. 10-00
குரிய சிறப்பு அகவிலைப்படி மானியம் சாதாரணமாய் 1967 மே திங்களில்தான் வழங்கப்படும். ஆனல், தனிப்பட்ட முறையில் முன் கூட்டியே இதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு. ஆசிரியர்களின் சம்பளங்களும் இப்போது கொடுக்கப்பட்டுவிட்டன.

**திரு. மு. ச. சிவசாமி:** மாதம் முடிந்தவுடன், ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் சம்பளம் பட்டுவாடா செய்யாத எல்லா பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அரசாங்கம் கடுமையான உத்திரவிடுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** ஏறத்தாழ முதல் தேதியன்றே அந்தச் சம்பளங்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று உத்திரவை ஏற்கெனவே அரசு அனுப்பியிருக்

கிறது. அப்படி ஏதாவது பஞ்சாயத்து யூனியன் 1-ம் தேதியன்றே சம்பளம் பட்டுவாடா செய்ய முயற்சி எடுத்துக்கொள்ளவில்லையென்றால், அதுபற்றி தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, நிதி பற்றாக்குறையாக உள்ள பஞ்சாயத்து யூனியன்களுக்கு முன் கூட்டியே கல்வி மானியத்தை அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** வள்ளியூர் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் அந்த வகையில் சம்பளம் அளிக்கப் பட்டது. எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் அளிக்க மேற்கொண்டு நிலைமை ஆராயப்பட்டு தக்க முடிவை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்.

### குடியாத்தம்-பரதராமி சாலை

***217. வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குடியாத்தத்திலிருந்து பரதராமிக்குப் போகும் ரோட்டில் ஐந்து இடங்களில் காட்டாறுகள் உள்ளதால் மேற்படி இடங்களில் பாலங்கள் கட்டும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவ்விதமான செயற் குறிப்பு ஒன்றும் இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்த ஐந்து இடங்களும் மலைப்பிரதேசத்தில் இருப்பதால் மழைக்காலத்தில் தண்ணீர் போகக் கூடிய ஓடைகள் இருக்கின்றன. ஆகவே, வருடாவருடம் ஆடு, மாடுகளும், வண்டிகளும் இந்த வெள்ளத்தினால் அடித்துக் கொண்டு போகப்படுகின்றன என்பது அமைச்சர்களுக்குத் தெரியுமா? குறிப்பாக, ஒரு மாதத்திற்கு முன்னாலே ஒரு லாரியே கவிழ்ந்து போய்விட்டது. ஆகவே, தயவு செய்து சிறிய பாலங்களைக் கட்ட அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதுபற்றி பலமுறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறதென்றாலும், நிதிநிலை வசதி குறித்து நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்க முடியாத நிலையில் இருக்கிறது. ஐந்து அல்லது ஏழு இடங்களில் பாலங்கள் கட்டப்படவேண்டும். அதற்காக 3 லட்சம் ரூபாயிலிருந்து 4 லட்சம் ரூபாய் வரை செலவாகும் என்று கணக்கிடப்பட்டு, திட்டத்தில் சேர்ப்பதா, அல்லது தனியாக எடுத்துக்கொள்ளப் படுவதா என்பதை யோசிக்கும் நிலையில் தற்போது இல்லை.



### அரசாங்க மருத்துவமனை, சீர்காழி

***218. வினா.—திரு. கே. பி. எஸ். மணி :** மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சீர்காழி தாலுக்காவின் தலைநகரில் உள்ள சர்க்கார் மருத்துவ மனையை விரிவுபடுத்தும் திட்டம் கடந்த 10 ஆண்டுகளாக பரிசீலனை செய்து முடிவாகி இருப்பதை நடப்பு ஆண்டில் பூர்வாங்க வேலை துவக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** சீர்காழி, அரசாங்க மருத்துவ மனையை விரிவுபடுத்துவதற்குத் தேவையான நிலத்தை கைவசப்படுத்துவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

### குமராட்சி பஞ்சாயத்து யூனியனுக்குக் கட்டடம்

***219 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்காவிற்கு, குமராட்சி யூனியன் ஆபீசுக்கென புதிய கட்டடம் ஒன்று கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும் ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) புதிய கட்டடம் கட்ட தகுந்த இடம் கிடைக்குமா என பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** குமராட்சி யூனியன் ஆபீசுக்கென சிதம்பரம் டவுன் ஓரம் ஒரு கட்டடம் கட்ட முயற்சி இருந்ததே, அதன் முடிவு என்ன ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** குமராட்சி யூனியன் ஆபீஸ் கட்டடம் கட்ட புறம்போக்கு நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்த இடம் வெள்ளக்காலத்தில் சேதம் அடையக்கூடிய பகுதியாக இருந்ததால் அந்தத்திட்டம் கைவிடப்பட்டது. இப்போதிருக்கும் கட்டடத்தைக் கட்டியவர் அந்தக் கட்டடத்தை விலைக்குக் கொடுக்க விருப்பமாக. ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஒரு தீர்மானம் போடப்பட்டு, வந்திருக்கிறது. அந்த இடம் தகுந்த இடமா என்று ஆராயப்பட்டு பின்னர் முடிவெடுக்கப்படும்.

[1967 ஜூலை 8

அண்ணாமலை நகருக்கருகில் உப்பனாற்றின்மீது பாலம்

* 220. வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா?

(அ) சிதம்பரம் தாலூக்கா, அண்ணாமலை நகர், சந்திரமலையிலிருந்து பேட்டை வரகூர் நடுவில் இருக்கும் உப்பனாற்றின் மீது ஒரு பாலம் கட்டும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடம் இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : அண்ணாமலை நகருக்கு பக்கத்திலுள்ள பேட்டை வரகூரிலிருந்துதான் எல்லாப் பொருள்களும் வர வேண்டும். நடுவில் இருக்கும் உப்பனாற்றின் குறுக்கே வருவதாய் இருந்தால் பாலம் இல்லை. தண்ணீரைச் சுற்றிக் கொண்டு வருவதாக இருந்தால் 8 மைல் தூரம் வரவேண்டும். ஆகவே, இந்தப்பாலத்தைக் கட்டிக்கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அந்தந்த மாவட்ட வளர்ச்சி மன்றங்களுடைய சிபாரிசின் அடிப்படையில்தான் வேலைகள் நடைபெற்று வருகின்றன. அது, மூன்றாவது திட்டக் காலத்தில் மேற்படி வரிசைக்கிரமப்படி எடுத்து முடித்த பிறகு, நான்காவது திட்டத்தில் மேற்கொள்ளும் 212 இடங்கள் இருக்கின்றன, அவற்றில் வரிசைக்கிரமப்படி வருகிற பாதை கவனிக்கப்படும். அப்படியின்றி, தனியாக எடுத்துச் செய்ய வேண்டுமென்று சொல்லும் நிலையில், விசேஷ காரணம் எதுவும் சுட்டிக்காட்டப்படவில்லை. ஆகவே, விசேஷ காரணம் சுட்டிக்காட்டி, வருமானால் அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இதுபற்றி ஏதாவது சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்று அரசாங்கத்திற்குத் தெரிந்தால் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படிப்பட்ட சிபாரிசுகள் எதுவும் வந்ததாகத் தெரியவில்லை.

மாம்பாக்கம்-திருப்போரூர் சாலை

* 221 வினா.—திரு முனு ஆதி : மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதியைச் சேர்ந்த, மாம்பாக்கத்திலிருந்து காயாறு, வெண்பெடு, இன்னளூர் வழியாக திருப்போரூர் வரை பாதை அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?



1967 ஜூலை 8]

(இ) இத்திட்டத்தினை பெருவழித்துறை ( )யினரிடம் ஒப்படைக்கும் உத்தேசமுண்டா ?

(உ) இத்திட்டத்திற்கு செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஒன்பது மைல் நீளமுள்ள மாம்பாக்கம்-திருப்போரூர் சாலையானது நிதிவசதிக்கேற்ப கிராமப் பணித் திட்டத்தின் கீழ் திருப்போரூர் ஊராட்சி ஒன்றியத்தினால் படிப்படியாக அமைக்கப்பட்டு வருகிறது. இது வேறு ஒரு திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை.

(இ) இப்படி ஒரு யோசனை கூறப்பட்டுள்ளது.

(உ) இதற்கு ரூபாய் 4 லட்சம் வரை செலவாகும். ஆனால் இதற்காக மதிப்பீடு எதுவும் தயாரிக்கப்படவில்லை.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, இந்த காயாறு, வெண்பெடு கிராமங்களில் 320 வீடுகள் இருக்கின்றன. அந்தக் கிராமங்கள் எல்லாம் அந்தமான் தீவுபோல் போக்குவரத்து இல்லாமல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தற்போது திருப்போரூர் மூலமாக பாதைபோட எர்த் ஒர்க் செய்திருக்கிறார்கள். அதற்கு ஸ்பெஷல் கிராண்ட் கொடுத்து, பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் மூலமாக துரிதமாகச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இந்தத் திட்டம் ஊராட்சி ஒன்றியப்புத் திட்டத்தில் செலவிடப்பட்டு செய்யப்படுகிறது. இதை பெருவழித் துறைக்கு மாற்ற வேண்டுமென்று, ஊராட்சி ஒன்றிப்பு, யூனியனிடமிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. இப்போதிருக்கக் கூடிய நிலையில் உடனடியாக மேற்கொள்ள அரசாங்கம் தக்க நிலையில் இல்லை.

திரு. கே. விநயகம் : காயாறு, வெண்பெடு, இன்னளூர் கிராமங்களில் தவிர சுற்றிலும் 30 கிராமங்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் காட்டுப் பகுதிகள். இதுவரையில் அவை புறக்கணிக்கப்பட்டிருந்தன. அதற்கு 4 லட்சம் செலவாகும் என்றாலும்கூட உடனடியாக ஹைவேஸ் டிபார்ட்மெண்டுக்குக் கொடுத்துச் செய்து தர சர்க்காருக்குக் கருணை உண்டா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : சர்க்காருக்கு கருணை நிச்சயமாக இருக்கிறது. அந்தந்த மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் செய்கிற சிபாரிசின் அடிப்படையிலேதான் வேலைகள் செய்யப்படுகின்றன. இதை உடனடியாகச் செய்துதர வேண்டுமென தனிப்பட்ட வேண்டுகோள் எதுவும் வரவில்லை. அப்படி வருமானால் அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[1967 ஜூலை 8

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால்,
அவ்வுரை சரிபார்க்கப்படவில்லை என்பதைக் குறிக்கும்.]

## 2. முதலமைச்சரின் அறிக்கை.

## சென்னை நகரில் ஏற்பட்ட தீ விபத்துக்களும், அவற்றையொட்டிய பிரச்சினைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 82-வது விதிக்கிணங்க, விளக்க
உரை ஒன்றை, இப்பேரவைக்குத் தற்போது மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. சி. என் அண்ணாதுரை:** சட்டமன்றத்
தலைவர் அவர்களே, தொடர்ந்து சென்னை நகரத்திலே ஏற்பட்டுக்
கொண்டு வருகின்ற தீ விபத்துக்கள் செயலைப்பற்றியும், அவற்றை
யொட்டி எழுந்துள்ள பிரச்சினைகளைப் பற்றியும் பேரவைக்குத்
தகவல்களைத் தர விரும்புகின்றேன். தீ விபத்துக்கள் தற்போது
பெருமளவுக்குக் கட்டுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. முதல்
இரண்டு நாட்களில் தீ விபத்துக்கள் ஏற்பட்டவுடன், மக்கள்
மனத்திலே எழுந்த பீதி உண்மையிலேயே அவர்களின் அன்றாட
வாழ்க்கையை நிலைகுலையச் செய்துவிட்டது. அவையெல்லாம்
குறையத்தக்க விதத்தில் தீ விபத்துக்களைத் தடுப்பதற்கான நட
வடிக்கையும், விபத்துக்களின் அளவைக் குறைப்பதற்கும் இந்தச்
சர்க்கார் மேற்கொண்டிருக்கிற முறைகளும் பலன் அளிக்கத்
தொடங்கியிருக்கின்றன. 200 குடிசைகள், 100 குடிசைகள், 50
குடிசைகள் கருகிப் போயின என்ற அளவில் இருந்து குறைந்து,
இப்போது எங்காவது ஒரு குடிசை தீப்பற்றினால் உடனடியாக
அது கண்டுபிடிக்கப்பட்டு, அந்தத் தீப ரவாமல் இருப்பதற்கான
தடுப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமான முறையிலே நடைபெற்றுக்
கொண்டு வருகின்றன. இரண்டு மூன்று நாட்களாக இங்குமங்கு
மாக சில குடிசைகளில் தீப்பிடித்ததும் உடனடியாக அது அணைக்
கப்பட்டு பெரிய விபத்து எதுவும் நேரிடாதபடி தடுப்புகள் மேற்
கொள்ளப் பட்டிருக்கின்றன. முற்றிலும் தீ விபத்துக்கள் நின்று
விட்டன என்று சொல்லவில்லை. மக்கள் மனத்திலே ஏற்பட்டுள்ள
பீதி அடியோடு போய்விட்டதாகச் சொல்லவில்லை. பொதுமக்கள்,
குறிப்பாக குடிசைவாழ் மக்கள் இந்தக் கோரமான நிலைக்கு—
இந்தக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்களே என்று யாரும்
கண்கலங்காமல் இருக்க முடியாது. அவர்களுடைய குடிசைகள்
இன்றையதினம் தீக்கு இரையாகாமல் இருந்தாலும் கூட அதில்
படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிற நேரத்தில் தீ விபத்து ஏற்பட்டு
விட்டால் என்ன செய்வது என்ற பீதியின் காரணமாக, அச்சத்
தின் காரணமாக அவர்களில் பெரும்பாலோர் வீதி ஓரத்திலே
தங்கள் வாழ்வை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சொத்துக்
களை எல்லாம் பாதை ஓரத்திலே வைத்துக்கொண்டு தங்கள்
குடிசைக்கு என்ன ஆபத்து வருமோ என்று பார்த்துக்கொண்
டிருக்கிற காட்சி உள்ளபடியே நெஞ்சுருக்கக் கூடியதாக இருக்
கிறது. இந்த நிலைமையை நீடிக்க வொட்டாமல் தடுப்பதற்கு
போலீஸ்காரர்களும், ஹோம்கார்ட்களும் இந்த ஏழை மக்கள்



1967 ஜூலை 8] [திரு. சி. என். அண்ணாதுரை]

வாழ்கிற குடிசைப் பகுதியில் பெரும் அளவு காவல் புரியவும்
சந்தேகத்துக்குரிய நபர்களைப் பிடிப்பதற்கான நடவடிக்கை
களிலும் வெகு தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். உயர்தர
போலீஸ் அதிகாரிகள் இந்த வட்டாரங்களில் காவல் புரிந்து
கொண்டு வருவதோடு பொதுமக்களுடைய மனதில் பீதி ஏற்படாத
வாறு தடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

பொதுமக்களிடத்தில் தொண்டாற்றிப் பழக்கப்பட்ட தொண்
டர்களும் நல்ல முறையில் அவர்களுக்கு ஆறுதல்
அளித்து வருகிறார்கள். வீடிழந்து நிற்பவர்களுக்கு எல்லாம்
மாநகராட்சி மன்றப் பள்ளிக்கூடங்களை எல்லாம் திறந்துவிட்டு
அவர்களை எல்லாம் அங்கே தற்காலிகமாகக் குடியேற்றி வருகிறார்
கள். இதன் காரணமாக பள்ளிக்கூடங்களுக்கு எல்லாம் இரண்டு
மூன்று நாட்கள் விடுமுறை விடப்பட்டிருக்கின்றது. இதுவரை
ஆறு, ஏழு நாட்களாக மாநகராட்சி மன்றம் வீடு இழந்து தெரு
வில் நிற்பவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கும்
பொறுப்பை ஏற்றுக் கொண்டு மதிய உணவுத் திட்டத்தின் கீழ்
அமைக்கப்பட்டிருக்கிற சமையல் கூடங்களில் இருந்து உணவைத்
தயாரித்துக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதுமட்டுமல்
லாமல் பொதுமக்கள் தாங்களாகவே சில உதவிகளைச் செய்து
கொண்டு வருகிறார்கள். மற்றும் பொதுநல ஸ்தாபனங்களும்
நல்ல உதவிசெய்து கொண்டு வருகிறார்கள். செஞ்சிலுவைச்
சங்கத்தாரும் தங்களாலான உதவிகளைச் செய்துகொண்டு வரு
கிறார்கள். இப்படி துன்பம் அடைந்துள்ள மக்களின் துயரைத்
துடைப்பதற்கான காரியங்கள் தொடர்ந்து நடைபெற்று வரு
கின்றன. அந்தக் காரியங்களை விரைவுபடுத்தவும், இனி இது
போன்ற தீ விபத்துக்களுக்கு அவர்கள் இரையாகாதவாறு தடுக்க
நிரந்தரமான ஏற்பாடுகளைச் செய்யவும் இந்தச் சர்க்கார் சில
நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது. ஆகையால் இந்தச்
சர்க்கார் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றத்
தவறிவிட்டது என்றோ, பாதுகாப்பு அளிக்கத் தவறிவிட்டது
என்றோ, உடனடியாக நிவாரணம் அளிப்பதில் தவறிவிட்டது
என்றோ யாராவது கூறுவார்களேயானால் அது அவர்களுக்கு
எங்கள் பேரில் இருக்கிற எண்ணத்தின் தொடர்ச்சியாகத்தான்
இருக்கும் என்று நான் கருதுவேனே தவிர வேறில்லை. நிலைமை
களைச் சீர்படுத்துவதற்கு செய்யப்படவேண்டிய காரியங்கள் செய்
யப்பட்டு வருகின்றன. இதற்கு முன்னால் வரையில் இயற்கைக்
கோளாறினால், தீ விபத்துக்களினால், வீடிழந்தவர்களுக்கு, கொடுக்
கப்பட்டு வந்த தொகையை இப்போது கணிசமான அளவில்
உயர்த்தித்தருவது என்றும் சர்க்கார் முடிவு எடுத்திருக்கிறது-
அதன்படி வீடு, துணிமணிகளை இழந்தவர்களுக்கு 80 ரூபாய்
உயர்த்தித்தருவது என்றும் சர்க்கார் முடிவு எடுத்திருக்கிறது.
முன்னாலே 40 ரூபாய், 10 ரூபாயாக இருந்தது. இதுமட்டுமல்ல,
மாநகராட்சி மன்றம் வீடு ஒன்றுக்கு 25 ரூபாய் என்பதாகப் பணம்
தருகிறார்கள். இவைகளால் மட்டும் இந்தக் காரியம் நடந்துவிடாது
என்ற எண்ணத்தால் இவர்களுக்கு தகுந்த நிவாரணம் அளிக்க

எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து ஒரு தனிக் குழுவையே இந்த அரசு அமைத்திருக்கிறது. இந்தக் குழுவுக்கு என்னையே தலைமை தாங்கி நடத்தும்படியாக எல்லாக் கட்சித் தலைவர்களுமே பெருந்தன்மையோடு கேட்டிருக்கிறார்கள். இந்தத் தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் அளிப்பதோடு நிரந்தரமான பரிகாரம் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதற்கான வழிமுறைகளைப் பற்றி குழுவில் பேசப்பட்டது. அதைப்பற்றி இரண்டொரு நிமிடங்களில் நான் உங்களிடத்தில் சொல்ல இருக்கிறேன்.

அதற்கு முன்னால் இந்தத் தீ விபத்துக்கள் அடுத்தடுத்து ஏற்பட்டு வருவதன் காரணமாக பல்வேறு சந்தேகங்களைக் கொண்டமைகளால, பீதி அடைந்துள்ள மக்களில் சிலர் தடிகளுடனும், ஆயுதங்களுடனும் குடிசைப் பகுதிகளைக் காவல் புரிவதாகச் சொல்லிக் கொண்டு விரும்பத்தகாத, கண்டிக்கத்தக்க, வெறுக்கத்தக்க சில செயல்களை மேற்கொண்டிருக்கிறார்கள். அதன் விளைவாக நேற்றைய தினம் மேல் அவை முன்னாள் உறுப்பினர் எனது நண்பர் திரு. டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தாக்கப்பட்டிருப்பது குறித்து பத்திரிகையில் செய்தியைப் பார்த்தபொழுது நான் மிகவும் வருத்தப்பட்டேன். உயர்தர போலீஸ் அதிகாரிகளிடத்தில் யார் இத்தகைய செயலில் ஈடுபட்டிருந்தாலும், அவர்கள் அதற்கு என்ன நோக்கத்தைச் சொன்னாலும், தாங்கள் காவல் புரிந்து கொண்டிருந்தபோது, வந்தவர்கள் பேரில் சந்தேகம் ஏற்பட்டதன் காரணமாக தாக்கினோம் என்பதாக எப்படிப்பட்ட சமாதானத்தைச் சொன்னாலும் அந்தச் சமாதானங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதைத் தெரிவித்து, யார் யார் இதில் சம்பந்தப்பட்டவர்களோ அவர்கள் பேரில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்டவர்கள் சிலர் கைது செய்யப்பட்டிருக்கலாம். ஜாமீனிலும் வெளி வந்திருக்கலாம். இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுகிறவர்களை கைது செய்யுங்கள் என்பதாக போலீஸ் அதிகாரிகள் எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள். இனி இப்படிப்பட்ட நடவடிக்கை ஏற்படாதபடி பொதுமக்களும், பொதுமக்களிடத்தில் தொண்டாற்றுவதாகச் சொல்லிக்கொண்டிருப்பவர்களும், உண்மையிலேயே தொண்டாற்றுகிறவர்களும், போலீஸ் அதிகாரிகள் இருக்கிறார்கள் என்ற எண்ணத்தில் தாங்கள் அளவு கடந்து போகாமல், தவறாக வழியில் கண்டவர்களைப் பிடித்து அடிக்காமல், காலித்தனத்தில் இறங்காமல் இருக்க அவர்களை எச்சரிக்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட நிலைமை வளருமானால் யார் பேரிலும் சந்தேகம் இருக்கிறது என்ற காரணத்தைக் காட்டிக்கொண்டு கலவரங்களை, காலித்தனத்தை நடத்துவது தவிர்க்க முடியாது போகும். இது மிக மிகத் தவறு என்பதை சட்டமன்றத்தில் சொல்வதன் மூலம், பல நாளிதழ்களிலும் விரிவாகத் தெரிவிக்கப்பட்டு, பொதுமக்களுடைய மனதில் சிறந்த நம்பிக்கையை ஊட்ட வாய்ப்பு ஏற்படும் என்று நான் கருதுகிறேன். எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும்



இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படுகிற நேரத்தில் தீது செய்கின்றவர்கள் ஆங்காங்கு ஏற்படுகிற குழப்பங்களை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வது இயற்கையான கோளாறாகும். அதை வளர்க்க வேண்டுமென்று இந்தச் சர்க்கார் விரும்பவில்லை. அதை வளரவிடக்கூடாது என்ற பொறுப்புணர்ச்சி இந்தச் சர்க்காருக்கு இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் பொதுமக்கள் மனதில் இருக்கிற ஒரு பீதி, இந்தத் தீ விபத்துக்கள் எந்தக் காரணத்தால் நேரிடுகின்றன, யார் செய்கிறார்கள் என்பதைப்பற்றி பல்வேறு விதமான வதந்திகளை உலவவிடுகின்றன. அந்த வதந்திகள் காரணமாக எங்கு பார்த்தாலும், யாரைப் பார்த்தாலும் சந்தேகப்படுகிற நிலைமை, யாராவது ஒரு குடிசையை உற்றுப் பார்த்தால் போயிற்று, இதைக் கொளுத்தி விடுவதற்காகத்தான் பார்க்கிறார் போலிருக்கிறது என்று பீதி அடைகின்ற நிலைமை அந்த அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்களிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. பொதுமக்களுக்கு நான் உறுதி அளிக்க விரும்புகிறேன். அப்படிப்பட்ட பீதிக்கு ஒரு துளியும் இடம் கொடுக்கத் தேவையில்லை. போலீஸ் அதிகாரிகளும், ஹோம் கார்ட்ஸ்களும், பொதுநலத் தொண்டர்களும் இப்படிப்பட்ட காரியத்தில் கண்விழிப்பாக இருக்கிறார்கள். சதித் திட்டம் ஏதாவது இருக்குமானால் அதைக் கண்டிப்பாகக் கண்டுபிடித்து முறியடிக்க மிகமிகச் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். எப்படிப்பட்ட சதிகள் இருக்குமானாலும் அவைகள் கண்டு பிடிக்கப்படும். முறியடிக்கப்படும் என்கிற உத்தரவாதத்தையும், உறுதியையும் நான் பொதுமக்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகையால் அவர்கள் நிம்மதியான முறையில், இனி இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வதற்கு சர்க்கார் சுறுசுறுப்பாக இருக்கிறது என்ற நம்பிக்கையில் தங்கள் கவலைகளை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்காக காவல் புரிவதாகச் சொல்கிறவர்கள் இப்படிப்பட்ட விரும்பத்தகாத, வெறுக்கத்தக்க செயல்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வதை இந்தச் சர்க்கார் அனுமதிக்காது என்பதை, எச்சரிக்கையைக் கூற விரும்புகிறேன்.

தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிரந்தரமான பரிகாரம் தேட வேண்டும் என்பதைப்பற்றி பல உறுப்பினர்கள் இப்போது கூடத் தெரிவித்திருக்கிறார்கள். சென்னை நகரத்தில் இன்று திட்டமிட்ட முறையில், திட்டமிட்ட பகுதிகளில் குடிசைகள் அமைந்திருக்கின்றன என்று சொல்ல முடியாது. முன்னால் இருந்த அரசாங்கம் அதற்கு வழிவகை செய்யவில்லை. திடீர் திடீர் என்று தோன்றுகிற குடிசைப் பகுதிகளைக் களைவதற்கான முயற்சியில்தான் தொடர்ந்து ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். ஆனால் வெளியிடங்களில் இருந்து வேலை தேடி வருகிறவர்களும், வேறு புகல் இடம் அற்றவர்களும், எந்த இடம் கண்ணுக்குத் தெரிகிறதோ அந்த இடத்தில் குடிசையை அமைத்துக் கொண்டு

வந்தார்கள். அந்த முறையில் சென்னை நகரத்தில் 600 குடிசை வாழ் பகுதிகளை உண்டாக்கிவிட்டார்கள். இந்தக் குடிசைவாழ் பகுதிகளிலும் குடிசைகள் ஒருமுறைப்படி அமைக்கப்படவில்லை. அதன்காரணமாக ஏதாவது விபத்துக்கள் ஏற்பட்டால் அதைத் தடுப்பதற்கு பத்து பேர்கள் சேர்ந்து உள்ளே போக முடியாது போவதற்கு வழியும் இருப்பதில்லை. ஆகவே விபத்துக்கள் ஏற்படுகிறபோது உடனடியான மீட்சி வேலைகள் பாதிக்கப்படுகின்றன. ஆகையால் இப்போது தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளை நாம் அமைத்துக் கொடுக்கிற வேலையில் ஈடுபடுகிறபோது அந்த இடங்களைத் திருத்தி அமைத்து, கருகிப் போய் இருக்கிற இடங்களை செம்மைப்படுத்தி, இனி அமைக்கப்படுகிற கூரை கீத்தினால் அமைக்கப்படாது கூடுமான வரையில் அஸ்பெஸ்டாஸ் ஷீட்டினாலோ, ஜிங்க் ஷீட்டினாலோ அமைத்துக் கொடுக்க வகை செய்ய வேண்டும். தீ விபத்து தானாக ஏற்பட்டாலும், தீ வைக்கப்பட்டாலும் அதனால் பெருத்த சேதம் ஏற்படாத அளவுக்கு அவை திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்ற முடிவுக்கு நேற்றைய தினம் கூடிய குழு வந்திருக்கிறது. அப்படிச் செய்வதானால் சென்னை நகரத்தில் இப்போதிருக்கிற குடிசைப் பகுதிகளில் உள்ள எண்பதாயிரத்தில் இருந்து ஒரு லட்சம் வரை உள்ள குடிசைகளைப் பிரித்து அமைத்தாக வேண்டும். இதை ஒரு நான்கு வருடத்தில் திட்டமிட்டு செய்து முடிப்பது என்று இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது. இதற்கு ஒரு கட்டத்தில் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும். இது வெற்றிபெற எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்பையும், பொதுமக்கள் ஆதரவையும் இந்த அரசு கேட்கிறது. ஒரு பக்கத்தில் ஓலை கீத்து குடிசைகளைப் பிரித்து அமைத்துக் கொண்டே இருக்கிறபோது, இன்னொரு பக்கத்தில் புதிய குடிசைகள் போடப்படுமானால் எந்தச் சர்க்காராலும் பரிகாரம் காண முடியாது.

ஆகையால், எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், கட்சிகளுக்கு அப்பாற்பட்டு பொதுமக்களிடத்தில் தொடர்பு கொண்டவர்களும், மாநகராட்சி மன்ற உறுப்பினர்களும் ஆகிய எல்லோரும் ஒன்று கூடி இப்போதிருக்கிற குடிசைகளைத் தவிர இனி புதிதாகக் குடிசைகள் சென்னை நகரத்தில் வருவதற்கு நாங்கள் இடம் தர மாட்டோம், பொதுமக்களிடத்தில் இதைப்பற்றி எடுத்துச் சொல்லி—புதுக் குடிசைகள் வராதபடி பார்த்துக் கொள்வோம் என்ற உறுதியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நேற்றைய தினம் நடந்த எல்லாக் கட்சித் தலைவர்களும் அடங்கிய குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. யாரோ போட்டுவிடுகிறார்கள், நாங்கள் என்ன செய்வது என்று கருதுவதானால் நான் ஒரு இரகசியத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பத்துப் பேர் ஓரிடத்தில் குடிசை போடுகிறார்கள். அதுவும் அனுமதி இல்லாத இடத்தில் போடுகிறார்கள். அப்படிப் போடப்பட்டுள்ள குடிசைகளை பிரித்துப் போடும்படியாக உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. உடனே அந்தப் பத்துப் பேர்களும் சட்ட



மன்ற உறுப்பினர்களையோ, மாநகராட்சி மன்ற உறுப்பினர்களையோ அழைத்துக் கொண்டுதான், "இன்னும் பத்து நாட்களுக்காவது அந்தக் குடிசைகளைப் பிரிக்காதீர்கள்" என்பதாக தவணை கேட்டுக்கொண்டு வருகிறார்கள். பின்னர் அது என்றைக்கும் பிரிக்க முடியாத நிலையை அடைந்து விடுகிறது. அந்தக் குடிசை வாழ் மக்கள் அரசியல்வாதிகளை விட அரசியல் தந்திரம் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். ஆட்சிப் பொறுப்பில் எந்தக் கட்சி இருக்கிறதோ அந்தக் கட்சியின் தலைவர்கள் பெயரைப் போட்டுக் கொண்டு—போர்டு மாட்டிவிடுகிறார்கள். பின்னர் அந்தத் தலைவர்களிடமே பாத்யதை கொண்டாடுகிறார்கள், பாசத்தைத் தெரிவிக்கிறார்கள். பாத்யதை கொண்டாடுவதிலும், பாசத்தைத் தெரிவிப்பதிலும் ஓரளவு உண்மை இருக்கலாம். ஆனால் அதைக்கொண்டே ஓரளவு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துகிறபோதுதான் இந்தச் சங்கடங்கள் எல்லாம் வருகின்றன. எனக்குத் தெரிந்து நான்கு மாதங்களுக்கு முன்பாக வேறு பெயரிலே இருந்த போர்டுகள் இன்றைக்கு எங்கள் பெயரில் மாற்றப்பட்டு அவை எங்களுடைய ராஜ்யங்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ராஜ்யத்தை எந்தக் கட்சியும் விரும்பவில்லை. அதனால் ஆதாயமும் இல்லை. பலனும் இல்லை. போர்டைக் காட்டி 'இது காமராசர் புரம்' என்றோ, 'கருத்திருமன்புரம்' என்றோ, 'கருணாநிதி பேட்டை' என்றோ அறிவித்து 'இதைப் பிரிக்கச் சொல்கிறீர்களே, நீங்கள் வாருங்கள்' என்று அழைக்கும்போது நாம் வராமல் இருப்போமானால் ஐந்து வருடங்களுக்குள் இந்தக் குடிசைவாழ் பகுதிகளை எல்லாம் நல்லவிதமாகத் திருத்தி அமைத்து ஒழுங்குபடுத்துகிற முயற்சி வெற்றிபெறலாம். அதற்காக இந்தக் குழு அடுத்தடுத்துக் கூட வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட யோசனை சொன்னார்கள்.

இப்போது உடனடியாகத் தேவைப்படுவது வீடு இழந்து தவிக்கிற மக்களுக்கு சாப்பாடு, துணிமணிகள், நோய்வாய்ப்பட்டால் மருந்து, உடனடியாகத் தங்க இடம். இவற்றுக்கு இப்போதே பணம் செலவழிக்கப்பட்டு வருகிறது என்றாலும் பெரும் அளவுக்குத் தேவைப்படுகிறது. நான்கைந்து ஆண்டுகளிலும் எல்லா இடங்களையும் திருத்தி அமைக்கலாம் என்றாலும், இப்போது உடனடியாக தீ விபத்துக்கள் ஏற்பட்டிருக்கிற அந்த இடம் வரையில் முன்னால் குறிப்பிட்டது போன்று புதிய முறையில் குடிசைகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று குழு முடிவு எடுத்திருக்கிறது. இப்போது குடிசை ஒவ்வொன்றுக்கும் அரசு 80 ரூபாய் கொடுக்கிறது என்று நான் சொன்னேன். மாநகராட்சி ரூபாய் 25 கொடுக்கிறது. நாம் கருதுகிறபடி இந்தக் குடிசைகளை தீ விபத்துக்களில் இருந்து நிரந்தரமாகப் பாதுகாக்கிற வகையில் கட்ட வேண்டுமானால் ஒரு குடிசைக்கு 400-லிருந்து 450 வரை செலவாகும் என்று அத்துறையில் உள்ள நிபுணர்கள் அறிவித்திருக்கிறார்கள். நிபுணர்கள் 450 என்று அறிவித்தால் நாமே முன்னின்று செய்கிறபோது 400 ஆகலாம். அதற்கும் குறைவாக அமைக்க

முடியாது. இதற்கு சர்க்கார் ஒதுக்கியிருக்கிற பணம் போக, மீதம் இருப்பதை பொதுமக்களிடத்தில் அன்பு கொண்டவர்கள், வசதி உள்ளவர்கள், தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் தந்துதவ முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணக்கமாக கீழ்க் கண்ட தொகைகள் வந்திருக்கின்றன.

முதல் அமைச்சர் அவர்களின் பெயரால் துவக்கப்பட்டுள்ள நிவாரண நிதியிலிருந்து—ரூ. 10,000. திராவிட முன்னேற்றக் கழக நிதியிலிருந்து—ரூ. 5,000. ஹிந்து பத்திரிகை நிறுவனம் —ரூ. 5,00. புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்—ரூ. 25,000. யுனைடட் இந்தியா ரோலர் ப்ளவர் மில்ஸ் லிமிடெட்—ரூ. 1,111. ஆனந்த விகடன் அதிபர் எஸ். எஸ். வாசன்—ரூ. 1,000. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, ஸ்டாஃப் யூனியன்—ரூ. 1,001. தினமணி இதழ்—ரூ. 5,000. இந்தியன் எக்ஸ்பிரஸ்—ரூ. 5,000. மதராஸ் வி. எல். ரெட்டி—ரூ. 500. சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. நா. நாச்சிமுத்து, திரு. கு. கிருஷ்ணமூர்த்தி இருவரும் (பழனி)— ரூ. 100. மதுரை சௌத் இந்தியா கார்ப்பரேஷன் லிமிடெட்— ரூ. 10,000 சென்னை ரேஸ் கிளப்—ரூ. 25,000. இந்தியன் பாங்க், போர்ட் ஆப் டைரக்டர்ஸ்—ரூ. 10,000. ஜெயின் மெடிகல் ரிலீப் சொசைடி—ரூ. 2,000. தாதா அண்ட் கம்பெனி—ரூ. 501. தலைவர் சைக்லோன் ரிலீஃப் கமிட்டி என்ஜினியரிங் ஓர்க்ஷாப்ஸ், அரக் கோணம்—ரூ. 179. ஹரிஜன நலத்துறை அலுவலர்கள்—ரூ. 101. புரொப்ரைட்டர் ஸ்ரீ கிருஷ்ணா டெக்ஸ்டைல்ஸ்—ரூ. 1,000. செக்ரடரி, பெங்கால் அசோசியேஷன்ஸ்—ரூ. 675. நீலகிரி பஸ் ஓனர்ஸ் அசோசியேஷன்ஸ்—ரூ. 3,000. தினத்தந்தி இதழ்—ரூ. 5,000. மாலை முரசு இதழ்—ரூ. 2,000. கழக சட்டமன்ற உறுப்பினர்கள்— ரூ. 1,050. இது மட்டுமல்ல, நேற்றையதினம் மாலை என்னைச் சந்தித்த தொழிலதிபர்கள் எல்லாம் தங்களுடைய பல தொழில் நிறுவனங்களில் இருந்து பணம் திரட்டி, இரண்டு லட்சம் ரூபாய்க்குக் குறையாமல் தருவதாக வாக்களித்தார்கள். அப்படி வாக்களித்ததிலே இந்தியா சிமெண்ட்ஸ் சார்பாக ரூ. 25,000. இன்டஸ்ட்ரியல் கெமிகல்ஸ் சார்பாக ரூ. 10,000. டி.வி.எஸ். ஸ்தாபனம் சார்பாக ரூ. 25,000. அமால்கமேஷன்ஸ் லிமிடெட் ரூ. 10,000. திரு. மருதைப் பிள்ளை—ரூ. 30,000 இந்தத் தொகைகளை படிப்பதிலே எனக்குச் சிறிது தடுமாற்றம் ஏற்படுவதை உணர்கிறேன். இவ்வளவு பெரிய தொகைகளைப் பார்த்ததும் இல்லை. பழகியதும் இல்லை. அந்தக் காரணத்தால் தான் இந்தத் தயக்கமும் தடுமாற்றமும் ஏற்படுகின்றன. (சிரிப்பு.). மேலும், நம்முடைய நண்பர், எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் 251 ரூபாயும், திரு. கே. விநாயகம் அவர்கள் ஒரு மாதச் சம்பளமும் கொடுக்கிறார்கள். மின்சாரத் துறையில் பணியாற்றுகிறவர்கள் எங்களிடம் ரூ. 103 கொடுத்திருக் கிறார்கள். மதராஸ் ரவுண்ட் டேபில் அசோசியேஷன்சார் ரூ. 1,000 அளித்துள்ளார்கள். இவைகள் எல்லாவற்றையும் விட தில்லியிலிருந்து தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளபடி நமது





இந்தியப் பிரதமர் அவர்கள் ரூ. 50,000 இந்த நிவாரண நிதிக்காக அளித்து இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நன்கொடைத் தொகைகளைக்கொண்டு நான் முன்பு சொன்னதுபோல நிவாரண வேலைகளை எடுத்து முடிக்க குழு முடிவு செய்திருக்கிறது. இப்போது தீ விபத்து ஏற்பட்டிருக்கிற இடங்களுக்கு மட்டும் கிட்டத்தட்ட ஐந்து லட்சம் செலவாகக் கூடும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. சென்னை நகரத்தில் உள்ள ஒவ்வொரு குடிசைப் பகுதியையும் திட்டமிட்டபடி பிரித்து அமைக்கிற காரியம் நடைபெற வேண்டியிருப்பதால் இந்தக் கமிட்டியை "சிடி பையர் ரிலீஃப் அண்டு ரீஹாபிலிடேஷன் கமிட்டி" என்பதாக நிரந்தரமாக்கி, தொடர்ந்து இதற்கான முயற்சியில் ஈடுபடவேண்டுமென்று குழு தீர்மானித்திருக்கிறது. அதற்குத் தகுந்தபடி பத்திரிகைகளும் இதிலே காட்டிவருகிற ஆதரவுக்கும், கொடுத்து வருகிற நல்லெண்ண உதவிகளுக்கும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அநேகமாக எல்லாப் பத்திரிகைகளும் மு ப
தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலைத் தெரிவித்தும் 10 30
யோசனைகளை அருளியும் தலையங்கம் தீட்டியிருக்கின்றன. பத்திரிகை அதிபர்கள் தங்களுடைய பத்திரிகைகளிலே இதற் காகத் தனியிடத்தைக் கொடுத்து பணத்தைத் திரட்டுகின்ற வேலை யிலே ஈடுபடுவதாக என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். மேலும் அவர்களுடன் இது சம்பந்தமாக தொடர்புகொண்டு இந்தக் காரியத்தைச் செய்யவேண்டுமென்று கருதுகிறேன். முதற் கட்டமாக ஒரு கோடி ரூபாய் அளவிற்கு நிதி திரட்டி, சேரிப் பகுதிகள் என்று சொல்லப்படுகின்ற பகுதிகளும், குடிசைப் பகுதிகள் என்று சொல்லப்படுகின்ற பகுதிகளும் கொடுமைகளுக்கு ஆளாகின்ற இருப்பிடம் என்ற நிலையை மாற்றி, அவற்றை யெல்லாம் திருத்தியமைக்கவேண்டுமென்ற ஆர்வத்தோடு நான் இருக்கிறேன்; அந்த ஆர்வத்தை அதிகரிக்கின்ற தன்மையில் எல்லோரும் ஒத்துழைக்கின்ற முறையில் பொதுமக்களும், பத்திரிகைகளும், பொது நலத் தொண்டர்களும், அரசியல் தலைவர்களும், கட்சித் தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், மற்றவர்களும் செயல் படவேண்டுமென்று நான் விரும்பிவேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே சென்னை நகரத்திலே ஏற்பட்டு விட்டிருக்கிற குடிசைவாழ் பகுதிகளை வெளிநாட்டுக்காரர்கள் பார்க்கின்றபொழுது நம்முடைய நகரத்தைப்பற்றியும், நிர்வாகத் தைப் பற்றியும் மோசமான எண்ணத்தைக் கொள்ளச் செய்கிறது. திடீர்திடீரென்று ஆபத்துக்கள் வருகின்றபொழுது உயிர்ச் சேதம் ஏற்படுவதையும், குழந்தைகள் துடித்துக்கொண்டு அழுவதையும், பெண்டிர் பதறியழுவதையும், பல்லாயிரக்கணக்கானவர்கள் வீடு இழந்து, சொத்து, மற்ற பொருள்களை இழந்து, வாழ்வு இழந்து, மகிழ்ச்சி இழந்து எல்லாவற்றையும்விட மன நிம்மதியையும் இழந்து விடுகின்ற நிலையை போக்கியாகவேண்டும், நீக்கியாக வேண்டும்; இதில் எந்தவிதமான அரசியல் குறுக்கீடுகளையும் நான்

விரும்புகிறவன் அல்ல. ஆதரிக்கிறவனும் அல்ல. ஆகையினால் எல்லோரும் ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று நான் விரும்பிக் கேட்கின்ற நேரத்திலே தீ விபத்துக்கள் ஏற்படுகின்ற நேரத்தில் மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று சொல்கிற சிலர் சமூக விரோதமான காரியங்களில், காலித்தனமான காரியங்களில், கலவரங்களை மூட்டிவிடுகின்ற காரியங்களில், தாக்குதலை நடத்துகின்ற காரியங்களில் யார் ஈடுபட்டாலும் ஒரு துளியும் தயவு தாட்சண்யம் இல்லாமல் சட்டம் தன்னுடைய வேலையைச் செய்யும் என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். யாரோ அடிப்பட்டார்கள், இவர்கள் சும்மா இருக்கிறார்கள் என்று யாரும் சொல்லவேண்டாம்; இந்த நாட்டிலே யாரும் யாரையும் 'யாரோ' என்று கருதவேண்டியதில்லை எல்லோரும் ஒன்றாக வாழப் பிறந்திருக்கிறோம். ஒன்றாகப் பொது மக்களுக்கு பணியாற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். அரசியல் ஐயப்பாடுகள், பீதிகள், விபத்துக்கள், கலவரங்கள் இவை ஏற்படுகின்ற காலத்திலே சமூக விரோதிகள் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய நிலையை உண்டாக்கக் கூடாது. அரசியல் கட்சிகள் எல்லாவற்றிற்கும் இதிலே ஒன்றுபட்ட தன்மை இருக்க வேண்டும். கிருஷ்ணமூர்த்தி அடிப்பட்டதைப் பத்திரிகையிலே போட்டார்கள். பல நண்பர்கள் சொன்னார்கள்; காங்கிரஸ்காரன் அடிப்பட்டான் என்பதிலே முக்கியத்துவம் எனக்கு ஒன்றும் இல்லை. அவர் காங்கிரஸ்காரர் மட்டுமல்ல; ஒரு காலத்திலே காங்கிரஸ்காரர்களுக்கு விரோதியாகக்கூட இருந்தார். காங்கிரஸ்காரர் ஒருவர் அவருடைய வேலையாக வந்துகொண்டிருந்த பொழுது, மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று சொல்லிக்கொண்டு சிலர் காலித்தனமாகவும், கண்மூடித்தனமாகவும் அவரைத் தாக்கியிருப்பது கண்டிக்கத்தக்கது, வெறுக்கத்தக்கது, நீக்கத்தக்கது என்பதை இந்த அரசும், நான் தனிப்பட்ட முறையிலேயும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். இதை ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையிலே போலீஸ் துறை சுறுசுறுப்பாகப் பணியாற்றும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தரப்பட்ட விளக்கங்கள், வசூலிக்கப்பட்டிருக்கிற தொகைகள், தொடர்ந்து வசூலிப்பதற்கும் முறையான வகையில் சீரிய வகையில் முடிவெடுப்பதற்கும் நேற்றைய தினத்தில் எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் வந்திருந்தது பெருமையைக் கொடுத்தது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதற்கு முன்தினம் ஏதோ மாறுபட்ட எண்ணத்தினால் வெளிநடப்புச் செய்தார்கள். பல பேர்கள் என்னிடம் சொன்னார்கள், அவர் வரமாட்டார் என்று, நான் சொன்னேன் அப்படிக் கருதாதீர்கள், அவர்கள் வருவார்கள் என்று சொன்னேன். அவர் வந்திருந்தது மட்டுமல்ல, யோசனைகளையும் கூறினார். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், சுதந்திரா கட்சியைச் சேர்ந்தவர்கள், சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், பிரஜா சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், தமிழரசுக் கழகத் தலைவர், முஸ்லீம் லீக் தலைவர், குடியரசுக் கட்சித் தலைவர், எல்லோரும் இதிலே அக்கறை காட்டியிருக்கிறார்கள். இதற்காக அமைக்கப்பட்டிருக்கின்ற குழுவில் தொடர்ந்து பணியாற்றுவதற்கு வாய்ப்புக் கொடுத்திருப்பதை நான் நன்றியோடு



ஏற்றுக்கொண்டு இருக்கிறேன். முதலமைச்சர் என்ற முறையில் பல துறைகள் எனக்கு ஒதுக்கப்பட்டிருந்தாலும், இந்தத் துறைக்கு நான் முதலிடம், முக்கியமான இடம் அளித்து குடிசைகள் திருத்தியமைக்கப்பட, தீ விபத்துக்கள் இயற்கைக் கோளாறுகள் ஏற்பட்டால் ஏழை மக்கள் பல்லாயிரக் கணக்கானவர்கள் அல்லல் பட்டுக்கொண்டிருக்கிற நிலைமை மாற்றியமைக்கப்பட எனக்கு இருக்கிற நேரத்திலே ஒரு பகுதி, என்னுடைய நினைப்பிலே பெரும் பகுதி, இருக்கின்ற ஆற்றுதலிலே பெரும் பகுதி கொடுத்து எனக்கு நிறைவளிக்கக்கூடிய முறையிலே பெருமளவிலே நிறைவேற்ற நான் நம்பிக்கை கொண்டிருக்கிறேன். அந்த நம்பிக்கையைச் செயல்படுத்துகின்ற அளவிலேயும், குழுவின் முடிவைச் செயல்படுத்துகின்ற வகையிலேயும் எல்லோரும் ஒத்துழைப்பைத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : In view of the statement and appeal made by the Hon. the Chief Minister and in view of the great need, in public interest, to calm down the tension prevailing in the City, I would request the hon. Leader of the Opposition not to press the adjournment motion for hearing to-day on the promise that I will permit him later.

### 3. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

### சென்னை நகரில் தீ விபத்துக்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது படித்த அறிக்கை மிகவும் பாராட்டும் வகையிலே போற்றுதற்குரிய வகையிலே அமைந்திருக்கிறது என்பதை என்னுடைய கட்சியின் சார்பிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதே அறிக்கையை இரண்டு நாட்களுக்கு முன்னால் தெரிவித்து இருந்தால் நன்றாக இருந்திருக்கும், சிறப்பாக அமைந்திருக்கும், அப்படி இல்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல, முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கு எதிராக நான் சொல்லவில்லை, எது நாட்டிலே நடந்துகொண்டிருக்கிறது என்பதைச் சொல்வதற்காக நான் இதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தீ விபத்துக்கள் குறைந்திருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள், திரு. காசிராமன் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். திரு. கருணாநிதி அவர்கள் சொல்கிறார்கள், தங்களையும் தடுத்து நிறுத்திவிட்டார்கள் என்று. இப்படியெல்லாம் செய்வதோடு மட்டுமல்ல. திரு. ஏ. டி. ஜெயராஜன் என்பவர் 16, கனகராஜபுரத்திலே 89-வது டிவிஷனிலே குடியிருக்கின்றார், அவர் இருக்கின்ற வீட்டிற்குள் 300 பேர்கள் புகுந்து அவர் தாக்கப்பட்டு அவர் போலீசுக்கு போன் செய்யமுடியாமல் தடுக்கப்பட்டு, கடைசியாக அவர் போலீசுக்குப் போன் செய்த சமயத்திலே போலீசார் அவரை அரஸ்ட் செய்திருக்கிறார்கள். நான் முதலமைச்சரைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால் அவர்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 ஜூலை

எடுத்துக் கொள்கின்ற நடவடிக்கையில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது, ஆனால் இப்படிப்பட்ட சம்பவங்களைப்பற்றியும் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுத்தால்தான் அவர்களுடைய நடவடிக்கை பூரணமான நிலைக்குக் கொண்டுவரும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்குக் காரணம், அரசியல் காரணம் இருக்கிறது என்பதை முதலமைச்சர் யாரோ சொன்னதாகச் சொன்னதால்தான் இதுபோன்ற சம்பவங்கள் ஏற்பட்டுவிட்டதோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது. இதிலே எந்த விதமான அரசியலுக்கும் இடம் கிடையாது, திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, வேறு எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, இதிலே அரசியலைப் புகுத்தக் கூடாது. காங்கிரஸ்காரர்கள் கதர் சட்டை போட்டால் வெளியிலே இழிவாகப் பார்க்கிறார்கள். இந்த நிலையைப் போக்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக நடவடிக்கை எடுப்பதற்கு உறுதிமொழி கொடுத்தால் என்னுடைய தீர்மானத்தை நான் வற்புறுத்தவில்லை.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னபடி பீதிகொண்ட பொது மக்களின் சார்பில் பணியாற்றுவதாகச் சொல்லிக்கொண்டு வருகிற காலிகளின் காலித்தனம் ஒடுக்கப்படும். அவர்களுக்கு எந்த வகையிலும் இடம் தராது பார்த்துக் கொள்ளுகின்ற பொறுப்பை இந்தச் சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறது. கதர் போட்டிருப்பதைப் பார்த்தாலே அருவருப்பு அடைகிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். என்னுடைய சட்டை கூட கதர் மாதிரிதான் இருக்கிறது ; ஆனால் கதர் அல்ல. அப்படி அருவருப்புக் காட்டுவது காட்டுமிராண்டித்தனத்தின் அறிகுறியாகும். அதை வளரச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் எனக்குத் துளியும் கிடையாது.

MR. SPEAKER : This adjournment motion is withdrawn with the leave of the House.

## 4. அறிவிப்பு.

### அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் ( Senate -ல்) இப்பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) திரு. கே. பார்த்தசாரதி, (2) திரு. ஜி. ராஜாராம் ஆகிய இருவரும் இப்பேரவைக்கு மீண்டும் தேர்ந்து எடுக்கப்படாத காரணத்தால், பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் ஏற்பட்டுள்ள இரண்டு வெற்றிடங்களுக்கு, தமிழக சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து இருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி, ஒற்றை மாற்று வாக்கு மூலம் இத்தேர்வு நடைபெறும்.



1967 ஜூலை 8] [பேரவைத் தலைவர்]

எனவே, வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களை 12—7—1967 புதன்கிழமை காலை 11 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 12—7—1967 புதன்கிழமை மாலை 3 மணிக்கு ஆராய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 13—7—1967 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்று இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது இரண்டுக்கு, மேற்படுமாயின் 15—7—1967 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே, சென்னை, கோட்டையில் இருக்கும் உறுப்பினர் ஓய்வு அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

## 5. 1967-68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண் XX—தொழில்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் XX—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,06,60,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**(மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் தலைமை)**

THIRU N. S. V. CHITHAN : Sir, to discuss about the failure of the Government in starting adequate industries in Madurai and Ramanathapuram districts, I move the following cut motion :—

'That the allotment of Rs. 2,06,60,700 under Demand No. XX—Industries be reduced by Rs. 100.'

THIRU K. M. RAMASWAMY GOUNDER : Sir, to discuss about the decentralisation of industries in the State and to encourage more and more medium and cottage industries, I move the following cut motion :—

'That the allotment of Rs. 2,06,60,700 under Demand No. XX—Industries be reduced by Rs. 100.'

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, நெசவாளர்களும் பருத்தி உற்பத்தியாளர்களும் அதிகமாக உள்ள கோவில்பட்டி வட்டாரத்தில், எட்டயபுரத்தில் பாரதி பேரால் ஒரு கூட்டுறவு ஆலை நிறுவ வேண்டிக்கொள்ள—

"கோரிக்கை எண் XX—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,06,60,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU V. K. KOTHANDARAMAN : Sir, to discuss and urge upon the Government the necessity for setting up a factory for producing meters, starters and switches for agricultural purposes, I move the following cut motion :—

'That the allotment of Rs. 2,06,60,700 under Demand No. XX—Industries be reduced by Rs. 100.'

*மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்:* அடுத்து 40-ம் எண்ணுள்ள கோரிக்கைத் தீர்மானத்தை கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

**கோரிக்கை எண் XL- தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு.**

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* கவர்னர் அவர்கள் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

“கோரிக்கை எண் XL—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,38,08,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும் ”.

THIRU V. K. KOTHANDARAMAN : Sir, to discuss policy, I move the following cut motion :—

'That the allotment of Rs. 9,38,08,700 under Demand No. XL—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100.'

**திரு. ஜே. ஜேம்ஸ்:* மாண்புமிகு துணை அவைத் தலைவர் அவர்களே, எனது கட்சியின் சார்பில் இந்த மானியத்தின்மீது கொண்டு வரப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தையொட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கழிந்த 15 ஆண்டு காலமாக நமது மாநிலத்தை தொழிற் துறையில் ஒரு சிறந்த அபிவிருத்தி அடையக் கூடிய அளவில் நமது முன்னாள் அரசின் தொழிற்துறை அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் சிறந்த முறையில் பணியாற்றினார்கள் என்பது அகில பாரதமும் ஒத்துக்கொண்ட விஷயம். வெளிநாடுகளிலிருந்து பாரதத்தைப் பார்க்க வருகின்றவர்கள் எல்லாம் நம்முடைய மாநிலத்தைப் பாராட்டியிருக்கிறார்கள். அயல் நாட்டுத் தூதர்கள்கூடப் பாராட்டியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் தொழிற்துறை அபிவிருத்தி அடைவதற்குள்ள பல வழிவகைகள் இல்லாமல் இருந்த போதிலும் கூட, அன்னாருடைய சிறந்த சேவையினால் நம்முடைய மாநிலம் தொழிற்துறையில் முக்கியம் வாய்ந்த மாநிலமாக விளங்குகிறது. வேளாண்மையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நமது நாட்டு மக்கள் இன்று பொறி இயல், ரசாயன தொழில்களில்கூட ஈடுபடுவதற்கான வழிவகைகளுக்கு முன்னாள் அரசு வழி வகுத்திருக்கிறது. அதுமட்டுமல்ல. இன்று தனியார் வெளிநாடுகளிலிருந்து நம்முடைய நாட்டிலுள்ள தொழிற் துறையில் இன்வெஸ்ட்



பண்ணத் துணிந்து தைரியத்தோடு இன்வெஸ்ட் பண்ணும் நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது முன்னாள் அரசாங்கம். கழிந்த பத்தாண்டுகளாகப் பல நெசவு ஆலைகள் தொடங்கப்பட்டு மிகவும் சிறந்த முறையில் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன என்பதை நான் கூறாமல் இந்த அவையில் இருக்கும் ஒவ்வொரு அங்கத்தினரும் ஒப்புக்கொள்வார்கள் என்று எண்ணுகிறேன். 1956-வது ஆண்டில் இந்த மாநிலத்தில் 82 நெசவாலைகள் இருந்தன. ஆனால் 1966-ல் 183 நெசவாலைகள் அளவுக்கு உயர்ந்தது. ஆனால் நமது இன்றைய அரசு தொழிற்துறை அபிவிருத்திக்காக என்ன வழிவகைகளை இந்த பட்ஜெட்டில் செய்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது மிகவும் கவலையோடுதான் கூறவேண்டியிருக்கிறது. சிறந்த முறையில் வந்து கொண்டிருந்த நமது மாநிலம் தொழிற்துறையில் பின்னடைவதற்கான சாத்தியம் இருக்கிறதோ என்ற ஐயப்பாட்டை அடைகிறேன். நிதிநிலை அறிக்கையில் தொழிற்துறை அபிவிருத்திக்குத் தேவையான அளவு எதுவும் ஒதுக்கப்படவில்லை. ஒருவேளை இப்போதுள்ள தொழிற்துறைகள்கூட செயல்படுவதற்குள்ள வழிகள் இருக்குமோ, வருங்காலத்தில் தடைப்பட்டுப் போகுமோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. நான் நமது அமைச்சரவையைக் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம், புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்கு வழிவகைகள் இல்லாமல் இருந்தாலும்கூட ஏற்கனவே செயல்பட்டு வருகிற தொழில்கள் திருப்திகரமாக, நல்ல முறையில் செயல்பட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரை உள்ள நிலைமையை நான் ஒரு கேள்வி மூலமாகக் கூட தொழிற்துறை அமைச்சர் அவர்களுக்கு அறிவித்திருக்கிறேன். எனது கன்னியாகுமரி மாவட்டம் தொழிற்துறையில் மிகவும் பின்னேக்கிய மாவட்டம். சொல்லக்கூடிய அளவில் பெரிய தொழிற்துறைகள் அமைக்க மூலப் பொருள்கள் அங்கு இல்லை. அம்மாதிரித் தொழிற்துறைகள் அமைக்கப்படவும் இல்லை. முன்பு இருந்த காங்கிரஸ் அரசாங்கம் சிறு தொழில்கள் அமைப்பதற்கு வழிவகைகள் இருக்கின்றனவா என்று பரிசீலனை செய்து பல்வேறு சிறு தொழில்களை அமைக்கலாம் என்று முடிவு கட்டியிருந்தார்கள்.

அங்கு அதிகமாகக் கிடைக்கக் கூடிய மூலப் பொருள்கள், ரப்பர், டிம்பர், ஃபைபர் போன்ற பொருள்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. ஆகவே இந்தப் பொருள்களைக் கொண்டு சிறிய சிறிய தொழிற்சாலைகளை அமைக்க வழிவகைகள் இருக்கின்றன. அங்குள்ள தொழிலாளர்களும் சிறந்த முறையில் வேலை செய்யக் கூடிய திராணி உடையவர்களாக இருக்கிறார்கள். கூலியும் அவ்வளவு அதிகமாக இல்லை. ஆகவே அங்கு எந்தத் தொழிலையும் அரசாங்கம் கொண்டு வர முன் வருமானால் அது சிறந்த முறையில் செயல்படும் என்பதை நான் அரசாங்கத்திற்கு தைரியமாகக் கூறிக் கொள்வேன். ஏனெனில் இப்போது அங்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிற போக்குவரத்து வொர்க்ஷாப் மிகவும் சிறந்த

முறையில் செயல்பட்டு வருகிறது. அப்படி சென்னை நகரிலும் ஒரு வொர்க்ஷாப் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. ஆனால் இந்த இரண்டு பணித்துறைகளையும் எடுத்துப் பார்த்தால் சென்னையில் நடைபெறுகிற பணித் துறையைவிட சிறந்த முறையில் உள்ள வொர்க்மென்ஷிப் எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிறது. அங்குள்ள தொழிலாளர்களும் நல்ல நடத்தையும், நல்ல குணமும் உடையவர்களாக இருக்கிறார்கள். இதரப் பகுதிகளைவிட கன்னியாகுமரி மாவட்டத்தில் குறைவான செலவில் அதிகமாக சிறந்த முறையில் தொழில் நிர்மாணம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த அனுபவத்தைக் கொண்டு அங்கு இன்னும் பல்வேறு சிறிய தொழில்களை ஆரம்பிப்போமானால் அவை சிறப்பாக அங்கு நடைபெறுவதற்கு வாய்ப்புள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம் தென்னகத்தில் ஏன்? பாரதத்திலேயே—மிகவும் நல்ல உயர்ந்த ரக ரப்பர் எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் கிடைக்கிறது. ஒரு வேளை கேரளாவின் அளவிற்கு அதிகமாகக் கிடைக்காமல் இருந்தாலும் கேரளத்தை விட நல்ல உயர்ந்த ரக ரப்பர் எங்கள் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. தனியார்த் துறையிலும், அரசாங்கத் துறையிலும் ஏராளமான ரப்பர் அங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. அரசாங்கம் கூட ஏறக்குறைய 30,000 ஏக்கர் நிலத்தில் ரப்பர் பயிர் செய்து அவை பால் எடுக்கும் நிலையில் உள்ளது. ஆனால் இன்றைய நிலையில் அந்த ரப்பரிலிருந்து கிடைக்கக்கூடிய லாட்டக்ஸ், பால் இன்று அதிகமாக கேரளாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதனால் கன்னியாகுமரி ஜில்லாவிலுள்ள மக்களுக்கு தொழில் வாய்ப்பு இல்லாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. ஆகவே இந்த நிலை மாற வேண்டுமென்றால், கன்னியாகுமரி ஜில்லாவில் தமிழக மக்களுக்கு அதிக தொழில் கொடுக்க வேண்டுமென்றால் இந்த லாட்டக்சைக் கொண்டு, அதை வெளி மாநிலங்களுக்குப் போக விடாமல், அதை செம்மையாக ப்ராசசிங் நடத்த கன்னியாகுமரி ஜில்லாவிலேயே ஒரு ரப்பர் பாக்டரியை ஏற்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். நான் நினைக்கிறேன், அதற்காக பழைய சர்க்காரிடம் ஒரு திட்டம் இருந்தது. அந்தத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் என் கட்சி சார்பாக கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. எஸ். ராமச்சந்திரன் :** சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழில் மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களை இந்த அவை முன் வைக்க விரும்புகிறேன். தொழில் துறையைப் பொறுத்தவரையில் கடந்த கால சர்க்கார் தொழில் துறையில் ஏராளமான முன்னேற்றத்தைக் கண்டதாகவும் அந்தத் தொழில்கள் எங்கு நடைபெறாமல் விட்டுவிடப் படுமோ என்ற முறையில் இன்றையதினம் எதிர்கட்சி உறுப்பினர் கருத்து தெரிவித்தார். தொழில் துறையைப் பொறுத்த வரையில்





6502O

சில தவறான எண்ணங்கள் கையாளப்பட்டு வந்திருக்கின்றன என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தொழில் துறையில் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் எந்த அளவிற்கு நேரடி வருவாயைப் பெற்றிருக்கிறோம் என்று பார்க்கும்போது அதிர்ச்சி தரும் விதத்தில் நம் மாநில சர்க்காரால் நடத்தப்படும் தொழில்கள் மூலம் இன்டஸ்ட்ரீஸ் என்ற ஹெட்டில் இரண்டு கோடி ரூபாய்தான் பெறுகிறோம். அதுமட்டுமல்ல, ஒரு நாடு சமதர்மத்தை நோக்கிச் செல்கிறது என்றால் அந்த நாட்டின் வரவு செலவுத் திட்டத்தின் பெரும் பகுதி அந்த நாட்டில் சர்க்கார் நடத்துகிற தொழில்களின் மூலம் கிடைக்கிற வருவாயை வைத்துக்கொண்டு வருவாய் இனங்களைப் பெருக்கியும் அதே நேரத்தில் அந்த நாட்டு மக்கள் மீது விதித்திருக்கிற வரி இனங்கள் குறைக்கப்படவும் வேண்டும்.

தொழில் துறையில் வருவாய் அதிகரித்திருக்கிறதா ? கடந்த இருபது ஆண்டு காலத்தில் தொழில் துறையில் இருந்து வருகிற வருவாயை அதிகரித்து நம் மாநில சர்க்காருக்கு கிட்டத்தட்ட ஐம்பது பங்காவது அதிலிருந்து வருவாய் வந்திருக்கிறதா என்றால் கிடையவே கிடையாது. வெளிநாடுகளுக்குச் சென்று பெற்ற தொழில் அனுபவமும், வெளிநாடுகளிலிருந்து வாங்கியவைகளும் இங்குள்ள தனியார் துறைக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறதே தவிர மாநில சர்க்காரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் தொழில்களை ஏற்று நடத்தி வருவாயைப் பெருக்கி அந்த வருவாயைக் கொண்டு நல்ல வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்கிற அந்த நிலையில் ஈடுபட்டார்களா என்றால் அது இல்லை. தனியார்த் துறைக்கு ஏராளமான பணத்தைச் செலவு செய்திருக்கிறார்கள். ஏற்கனவே தனியார்த் துறைக்கு பணம் தருவதற்காக இந்திய அரசின் இண்டஸ்ட்ரியல் பைனான்ஸ் கார்ப்பரேஷன், இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன், எல்.ஐ.சி. ஆகியவைகள்மூலம் ஏராளமான பணம் தரப்படுகிறது. அது போதாது என்று தமிழக சர்க்கார் மதராஸ் இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன், ஸ்டேட் எய்ட் டு இன்டஸ்ட்ரீஸ் என்பதன் மூலம் உதவி கொடுத்து ஏற்கனவே இருந்த தொழில் இலாகா தனிப்பட்ட முதலாளிகளை எப்படி உருவாக்குவது, தனிப்பட்ட முதலாளிகளுக்கு எப்படிப் பணம் தருவது, தனிப்பட்ட முதலாளிகளுக்கு எப்படி அன்னியச் செலாவணிமூலம் வேண்டிய இயந்திர வசதிகளை வாங்கித் தருவது என்ற கருத்தில் ஈடுபட்டிருந்தார்களே தவிர, தமிழக சர்க்காரின் தொழில் துறை முன்னேற வேண்டும், அதிலுள்ள வருவாயைப் பெருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அமைச்சர்களின் கருத்து இல்லை. பார்க்கப்போனால் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு நிலம் வேண்டுமா, அதையும் அரசாங்கம் வாங்கித் தந்திருக்கிறது, தொழிற்சாலைகள் அமைக்க கட்டடம் வேண்டுமா, கட்டடங்கள் கட்டித் தந்திருக்கிறார்கள். மின்சாரம் தந்திருக்கிறார்கள், தண்ணீர் சப்ளை செய்து தந்திருக்கிறார்கள்.

தொழிற்சாலைகள் அமைப்பதற்கு வேண்டிய இயந்திரங்களுக்கு என்பது பங்கு கடன் தந்திருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலைகளை நடத்துவதற்கு ஏராளமான பணம் கடனாகத் தந்திருக்கிறார்கள். இவ்வளவையும் தந்து விட்டு தனியார் துறையில் ஆரம்பிப்பதற்காக ஏன் அந்தத் தொழில்கள் தனியார் துறையில் விடப்பட்டன என்றால் அதற்குக் காரணம் சமதர்மத்தில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதைத்தான் அது தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. நம்முடைய சமுதாயம் முதலாளித்துவத்தைக் கொண்ட சமுதாயம் அல்ல. வேண்டுமானால் சில நிலச்சொந்தக்காரர்கள் இருந்திருக்கலாம். ஆனால் இவ்வளவு பண வசதி போன்ற மற்ற வசதிகளையெல்லாம் தந்து ஒரு முதலாளித்துவ வர்க்கத்தை உருவாக்குவதற்காக கடந்த கால அரசு பாடுபட்டு, அந்த முதலாளித்துவ வர்க்கத்தை தங்களுடைய கட்சி நலனுக்காக தங்கள் பின்னால் ஒரு பலத்தை வைத்துக் கொண்டு அரசியலில் ஈடுபடுவதற்காக செய்த ஒரு சூழ்ச்சியே தவிர இந்த நாட்டின் தொழில் துறையை பெருக்குவதற்கு உள்ள அக்கறையினால் அல்ல என்பதை இந்த நாட்டு மக்கள் உணரவேண்டும். கடந்த பத்து ஆண்டுகாலமாக, முன்னாலிருந்த பெருமதிப்பிற்குரிய தொழில் துறை அமைச்சர் அவர்கள் இருந்தபோது சென்னை அரசால் நடத்தப்பட்ட தொழில்கள் எவ்வளவு அதிகமாயின என்ற கணக்கைக் எண்ணிப் பார்க்க வேண்டும். அதே நேரத்தில் தனிப்பட்ட முதலாளிகளுக்காகக் கொடுத்த பணம் கிட்டத்தட்ட 57½ கோடி ரூபாய் ஆகும். இந்த 57½ கோடி ரூபாயும் கொடுத்து, மற்ற வசதிகளையும் செய்து கொடுத்து அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களுக்கு விலை நிர்ணயமாவது நாம் செய்தோமா என்றால், அதுவும் இல்லை. தனிப்பட்ட முதலாளிகள் தங்கள் பெயர்களை மட்டுந்தான் தந்து அரசாங்க மூலதனத்தில் தொழில்களை வைத்து அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களை எங்கு கொண்டு போனார்கள் என்றால், பெரும்பாலான பொருள்களை நம் சர்க்காருக்கே திரும்பி இரண்டு மடங்கு விலைக்கு விற்றிருக்கிறார்கள். அதையும் நம் சர்க்கார் வாங்கிக்கொண்டிருக்கிறது. ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், நம் சர்க்காரே அவற்றை ஏற்று நடத்தியிருந்தால், இவ்வளவு பணத்தையும் இவ்வளவு வசதிகளையும் கொண்டு அவர்களே நடத்தி யிருந்தால் இன்றைய தினம் பல வரி இனங்களைக் குறைத்திருக்க முடியும். அதோடு இன்றைய தினம் ஒரு முதலாளித்துவ வர்க்கத்தை, தேவையற்ற ஒரு வர்க்கத்தை, உருவாக்கி இருக்க வேண்டிய தேவையும் இல்லை. அது மட்டுமல்ல, தொழில் அமைதியை உருவாக்கியிருக்க முடியும். அது மட்டுமல்ல, நம் சர்க்கார் துறைகளின் மூலம் ஏராளமான பணத்தைச் செலவு செய்து தனியார் துறைகளில் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களை வாங்குவதை, இரட்டிப்பு மடங்கு விலை கொடுத்து வாங்குவதைத் தவிர்த்திருக்க முடியும். இதுவரையில் தொழில் இலாகாவினால் இந்த மாநிலத்தில் உருவாக்கப்பட்டதில், அது சரிவர நிறைவேற்றப்படவில்லை. ஆகையினால் இவ்வளவு பெரும் தீங்கைத் தொழில் துறையிலே முந்திய சர்க்கார் இழைத்திருக்



கிறது. இதை நாட்டு மக்கள் நன்றாக உணரத் தலைப்பட்டு விட்டார்கள், இது மன்னிக்க முடியாத, மறுக்க முடியாத, மாபெரும் குற்றம், இதை ஏற்கனவே இந்த சர்க்கார் செய்திருக்கிறது.

இந்த கொள்கை அடிப்படையில் தீவிரமான, புரட்சிகரமான ஒரு கொள்கையைக் கடைப்பிடித்தாலொழிய, இந்த நிலை நீடிக்குமானால் பொருளாதாரத் துறையிலே ஏற்படுகிற வசதியே நாட்டு மக்களுக்குக் கிடைக்காது. எனக்கு முன்னால் பேசியவர்கள் கூட ஸ்டேட் இன்கம் என்று கொடுத்திருப்பதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். 1955-56-ல் இருந்ததை விட இரண்டு மடங்கு பெருகியிருக்கிறது என்று சொல்லக் கூடும். ஒருவனுக்கு 10,000 ரூபாய் வருமானம் வந்து, ஒருவனுக்கு ஒன்றுமே வருமானம் இல்லாமல் இருந்தாலும் கூட, இரண்டு பேர்களுக்கும் சேர்ந்து வருவது 10,000 ரூபாய்—பர் காபிட்டா இன்கம் 5,000 ரூபாய். இத்தகைய முறையில் தவறான கருத்தை மக்களிடத்தில் பிரதிபலிக்கப் பயன்படுத்தலாமே தவிர, உண்மையான சூழ்நிலையை வெளிப்படுத்தும் குறிப்பே அல்ல அது.

இன்னும் சொல்லப் போனால், நம்முடைய நாட்டிலே கார் உற்பத்தி செய்வதற்கான நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. இங்கே கார் உற்பத்தி செய்கிற நிலையங்களும் இருக்கின்றன. கார் உற்பத்திக்குத் தேவையான துணைப் பொருள்களையும் நாம் உற்பத்தி செய்ய முடியும். அந்த ஆற்றல் மிக்க பொறியியல் வல்லுனர்களும் இருந்திருக்கிறார்கள். இவ்வளவு வசதிகள் இருந்தும், வாய்ப்புக்கள் இருந்தும், மலிவு விலைக் கார்த் திட்டத்தை ஏன் அந்தச் சர்க்கார் இருபது ஆண்டுக் காலமாக ஏற்று நடத்தவில்லை என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஏராளமான அளவில், காடுகளில் முந்திரி மரங்களை வைத்துப் பயிரிட்டு வருகிறோம். அதிலே ஏராளமான மூலப்பொருள்கள் கிடைத்து வருகின்றன. அண்டை மாநிலமான கேரள மாநிலத்தில் அதற்கான தொழிற்சாலைகள் நிறுவியிருக்கிறார்கள். இந்த மாநிலத்தில் ஏன் அத்தகைய தொழிற்சாலைகளைப் பொதுப் துறையில் நிறுவவில்லை ?

இதையெல்லாம் கவனிக்கும்போது, வேண்டுமென்றே ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கு எல்லா வசதிகளையும் தேடித் தந்து, பொது மக்களின் பணத்தையும் தந்து, அவர்கள் நன்றாக வாழ வேண்டுமென்ற அடிப்படையில் அவர்களை மட்டும் வாழவைத்து அவர்கள் மூலம் வசதிகளைப் பெற்று கட்சியின் நலன்கள் பெருக்கிக்கொள்ளப்பட்டிருக்கின்றனவே தவிர, நாட்டு நலங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. இதை நம் சர்க்கார் உணர்ந்து, சமதர்ம அடிப்படையில், முதலாளித்துவத்தை இப்படிக் காப்பாற்றி வந்த அதிகார வர்க்கங்களை உடனடியாக மாற்றி அமைத்து, திட்டங்களை நிறைவேற்றும் அடிப்படையில் இலாகாவிலே சீரமைப்புச் செய்து, திறமையாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம் வரவு-செலவுத் திட்டத்திலே மகிழ்ச்சிக்குரிய ஒன்று—கடந்த ஆண்டிலே தான் திடீரென்று ஸ்டேட் செக்டாரை டெவலப் பண்ண வேண்டுமென்று இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் என்று ஒன்றை உருவாக்கி யிருக்கிறார்கள்—ஏற்கெனவே ஒதுக்கப்பட்டிருந்தது ஒரு கோடி ரூபாய். இப்போது மூன்று கோடி ரூபாய்களுக்கு மேல் ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்கது. ஆகவே, இனிமேல் ஆரம்பிக்கப்படுகிற தொழில்கள், ஆரம்பிக்கப் படுகிற உற்பத்திச் சாதனங்கள் செலவிடப்படுகிற ஏராளத் தொகைகள் எல்லாம், மக்களின் நலனைப் பொறுத்து, பொதுத் துறையில் ஆரம்பித்து, வேலை வாய்ப்பை அதிகரித்து, வருவாயைப் பெருக்கி, வரிகளைக் குறைத்து, சமதர்மத் தொழில் கொள்கையை அனுசரிக்க வேண்டும். அந்த முறையில் தொழில் கொள்கையை அனுசரித்து, நம்பிக்கை உணர்ச்சியை மக்களிடம் ஊட்ட வேண்டுமென்று கேட்டு, கடந்த காலத்தில் நடந்து வந்த பாவ காரியம் முடியட்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்: மதிப்பிற்குரிய சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, எனது வெட்டுப் பிரேரணைமீது பேசும் முறையிலே என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கே வைக்கிறேன்.

எத்தனையோ தொழில்கள்—பெரிய பெரிய தொழில்கள்—ஏற்பட்டதிலுலே இப்போது இருக்கிற சிக்கல் எல்லோருக்கும் தெரியும். கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டு விட்டன. கிராம மக்களெல்லாம் அங்கே வேலையில்லாமல், வேலையில்லாத் திண்டாட்டம் காரணமாக, சென்னை, கோவை, மதுரை போன்ற பெரிய பெரிய நகரங்களுக்குக் குடிபெயர்ந்து விட்டார்கள். அப்படி வந்தவர்களுக்கு வாழ இடமில்லை, இருக்க வசதி இல்லை; அவர்கள் நடைபாதை வாசிகளாகவும், குடிசை வாசிகளாகவும் மாறினார்கள். இன்று சென்னையில் ஏற்பட்டிருக்கிற தீ விபத்துக்களையும் தவிர்க்க வேண்டுமானால், இந்த நிலைமை மாறுவதற்கு அடிப்படையான காரியங்களைச் செய்ய வேண்டும்.

சாதாரணமாக பெரும் பெரும் தொழில்களைக் கூட ஓரளவுக்கு டி-சென்ட்ரலைஸ் செய்து, பிரித்து, சிறு தொழில்களாகச் செய்ய முடியும். ஒரு காலத்தில் பெரிய ஆயில் என்ஜின்கள் வைத்துச் செய்த அந்தத் தொழில்களை மின்சார வசதி உள்ள இந்த நாளில், அந்தந்தக் கிராமங்களில் செய்ய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. 'இரும்பைக் காய்ச்சி உருக்கிவிடுவீரே, யந்திரங்கள் பல செய்திடுவீரே, ஆயுதம் செய்வோம், காகிதம் செய்வோம்' என்றெல்லாம் நாம் பேசினோம். பெரிய பெரிய காகித ஆலைகள், பெரிய பெரிய இரும்புத் தொழிற்சாலைகள் ஏற்படுத்த முயற்சிக்கிறோம். சேலம் இரும்பாலைகூட அந்த முறையில் வற்புறுத்தப்படுவது தான் ஆனாலும் கிராமங்களில் இருக்கிற ஒரே தொழில் வேளாண்மை தான்—விவசாயம் தான். விவசாய்த்திலே மக்களுக்கு வாய்ப்பு இல்லை என்றால், விவசாயத்திலே வழி இல்லையென்றால், மக்கள்





பெருக்கம் ஏற்பட்டுவிட்டால், அவர்கள் பட்டணங்களுக்குக் குடிபெயர வேண்டியதுதானே. இந்தக் குறை தீர வெளி நாடுகளைப் பார்க்கவேண்டும். ஜப்பானில் குடிசைத் தொழில்கள் பெருக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம். ஸ்விட்சர்லாந்தில் குடிசைத் தொழில்கள் பெருக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம். அவரவர் இருக்கையிலேயே, ஜாகையிலேயே, தொழில் செய்வது, என்ற முறையில் கடிகாரங்களுக்குச் சிறு சிறு பாகங்கள் செய்வது, சிறு சிறு யந்திரங்கள் செய்வது, சிறு சிறு தொழில்கள் செய்வது என்று இருப்பது போல இங்கும் அதே மாதிரிச் செய்ய முடியும். கிராமங்களுக்குத் திரும்பிப் போ'—பாக் டு தி வில்லேஜஸ்—என்று ஓயாது பறைசாற்றி வருவதில் பயன் இல்லை. கிராமங்கள் மக்கள் வாழுவதற்கு ஏற்ற இடமாக ஆகவேண்டும். அங்கே வாழ்க்கை வசதி, தொழில் வசதிகள் எல்லாம் வேண்டும். குடிசைத் தொழில்கள் பெருக வேண்டும். கிராமங்களில் தொழில்களைப் பெருக்க எத்தனையோ வசதிகள் இருக்கின்றன. இப்போது நம் நாட்டை எடுத்துக் கொண்டால், 'பஞ்சாபைப் பார்' என்று சொல்லுகிறார்கள். பஞ்சாபில் அப்படிப்பட்ட சிறு தொழில்கள் நிறையப் பெருகி, மக்கள் வசதியோடு நிறைய வருவாய் பெற்று, அந்தந்த கிராமங்களில் வாழும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று நாம் பத்திரிகைகளில் படிக்கிறோம். நேரில் சென்று பார்த்தும் இருக்கிறோம். இதையெல்லாம் பஞ்சாபைப் பார்த்து ஓரளவுக்கு பின்பற்ற வேண்டியிருக்கிறதே, தமிழகம் இவ்வளவு பிற்போக்காக இன்னும் இருந்து கொண்டு பட்டணங்களுக்கு வந்து தான் செய்ய வேண்டும், எல்லாத் தொழில்களையும் இங்கே தான் ஆரம்பிப்பது என்ற நிலைமை மாறவேண்டுமானால், சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் நிறைய வளர வேண்டும், கிராமங்களில் வேளாண்மைக்கு ஏற்ற உபதொழில்களையும், மற்ற தொழில்களையும் செய்ய முடியும். எல்லாக் காரியங்களுக்கும் தொழிற்சாலை, தொழிற்சாலை என்று பறைசாற்றிக்கொண்டு இருப்போமானால், பெரிய தொழிற்சாலையிலே கோடிக்கணக்கான ரூபாய் அளவுக்குத் தொகையை முதலீடு செய்து, அந்தக் தொகைக்கு ஏற்ற வட்டியோ டிவிடெண்டோ 10-15 வருஷங்களுக்குக் கிடைக்கவே கிடைக்காத நிலை ஏற்படலாம். சிறு தொழிலுக்குத் தேவையான தொகை சொற்பம்தான். 10 குடிசைத் தொழில்கள் ஏற்படவேண்டுமானால், அவைகளுக்குப் பெரிய முதலீடு வேண்டியதில்லை. பெரிய அளவுக்குக் கடன் தொகை கொடுக்க வேண்டியதில்லை. அவர்களுக்கு இப்போது கிணறு வெட்ட மானியம் கொடுப்பது மாதிரி, விவசாயத்திற்கு மான்யம் கொடுப்பது மாதிரி ஓரளவு மானியமாகவும், ஓரளவு கடனாகவும் கொடுக்கலாம். சாதாரணமாக 500 ரூபாய் கடனாகவும், 500 ரூபாய் மானியமாகவும் கொடுக்கலாம், அல்லது அதைவிடப் பெரும் தொழிலாக இருந்தால் 5,000 ரூபாய் கடனாகவும், 5,000 ரூபாய் மானியமாகவும் கொடுக்கலாம்; அல்லது அதைவிடப் பெரிதான, மத்திய தரத் தொழிலாக இருந்தால் 25,000 ரூபாய் கடனாகவும், 25,000 ரூபாய் மானியமாகவும் கொடுக்கலாம். அப்படி அவர்களை உற்சாகப்

படுத்தக் கூடிய அளவில் கடனைக் கொடுத்து, திரும்ப வட்டியையும் கடன் தொகையையும் வாங்குகிற நிலையை ஏற்படுத்தி, எந்த எந்தத் தொழில்களை எப்படியெப்படியெல்லாம் நடத்தலாம் என்று தீர்மானித்து, தொழில் வளத்தை ஏற்படுத்த சர்க்கார் ஆவன செய்ய வேண்டும். நல்ல விளம்பரங்களைப் பெரிய அளவில் செய்து, என்னென்ன கிராமங்களில் என்னென்ன சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் செய்யலாம் என்று ஆய்ந்து, வேண்டியதை மாநில மட்டத்திலிருந்து மாவட்டங்களிலும், வட்டங்களிலேயும் தொழில்களை வளர்ப்பதற்கு, இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே வேண்டிய முறைகளைக் கையாளவேண்டும். சிறு தொழில்கள் வளர்வதற்கு, கிராமத் தொழில்கள் வளர்வதற்கு சர்க்கார் செய்துகொடுக்கும் வசதிகள் என்ன என்பதைப் புத்தகமாக வெளியிட்டால் மட்டும் எல்லோருக்கும் விஷயங்கள் அதிகம் தெரிந்துவிடாது. இதைப்பற்றிய விளம்பரம் நிறைய வேண்டும். ஒரு இடத்தில் பனை மரங்கள் நிறைய இருந்தால், அந்த இடத்தில் பனை நாரை உரிப்பது, பிரஷ் போன்ற சிறு கைத்தொழில்களை அங்கே செய்யலாம். எப்படி செய்யலாம் என்பதையெல்லாம் பற்றி நல்ல பயிற்சி கொடுக்கவேண்டும். அதே மாதிரி பெரிய நூற்பு ஆலைகள் உள்ள இடங்களில் என்னென்ன உப தொழில்கள் நடத்தலாம் என்பதைப்பற்றியெல்லாம் பொதுமக்களிடையே விளம்பரம் செய்யப்படவேண்டும். உதாரணமாக கைக்குட்டைகளில் அழகு செய்யவேண்டுமென்றால், அது கைவேலை மூலம்தான் செய்ய முடியும், குடிசைத் தொழில் மூலம்தான் செய்ய முடியும். இதையெல்லாம் கவனித்து ஏற்பாடு செய்வதற்கு ஆங்காங்கு திறமைமிக்க, அனுபவமுள்ள அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும். வேறு மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட அதிகாரிகளாக இருந்தாலும் பரவாயில்லை. அவர்களைக் கொண்டு சிறு தொழில்களை நல்ல முறையில் வளர்ப்பதற்கு நாம் முயற்சி செய்யவேண்டும். பெரிய தொழில்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்குகிறோம். அதில் பத்தில் ஒரு பங்காவது, அதாவது பெரிய தொழில்களுக்கு ரூ. 1 கோடி என்றால், சிறிய தொழில்களுக்கு ரூ. 10 லட்சம் ஒதுக்கினால், அவை நல்ல முறையில் முன்னேறிவிடும். மாவட்டங்கள் அனைத்திலும் சிறு தொழில்கள் பரவலாக ஏற்படவேண்டும். கிராமப்புறங்களில் மக்கள் தங்கி, அந்தந்த இடங்களில் நல்ல தொழில்களைத் துவக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். பட்டணத்திற்கு நிறைய பேர்கள் வந்துகொண்டு இருக்கிற நிலைமை ஏற்படாமல் தடுக்க வேண்டும். மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் இப்பொழுது இருக்கிற குடிசைவாழ் மக்களுடைய பிரச்சினைகளை சமாளிக்கலாம் என்றாலும், மேலும் பட்டணத்திற்கு வருகிற மக்களைத் தடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். 'கெட்டும் பட்டணம் போ" என்று கெட்டவர்கள் பட்டணம் போவதைத் தடுக்கவேண்டுமென்றால்—பட்டணத்திற்கு வரவேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர்க்கவேண்டுமென்றால்—தங்கள் தங்கள் ஊரிலேயே வாழலாம், தங்கள் ஊர்தான் தங்களுக்கு சொர்க்கம்,



அங்கே தொழில்கள் செய்யலாம் என்ற நிலைமையை ஏற்படுத்தித் தரவேண்டும். நமது சர்க்கார் கிராமங்களிலுள்ள நிலைகளை உன்னிப்பாக கவனித்து, உற்று நோக்கி, அந்தந்த இடங்களில் என்னென்ன தொழில்கள் செய்ய முடியுமோ அவைகளைச் செய்வதற்கான வாய்ப்பு, வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். ஒரு ஊரில் வேளாண்மைத் தொழில் மட்டும் இருக்கலாம், ஒரு ஊரில் நெசவுத் தொழில் மட்டும் இருக்கலாம். அங்கெல்லாம் வேறு என்ன உபதொழில்கள் செய்யலாம் என்று தெரிந்து, அதைச் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் முற்படவேண்டும். அதுபற்றி அரசாங்கம் தீர ஆராய்ந்து, அதற்கு வேண்டிய வழிவகைகளையெல்லாம் செய்வதற்கான முயற்சியை கனம் தொழில் அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்—அவர்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்காகத்தான்—நான் இந்த வெட்டுப் பிரேரணையைக் கொண்டுவந்தேன். சிறு தொழில்கள் வளர ஒரு குழுவையோ அல்லது பல குழுக்களையோ ஏற்படுத்தி, தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** பெருமதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் தொழில் மான்யத்தின் மீது பேசக்கூடிய நேரத்தில், நமது தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்தாற்போல் இருக்கக்கூடியது கைத்தறி நெசவுத் தொழில், அதற்கு அடுத்தாற்போல் இருப்பது பீடித் தொழில் என்பதைக் கூறிக்கொள்கிறேன். இதுபோன்ற தொழில்களில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்களுக்கு இன்றையதினம் உண்மையிலேயே சரியான பாதுகாப்பும், அந்தத் தொழில்களுக்கான உத்திரவாதமும் இல்லாத ஒரு நிலைமைதான் இருந்து வருகிறது. 1961-ம் ஆண்டில் எடுத்த கணக்குப்படி 7 லட்சம் தறிகளாக இருந்தவை, இன்றையதினம் 5 லட்சமாக மாறியிருக்கின்றன. ஏற்கனவே 7 லட்சம் கைத்தறி நெசவு தொழிலாளர்களுக்கு வாக்குறுதி கொடுக்கப்பட்டது. 'கூட்டுறவு ஸ்பின்னிங் ஆலைகள், நூல் ஆலைகளை ஆரம்பித்து, அவைகளில் உற்பத்தியாகக்கூடிய நூலை குறைந்த விலையிலேயே கொடுத்து, நாங்கள் உங்களைப் பாதுகாக்கிறோம்' என்றெல்லாம் ஏற்கனவே இருந்த அமைச்சரவை கூறிற்று. ஆனால், இதுவரையிலே குறைந்த விலையிலே நூல் கொடுக்கப்படாத காரணத்தினால், மேலும் அந்தத் தொழிலுக்கு சரியான பாதுகாப்பு இல்லாத ஒரு நிலையிலே, கைத்தறி நெசவுத் தொழில் இன்றைக்கு க்ஷீணித்துவிட்டது. அதன் காரணமாக பல கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் குடும்பங்கள் இறந்தன என்பது மாத்திரமல்ல. அவர்கள் நாடோடிகள் போல ஊர் ஊராகச் சுற்றி அலைந்து கூலி வேலை மற்ற வேலைகளில் ஈடுபட்டு, மற்றும் பல்வகை இன்னல்களுக்கு உள்ளாகக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தான் நாம் இன்றைக்குப் பார்க்கிறோம். ஆகவேதான் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு உண்மையிலேயே பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்றால், அந்தத் தொழிலுக்கு பாதுகாப்புக்

கொடுக்கவேண்டுமென்றால், குறைந்தபட்சம் கூட்டுறவு நூற்பு ஆலைகளில் உற்பத்தியாகக்கூடிய நூலையாவது குறைந்த விலையில், அடக்க விலையில் கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும். அப்பொழுதுதான் மில் அதிபர்களுக்கு எதிராக போட்டி போடமுடியாத நிலைமையில் இருக்கிற அந்தத் தொழில் நல்ல முறையில் இயங்க முடியும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று ஏற்கனவே அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்து, ஏதோ ஒரு சில இடங்களில் வீடுகளும் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. கூட்டுறவு சங்கங்களில் வேலையே கிடையாது. ஏதோ ஓரளவுக்கு அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டாலும், அந்த ஊதியத்தைக்கொண்டு அவர்கள் வாழ்க்கை நடத்தமுடியாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் அவர்கள் எப்படி வீடு கட்டிக்கொள்ள வாங்கின பணத்தை திருப்பிக் கட்ட முடியும்? அந்த வீடுகளுக்காக வாங்கின பணத்தை திருப்பிக் கட்ட முடியாத நிலையில் அவர்கள் இருக்கிற காரணத்தினால், அவர்கள் கொடுக்கவேண்டிய கடனை வஜா செய்வது தான் மிகவும் நல்லது என்பதை இந்த நேரத்தில் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

அதே போன்று திட்டவட்டமான சரியான சட்டம் இல்லாத காரணத்தினால், இன்றைக்கு பீடித் தொழில் நாளுக்கு நாள் நசித்துப் போகக்கூடிய அளவுக்கு, சரியான முறையில் இல்லாத அளவுக்கு, மோசமான நிலைமையை நோக்கி போகக்கூடிய அளவுக்கு நிலைமைகள் இருந்துகொண்டு வருகின்றன. அதற்கான சட்டத்தை திட்டவட்டமாக அமுல்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்படவேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்லிக் கொள்கிறேன்.

குறிப்பாக தனிப்பட்டவர்களுடைய சொத்துக்கு உச்ச வரம்பு கட்டவேண்டும் என்கின்ற அளவுக்கு மத்திய சர்க்கார் மட்டுமல்ல, அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டில்கூட பல ஆண்டுகளாக தீர்மானம் நிறைவேற்றிக்கொண்டு வருகிறார்கள். ஆனால், அதை நடைமுறையில் அமுல் படுத்தியிருக்கிறார்களா என்று பார்த்தால் கிடையவே கிடையாது. அகில இந்திய ரீதியிலே எடுத்துப் பார்த்தால், இரண்டு குடும்பங்கள்தான், டாடா, பிர்லா இந்த இரண்டு குடும்பங்களிடம் மாத்திரம் 650, 700 கோடி ரூபாய் வரையிலே ஒரு வருடத்தில் டர்ன்ஓவர் ஆகக்கூடிய அளவில் தொழில்களில் பெரும் பகுதி அவர்களிடத்தில் இருக்கின்றன. இந்த சர்க்கார் வருடத்திற்கு எந்த அளவுக்கு பட்ஜெட் போடுகிறதோ அதைப்போல 3, 4 மடங்கு அளவுக்கு பணத்தை ஒரு வருஷத்தில் தொழிலில் ஈடுபடுத்தக்கூடிய நிலைமையில் அந்தக் குடும்பங்கள் இருக்கின்றன என்பதைப் பார்க்கக்கூடிய நேரத்தில் ஏகபோகமாக ஒரு சில குடும்பங்களின் கையிலே மட்டிலும் தொழில்கள் இருந்துவருகின்றன என்பதைத்தான் அது குறிப்



பிடுகிறது. அதே போன்று தமிழகத்தை எடுத்துக்கொண்டால், டி.வி.எஸ்., டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஆகிய ஸ்தாபனங்கள்தான் ஏகபோகமாக தொழில்களை அனுபவிக்கக்கூடிய அளவுக்கு நிலைமை இருந்துவருகிறது. பஸ்ஸை எடுத்துக்கொண்டாலும் சரி, லாரியை எடுத்துக்கொண்டாலும் சரி அல்லது வேறு எந்தவிதமான தொழிலை எடுத்துக்கொண்டாலும் சரி, ஏகபோகமாக ஒரு சிலர் கையில்மட்டும் தொழில்கள் குவியக்கூடிய நிலைமை இருக்கிறது. அதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும். மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு குடும்பம், அல்லது 4, 5 பேர்கள் சேர்ந்து தொழில்களை நடத்தவேண்டும் என்கின்ற அளவுக்கு ஆர்வத்தோடு முன்னுக்கு வருகிறார்கள் என்று சொன்னால், அவர்களை ஊக்குவிக்கக்கூடிய தன்மையிலே, அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய தன்மையிலே நிலைமைகள் இருக்கவேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று சென்னையிலும், சென்னையைச் சுற்றிலும்தான் இன்றைக்கு ஏராளமான தொழிற்சாலைகள், பெருந்த தொழில்கள் குவிந்து கிடக்கின்றன. இதுபோன்று ஒரு குறிப்பிட்ட இடத்தில் தொழில்கள் குவிந்துகிடக்கின்ற நிலைமை மாற்றப்படவேண்டும். ஒருபுறத்தில் கிராமங்களில் தொழில்களை ஆரம்பிக்க வேண்டும், கிராமப்புறங்களில் தொழிற்சாலைகளை ஆரம்பித்து, அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் குறிப்பிட்ட ஒரு சில இடங்களில் இப்படி தொழில்கள் குவிந்து கிடக்குமேயானால், மற்ற மாவட்டங்களில் நிலைமை என்ன ஆவது என்பதையும் நாம் அவசியம் கவனித்துப் பார்க்கவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஆகவே, இன்றைக்கு ஏகபோகமாக அனுபவிக்கும் நிலை இருக்கக் கூடாது. பாங்குகளைத் தேசியமயமாக்க முயற்சிகள் செய்ய வேண்டும். மத்திய சர்க்காருக்கு ராச்சிய சர்க்கார் ஆலோசனைகள் கொடுக்க வேண்டும்.

இன்றைக்கு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பொருள்கள் செய்ய, நம் ராச்சியத்திலே காட்பாடியில் ஆரம்பிக்க முயற்சி எடுக்க இருந்தது. அது இப்பொழுது செயல்படவில்லை. அதை ஆரம்பிக்க முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்றையதினம் ஸ்டெயின்லெஸ் ஸ்டீலுக்குக் கோட்டா அந்தத் தொழிலில் ஈடுபடாதவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் துர்வினியோகம் செய்யும் நிலைமை இருக்கிறது. அதைத் தடுக்க வழிவகை காணவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். அதைப் பரிசீலனைசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதோடு அனுபவம் பெற்றவர்கள் பெறுவதற்கான வழியையும் செய்யவேண்டும்.

இன்றைக்குத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள், மேலும் அனுபவம் பெற வேண்டும் என்று வெளிநாடுகளுக்கு அனுப்பப் படுகிறார்கள். ஆனால் அவர்கள் வந்தபிறகு அவர்களுடைய

அனுபவம் உபயோகப்படும் முறையில் அவர்களுக்குப் பதவிகள் கொடுக்கப்படாமல், கீழ் மட்டத்திலே சின்ன உத்தியோகங்களைக் கொடுக்கிறார்கள். அனுபவம் இல்லாதவர்கள் மேலே வேலைசெய்யும் நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நிலை இருப்பதால் தொழில் வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படுகிறது. அது தவிர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக, குந்தாவிலே, கனடியன் உதவி காரணமாக, வேலைகள் நடந்தன. அவர்கள் உதவிகள் செய்திருக்கிறார்கள். அதிலே இறுதியாக, அவர்கள் இன்னும் 2, 3 கோடி உதவியளிக்க முன் வந்தும்கூட, மத்திய சர்க்கார் மறுப்பதாகத் தெரிகிறது. அந்த உதவியைப் பெற்று, தொழிற்சாலையை மேலும் அபிவிருத்தி செய்யக் கூடிய முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று தெரிவித்துக் கொண்டு என் வார்த்தைகளை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. கி. ஜயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் அவைமுன் இருக்கும் தொழில் மானியக் கோரிக்கையை ஆதரித்து, ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர், 20 ஆண்டு கால ஆட்சியில் பெரிய பெரிய தொழிற் சாலைகள் ஏற்பட்டிருப்பதாகவும், இன்று தமிழகத்தில் ஏற்பட்டிருக்கும் இந்தப் புதிய ஆட்சியில் அப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அமைக்கும் முயற்சியை மேற்கொள்ளவில்லை என்ற முறையில் பேசினார்கள். ஆனால் கடந்த கால ஆட்சியில்கூட அவர்கள் குறிப்பிட்ட அளவிற்குத் தொழில் வளர்ச்சி அரசுத் துறையில் ஏற்பட்டுவிடவில்லை. முன்னாள் அரசு தனியார் துறையில் வளர்ச்சி என்ற முறையில் ஈடுபட்டிருந்தது. இந்த நிலையில் இன்றைக்கு வந்திருக்கும் நம்முடைய சர்க்கார், என்ன செய்ய இருக்கிறது என்று பார்க்கவேண்டும். இப்பொழுது, உலகத்திலேயே தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு பக்கத்திலே பணப் பெருக்கம் ஏற்பட்டிருந்தாலும் கூட, அதற்கு நேரிடையாக தொழில் மந்தமும் பெரும் அளவில் ஏற்பட்டிருக்கிறது. இருபது ஆண்டுக் காலத்தில் இவர்கள் செய்தது போல அல்லாமல், இன்றைக்கு மாண்புமிகு முதல் அமைச்சர் என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால், இரும்புத் தொழிற்சாலையை மாநில அரசே மேற்கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டால், துணிந்து மேற்கொள்ளும் என்று அறிவித்திருக்கிறார்கள். மத்திய அரசு ஒத்துக்கொள்ளா விட்டால், அந்த முறையில் எதிர்காலத்தில் ஒரு பெரிய மாற்றத்தையும் காண்போம். அதே நேரத்திலே, தனியார் துறையில் 'கன்ஸ்யூமர்ஸ் இண்டஸ்ட்ரீஸ்' பெரும் அளவில் ஏற்பட்டு இருந்தாலும், அவ்வப்பொழுது அவை திறமையான முறையில் கண்காணிக்கப்படும். அவை, இந்த அரசாங்கம் மேற்கொள்ளும் அத்தனை செயல்களையும் பெரும்பான்மையான மக்கள் நன்மைக்கே என்று மக்கள் பாராட்டுகிறார்கள். ஆகவே 'கன்ஸ்யூமர்ஸ் இண்டஸ்ட்ரீஸ்' மூலம் உற்பத்தியாகின்ற பொருள்கள் நிச்சயமாகச் சமுதாயத்தில் உள்ள பெரும்பான்மையான மக்களுக்குத் தடங்கல் இல்லாமல் கிடைக்க அரசு பாடுபடும் என்று நம்புகிறேன்.





இன்றைக்குச் சர்க்கரைத் தொழிலில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. கரும்புக்கு அதிக விலை வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதே நேரத்திலே வெல்லத்திற்கும் நாட்டுச் சர்க்கரைக்கும், கரும்பு அதிகமாகக் கொடுத்து அதன் மூலம் குறைந்த அளவே சர்க்கரையைப் பெறுகின்றோம் என்பதையும் பார்க்க வேண்டும். ஆகவே, சர்க்கரை ஆலைகளைக் கண்காணித்து, சற்று விலையை அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்றைக்கு உள்ள ஆலைகள் வரும் ஆண்டுகளில் அதிக உற்பத்திக்கு பாடுபடும் என்று நம்புகிறேன்.

இந்த மாநிலத்தில் அரசுத் துறையில் பெரிய பெரிய தொழிற் சாலைகளை மேற்கொண்டாலும், குடிசைத் தொழில், சிறுரகத் தொழிற்சாலைகள் இவற்றை அதிக அளவில் ஏற்படுத்த, ஏறத்தாழ ரூ. 4 லட்சம் அதிகமாக ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுகிறேன். குடிசைத் தொழில், சிறு ரகத் தொழில், இவற்றை ஆங்காங்கே நல்ல முறையில் செயல்படுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

நம்முடைய அரசாங்கம் நடத்தும் பல விற்பனை நிலையங்கள் நட்டத்தில் நடக்கின்றன என்று தெரிகிறது. அப்படிப்பட்ட நூற்பாலைகளில் நட்டத்தைத் தீர்க்க முடியுமா என்று பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் அவற்றை மூடிவிடலாமா என்று பார்க்க வேண்டும். அதைப்பற்றித் தீவிரமாக சிந்தித்துச் செயல்படவேண்டும். அதே நேரத்திலே, சேலம் ஜில்லாவைப் பொறுத்த வரையில், இரண்டு புதுத் திட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருப்பதைப் பாராட்டுகிறேன். சாகோ இண்டஸ்ட்ரியல் ஒர்க்கர்ஸ் கோவாபரேடிவ் சொசைடியும், காயர் ஒர்க்கர்ஸ் கோவாபரேடிவ் சொசைடியும் நல்ல முறையில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட முயற்சி எடுத்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

சேலம் நகர் கைத்தறி விஷயத்திலே, கைத்தறிக்குக் கலர் போட்ட சேலையையும், வேட்டியையும் ஒதுக்கவேண்டும் என்று பல காலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். வற்புறுத்திக் கொண்டு வந்திருக்கிறோம். அந்த விஷயத்திலும் புதிய அரசு பாடுபடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதே மாதிரி . . . (மணியடிக்கப்பட்டது).

* திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, தொழில் துறை மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்குக் கிராமங்களில் அதிகமாக ஒரு சில காலங்களில் வேலையில்லாமல் இருக்கிறார்கள். குறிப்பாக அந்த நேரங்களில் அவர்கள் ஈடுபடும் வகையில், உப தொழில்களாகச் சிலவற்றை ஆரம்பித்தால், அந்தக் கிராம மக்கள் நகரத்தை நோக்கி வந்து இங்கே நெருக்கடியை உண்டாக்கும் நிலையைப் போக்க முடியும். இன்றைக்குப் பல தொழில்களைப் பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் ஆரம்பிக்க ஏற்பாடு செய்திருந்தாலும், ஒன்றிரண்டு இடங்களில் அவ்வளவு சரியாக நடைபெறவில்லை. இன்றைக்கு இருக்கும்

[திரு. சோ. அழகர்சாமி] [1967 ஜூலை 8

நிலையில், அலுமினிய ஏனங்களைத் தயாரிக்கும் தொழில், பிரம்பு, மூங்கில் இவற்றை வைத்துச் செய்யக்கூடிய தொழில்கள் இவற்றை ஆரம்பிக்கலாம். அது மட்டுமல்ல, தீப்பெட்டி செய்வதைக் கிராமங்களில் மேற்கொண்டதன் விளைவாக அவர்களுக்கு வேலை வாய்ப்பு இருந்து வந்தது. இப்பொழுது உள்ள உத்தரவுப்படி ஏ, பி, ஸி என்று இருக்கக்கூடியதை மாற்றி, பி வகுப்புக்கு மாற்றப் பட்டிருக்கிறது. அதனால் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தீப்பெட்டித் தொழில் கிராம மக்களுக்கு நல்ல வேலை வாய்ப்பைக் கொடுத்துக்கொண்டு வந்தது. இன்றைக்கு இந்த உத்தரவின் காரணமாக, அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கெடும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்க நம்முடைய அரசு மத்திய சர்க்காரை அணுகி வற்புறுத்தி, முன்னால் இருந்த 'ஸி' கிளாஸ் சலுகையை தொடர்ந்து அளிக்கும் முறையை மாற்றக்கூடாது என்று முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன். அதேநேரத்தில் இன்று கைத்தறித்தொழில் மிக மோச மாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் நம்முடைய
மு. ப. 11-30 மாநிலத்தில் 13 கூட்டுறவு மில்கள் ஆரம்பித்திருந்தும் கைத்தறி நெசவாளர்களுக்கு மலிவாக நூல் கிடைக்காத நிலைமையிருப்பதால் தான். ஆகவே, இதைச் சீராகக் கவனித்து இன்று ஏற்பட்டி ருக்கும் நெருக்கடியைத் தணித்து அவர்களுக்கு நூல் விலை உயர்ந்து கஷ்ட நிலைமை ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். தொழிலில் ஈடுபட்டிருக்கும் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம் மூலமாகச் சேர்ந்து சங்கத்திலே உற்பத்தி செய்யக்கூடிய காலத்தில் அந்தத் துணி விற்பனை ஆகாத நிலைமை யில், அதை வாங்குவதற்கு மத்தியக் கூட்டுறவுச் சங்கம் அதிக நிதி ஒதுக்கித்தராத காரணத்தால் கூட்டுறவுச் சங்கங்களில் தேக்கம் ஏற்பட்டு, அந்தத் தொழில் நடக்க முடியாத நிலைமை, ஒரு மாதத்தில் இரண்டு வாரம், மூன்று வாரம்தான் அந்தத் தொழில் நடக்கும் நிலைமை மாதம் பூராவும் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஜவுளி விற்பனை செய்ததுபோக மீதியை வாங்கிக்கொள்ளச் செய்ய மத்திய சங்கத்திற்கு அரசாங்கம் அதிக நிதி ஒதுக்கித்தர வேண்டும். இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், அவர்களுக்கு அரசாங்கத்திலிருந்து, பேங்குகளிலிருந்து கொடுக்கப்படும் கடன்கள் முன்னால் வாங்கிய அளவுக்கு வாங்க முடியாத நிலை ஏற்பட்டு, சென்ற காலத்திலே சங்கங்களில் தொடர்ந்து விற்பனை இல்லாமல், தொழில் சரியாக நடக்க முடியாததுமான நிலைமை ஏற்பட்டது. அதைப் போக்குவதற்கும், அந்தக் கைத்தறியாளர் களுடைய தொழிலுக்குக் குறைந்த விலையில் நூல் கொடுப்பதற்கும் கூட்டுறவு மில்களுக்கு மானியமாகவோ, அல்லது விற்பதற்கு வேண்டிய உதவியையோ செய்து, கூட்டுறவுச் சங்கங்களுக்கு மலிவாக நூல் கொடுப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

தேக்கம் அடையக்கூடிய ஜவுளிகளை வாங்குவதற்கு மத்தியக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அதிக நிதி உதவி அளிக்க வேண்டும்.



1967 ஜூலை 8] [திரு. சோ. அழகர்சாமி]

இன்று கோவில்பட்டி வட்டாரத்தில் இதற்கு முன்னுள்ள அரசு கூட்டுறவு நூற்பு மில் ஏற்படுத்துவதாய் ஏற்பாடுகள் செய்து கொண்டு வந்தது. அந்த ஏற்பாட்டின்படி நூற்பு ஆலை எட்டய புரத்தில் பாரதியின் பெயரால் ஏற்படுத்தி அந்த வட்டாரத் திலுள்ள கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் அதிகமான நெசவாளர்களுக்கும், அதே நேரத்தில் பருத்தி உற்பத்தியாளர் களுக்கும், ஜமீன் ஒழிப்பினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

***திரு. டி. மார்டின்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் சார்ந்திருக்கும் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானத்தையொட்டி என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த மாநிலத்தில் முன்னாள் முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்களுடைய தலைமையில், முன்னாள் தொழிலமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்களுடைய ஒத்துழைப்பினால் விவசாய மாநிலம் என்றிருந்த இம்மாநிலம் தொழில் மாநிலம் என்று பெயரெடுத்து, பஞ்சாபை ஒத்த அளவுக்கு இந்த மாநிலம் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் கண்டிருக்கிறது. மேலும் 200 கோடி ரூபாய்க்கு மேல் மத்திய சர்க்காரின் தொகை இந்த மாநிலத்தில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. அதன் பயனாக 40,000 பேர் களுக்கு அதிகப்படியானவர்கள் இன்று மத்திய சர்க்கார் நிறுவி யிருக்கும் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்புப் பெற்றவர்களாகவும், மற்றும் தொழில் வளங்களுக்கான வாய்ப்பும், வசதியும் உடைய வர்களாகவும் இருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இண்டஸ் டிரியல் எஸ்டேட்டுகள் தொடக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் வேலை இழந்த பொற்கொல்லர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற் கான வசதிகள் செய்துகொடுக்க வேண்டும். மேலும், இன்று தொழிற்பேட்டைகள் அமைக்கும் நேரத்தில் வேலைவாய்ப்புத் தேடி ஏராளமான என்ஜினியரிங் கிராஜுவேட்டுகளும், பாலி டெக்னிக்குகளில் படித்தவர்களும் வேலைக்கு வருகிறார்கள். எனவே இந்த என்ஜினியரிங் காலேஜ்களும், பாலிடெக்னிக்குகளும் அதிகமாகத் தோற்றுவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். மேலும் பிற்பட்ட தொகுதிகளில், பிற்பட்ட இடங்களில் சர்க்கார் தொழிற்சாலைகள் நிறுவ வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. எனக்கு முன்பு பேசிய திருச்சி திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர் இந்த மாநிலத்தில் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன, அவை தனியார் துறையிலேதான் இருக்கின்றன என்று கூறினார்கள். நான், இந்த அரசாவது இனிமேல் சர்க்காரே சில பல தொழிற்சாலைகளை நடத்தவேண்டும்; அதற்கு முன் வரவேண்டுமென்று அவர்களை அழைக்கிறேன். அந்த விதமாகப் புதுத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படுகின்ற நேரத்தில் பிற்பட்ட பகுதிகளில் ஆரம்பிக்க வேண்டுமென்று நான் கேட்பதன் காரணம் என்னவென்றால், பிற்பட்ட பகுதியிலுள்ள நெல்லை

மாவட்டம், குறிப்பாக திருச்செந்தூர் தாலுக்கா, அதிலும் குறிப்பாக சாத்தான்குளத்தில் பனை மரங்கள் இருக்கின்றன. பனை மரங்களும் உடை மரங்களும், மூலப் பொருளாகவும் இருக்கின்ற காரணத்தால் அங்கே காகித ஆலையை சர்க்காரே முன் வந்து நடத்தலாம் என்று கூறிக்கொள்ளுகிறேன். பிரஷ்ஷஸ், தும்பு தொழிற்சாலையை சர்க்கார் நிறுவ வேண்டுமென்பது என் விருப்பம். அவ்வாறு செய்வதால் பனைமரத் தொழிலாளர்களுக்கு வேலையில்லாத மாதங்களில் அவர்களுக்கு வேலை செய்ய வாய்ப்புக் கொடுப்பதாக அமையும். பெரியதாழை, மணப்பாடு கிராமங்களில் ஃபிஷ்ஷிங் Canuing Industry ஒன்றைச் சர்க்கார் நிறுவினால் ஏழை மீனவர்களுக்குப் புனர் வாழ்வளிக்க உதவும்.

மேலும் கடல்கடந்து வந்து இன்று கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் தமிழர்களுக்குப் புனருத்தாரணம் அளிக்கும் முறையில் திருச்செந்தூர் தாலுக்காவில் அதிகமான தொழிற்சாலைகளை, சிறிய தொழிற்சாலைகளைச் சர்க்கார் நடத்தி, அந்தத் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தொழிற்சாலைகளில் இன்று ஒருவிதமான குழப்பநிலை இருக்கிறது. தொழிற்சாலைகள் நல்லமுறையில் நடக்க முடியாத, சுமுகமான நிலை இல்லாத ஒரு நிலைமை இருக்கிறது. இன்று பத்திரிகைகளிலே பார்க்கிறோம், 'ஊகாஸில் கதவடைப்பு என்று பெங்காலில் ஏற்பட்ட 'கேரோ' என்ற முற்றுகைப் போராட்டம் சென்னை மாநிலத்தையும் பற்றிக்கொள்வது போன்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்த அரசு மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு 'கேரோ' எங்கு ஆரம்பித்தாலும், அது எந்த முறையிலிருந்தாலும், வந்தாலும், அது நாட்டு முன்னேற்றத்தைத் தடை செய்யக்கூடியது என்பதை உணர்ந்து அதைத் தடை செய்ய வேண்டும். 'கேரோ' முறை ஊகாஸ் கம்பெனியில் ஆரம்பித்தாலும் சரி, வேறு எந்தத் தொழிற்சாலையில் ஆரம்பித்தாலும் சரி, அதைத் தடுக்க முன்வர வேண்டுமென்று நான் மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

திரு. ஏ. எம். ராஜா: தலைவரவர்களே, இந்த மானியத்தில் என்னுடைய கருத்தைக் கூறிக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் அளித்த உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் அந்த நாட்டின் தொழில் வளர்ச்சியின் முன்னேற்றத்தைப் பொறுத்தே அமைந்திருக்கிறது. அந்த முறையிலே தமிழ் நாட்டின் தொழிற்சாலைகளிலேயிருந்து வரும் வருமானம் இந்த நாட்டின் வருமானத்தில் 22 சதவிகிதம்தான் இருக்கின்றது என்று புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. அந்த முறையை வைத்துக்கொண்டு பார்த்தால், தமிழ் நாடு இன்னும் தொழில் துறையில் பிற்பட்ட நிலையில்தான் இருக்கின்றது என்பது தெளிவாகி வருகின்றது. குறிப்பாகக் கனரகத்





தொழிலிலே தமிழகம் மிகவும் பிற்பட்ட நிலையில்தான் இருக்கின்றது. தமிழகத்திலே 'எக்ஸ்போர்ட் ஓரியண்டட் இண்டஸ்டிரீஸ்' ஏற்படுத்த நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. இதற்குக் கடந்த 15 ஆண்டுகளாக அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை, முயற்சிகள்கூட எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. முன்பிருந்த அரசு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்திய அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டதாய்க்கூடத் தெரியவில்லை. உலகின் பல பாகங்களுக்கும் குறிப்பாக கிழக்கும் தென்கிழக்குமாகச் செல்லும் கடல்வழித் தடங்கள் தமிழகத்தின் தெற்குத் துறைமுகங்களைத் தொட்டுக் கொண்டு செல்கின்றன. இந்த அரிய வாய்ப்பு இந்தியாவில் வேறு எந்த மாநிலத்துக்கும் இல்லை, தமிழகத்திற்கு மட்டுமே அமைந்திருக்கின்றது. இதன் மூலம் 'எக்ஸ்போர்ட் ஓரியண்டல்ட் இண்டஸ்டிரீஸ்' ஏற்படுத்தி வெளிநாட்டுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்வதால் தமிழகம் தொழில் வளத்தைப் பெருக்கிக் கொள்வதோடு, அந்நியச் செலாவணியையும் நாம் அதிகமாக ஈட்ட முடியும். அந்த வகையிலே புதிய தமிழக அரசு இந்திய அரசை வற்புறுத்தி அதற்கு வேண்டிய தொழில் நிறுவனங்களை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். இந்திய அரசு மறுத்தால் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். இதன் மூலம் ஏறக்குறைய 120 கோடி ரூபாய் வெளி நாட்டுச் செலாவணியைச் சம்பாதிக்க முடியும் என்று "நேஷனல் கவுன்சில் ஆஃப் அப்ளைட் எகனமிக் ரிசர்ச்" கூறியிருக்கின்றது.

அடுத்து, சேலம் இரும்புத் தொழிற்சாலையை எடுத்துக் கொண்டால், இந்தியாவிலேயே வேறு எந்த இரும்பு உருக்குத் தொழிற்சாலைக்கும் கிடைப்பதைவிட, கனிப் பொருள்கள் மிகவும் குறைந்த தூரத்தில் கிடைக்கின்றன. இதன் மூலம் உருக்குத் தொழிற்சாலையின் மூலதனச் செலவும் குறைந்த அளவிலே ஏற்படும். அதனால், ஏற்படுகின்ற போக்குவரத்துச் செலவும் குறையும். இதை உடனடியாக மத்திய அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று தமிழக மாநில சர்க்கார் மத்திய சர்க்காரோடு போராடிப் பெறவேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஏற்பட்டு, எல்லாவிதத் தொழிற்சாலைகளுக்கும் அடிப்படையான இரும்பு தமிழகத்திலேயே உற்பத்தி செய்யப்பட்டால், தமிழகத்தில் வேலை வாய்ப்புகள் அதிகமாகும். ஆகவே, சேலம் இரும்பு உருக்குத் தொழிற்சாலைத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். இந்திய அரசு தனது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏறக்குறைய 3,751 கோடி ரூபாயைப் பெரும் தொழில்களுக்காகவும், சுரங்கத் தொழில்களுக்காகவும் ஒதுக்கியிருப்பதில், தமிழகத்திற்கு நூறு கோடி ரூபாய்க்கும் குறைவாகத்தான் ஒதுக்கியிருக்கிறது. அதனால் தான் இந்தத் தமிழகத்தில் பெரிய கனரகத் தொழில்களை நாம்

[திரு. ஏ. எம். ராஜா] [1967 ஜூலை 8

ஏற்படுத்த முடியாத நிலையில் இருக்கிறோம். ஜனநாயக சோஷலிசம் பேசும் இந்திய சர்க்கார் தமிழக சர்க்காருக்குரிய நியாயமான பங்கைக் கொடுக்க முன்வரவேண்டும். நாட்டின் ஒற்றுமையைப்பற்றிப் பெரிதாகப் பேசுபவர்கள் மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்கார்களுக்கும் இடையிலே வேறுபாடு ஏற்படாத வகையில் நடந்துவரச் செய்திருக்க வேண்டும்.

வசதிகளும் வாய்ப்புகளும் செயற்திறன் மிக்க மனித சக்திகளும் நிறைந்த தமிழகத்தின் நியாயமான கோரிக்கைகளை மத்திய அரசு புறக்கணிப்பதன் காரணமாகத் தமிழக மக்களுடைய மனத்தில் கசப்பு உணர்ச்சி ஏற்பட்டு வருகிறது. இந்தக் கசப்பு உணர்ச்சி வளருமானால், நாட்டின் நல்வாழ்விற்குப் பிரிவினைதான் நமக்கு வழிசெய்யும் என்ற நம்பிக்கை மக்களிடத்திலே எழுந்தால், அந்தப் பிரிவினைச் சக்தியை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை இந்த மாமன்றத்தின் மூலம் இந்திய அரசுக்குத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

***திரு. எம். சுரேந்திரன்:** தலைவா அவர்களே, இன்றைக்குத் தேசத்தில் தொழிற் துறையில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுக் கொண்டு வருவதைப்போல் தோன்றுகிறது. உதாரணமாக, பஞ்சாலைத் தொழிலில் இந்த இராச்சியத்திலேயே கேந்திரமாக இருக்கக்கூடிய கோவை நகரத்திலுள்ள பல தொழிற்சாலைகள் வருஷக்கணக்கில் மூடிக் கிடக்கின்றன. அப்படி மூடிக்கிடக்கின்ற அந்தத் தொழிற்சாலைகளைத் திறப்பதற்காக இந்த அரசு சில முயற்சிகளை எடுத்துக்கொண்டு, அந்த முயற்சிகள் இன்னும் வெற்றிபெறாத நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன. அதோடு, பஞ்சாலைகளில் நெருக்கடி ஏற்பட்டதென்றால், அதன் விளைவாகக் கைத்தறித் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற லட்சக்கணக்கான தொழிலாளர்களும் பாதிக்கப்படுகிறார்கள். இம்மாதிரி மட்டுமல்லாமல், இன்ஜினியரிங் தொழில்கள், இரசாயனத் தொழில்கள், இவற்றிலெல்லாம்கூட நெருக்கடிகள் ஏற்பட்டு வருவதாகவும் கேள்விப்படுகிறோம். இம்மாதிரியான நெருக்கடிக்கு முதலாளிகள் பல்வேறு விதமான காரணங்களைக் கூறுகிறார்கள். பஞ்சு விலை ஏறி விட்டது, வரிகள் உயர்ந்துவிட்டன, தொழிலாளர்களின் சம்பளங்கள் உயர்ந்துவிட்டன, ஆகவே, எங்களால் தொழில்களை நடத்த முடியவில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். இம்மாதிரியான வாதங்கள் முதலாளிகளால் எப்பொழுதுமே சொல்லப்பட்டுவரும் வாதங்களே தவிர, புதிதான வாதங்கள் அல்ல. இருந்தாலுங்கூட, ஒன்று நமக்குப் புரிகிறது. பஞ்சாலைகள் இந்தத் தேசத்திலே மிக அதிகமாக ஆகிவிட்டிருக்கின்றன. பஞ்சாலைகளில் உண்டாக்கப் படுகிற உற்பத்தி, இந்தத் தேச மக்களுடைய தேவைக்குப் போதுமான அளவைவிட இன்னும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்று கணக்குகள் கூறுகின்றார்கள். அப்படியிருக்கும் அந்தத் தொழிலில் இருக்கும் மூலதனத்தை வேறு தொழில்களுக்கு மாற்றுவதற்கு முதலாளிகள் திட்டம் போட்டுக்கொண்டிருக்



1967 ஜூலை 8] [திரு. எம். சுரேந்திரன்]

கிறார்கள். இது இயல்பாக எல்லா முதலாளிகளும் செய்யக்கூடிய காரியம்தான். இம்மாதிரி இருக்கும் தொழில்களை அரசாங்கமே எடுத்து நடத்துவதன் மூலம் இதற்குப் பரிகாரம் காண முடியுமே தவிர, வேறு முறையிலே பரிகாரம் காணுவது என்றால், அது சந்தர்ப்பத்திற்கு ஒரு தடுப்பு முறையாக இருக்குமே தவிர, முறையான, சரியான, பரிகாரமாக ஆகப்போவதில்லை என்று தோன்றுகிறது. பஞ்சாலைத் தொழில்கள் போன்றவற்றை அரசாங்கம் எடுத்து நடத்துவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளாவிட்டால், அதிலே ஈடுபட்டு வேலை செய்துகொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பல நாட்களாக துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருப்பது மேலும் நீண்டுகொண்டே போகும். அதன் விளைவாகச் சமூக மோதல்கள், சமூகச் சிக்கல்கள், இப்படிப் பட்ட பல அம்சங்களைத் தோற்றுவிக்கும் என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த நாட்டிலே நான்கு விதமாகத் தொழில்களை வரையறுத்துக் கூறியிருக்கிறார்கள். காட்டேஜ் இன்டஸ்ட்ரிஸ், மைனர் இன்டஸ்ட்ரிஸ், மேஜர் இன்டஸ்ட்ரிஸ், ஹெவி இன்டஸ்ட்ரிஸ் என்று இப்படி நான்கு விதமாகத் தொழில்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த நான்கு வகைத் தொழில்களில், ஹெவி இன்டஸ்ட்ரீஸைப் பொறுத்தவரையில், மத்திய அரசாங்கமே நடத்த வேண்டும் என்ற ஒரு முடிவு செய்யப்பட்டிருந்தது. அரசாங்கமே நடத்தவேண்டும் என்ற அந்த முடிவைச் சமீப காலத்தில் மாற்றியிருப்பதற்கு உதாரணங்கள் இருக்கின்றன. மேட்டூரிலிருக்கும் மெட்ராஸ் அலுமினியம் தொழிற்சாலையைப் பொதுத் துறையில் எடுத்து நடத்தவேண்டும் என்று முடிவு எடுத்துக்கொண்டதற்குப் பின்னால், தனியார்த் துறையிலே விடப்பட்டு, அது நடந்து கொண்டு வருகிறது. அதிலே கடந்த வருஷம் கோடிக்கணக்கான ரூபாய் லாபம் வந்திருக்கிறது. வருங்காலத்திலும் நல்ல லாபம் வருவதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. இந்த நாட்டிலே அலுமினியம் போதுமானதாக இல்லை. ஆகவே, அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், இன்றைக்கிருக்கும் முதலாளிகள் தொழில்களைப்பற்றிப் பார்க்கும்போது, மூலதனத்தையும், அதிலிருக்கும் இயந்திரங்களையும், மூலப் பொருட்களையும் மட்டுந்தான் பார்க்கிறார்களே தவிர, அந்த மூலப் பொருட்களையும் இயந்திரங்களையும் இணைத்து, புதிய உற்பத்தியை உண்டாக்குவதற்குக் காரணமாயிருக்கிற தொழிலாளர்களைப் பற்றி, அவர்களுடைய உழைப்பைப்பற்றிச் சரியாகக் கவனிப்பதில்லை. தொழிற்சாலைகளில் இருக்கும் தொழிலாளர்களை நிர்வாகத்தினர் மிகக் கேவலமாக நடத்துகிறார்கள். தொழிலாளர்களை மிக மோசமான முறையில் நடத்துகிறார்கள். அங்கே சமீபத்தில் வேலைநிறுத்தம் நடைபெற்றது. தொழிலாளர்களுக்குள்ள பிரச்சினைகளைக் குறித்து அவர்கள் கோரிக்கைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்குப் பதிலாக, நிர்வாகத்தினர் முறையற்ற, சட்டவிரோதமான காரியங்களைத்

தொடர்ந்து செய்துகொண்டு வருகிறார்கள். அதோடு மட்டுமல்ல. அம்மாதிரிக் காரியங்களைச் செய்வதற்கு உதவியாக இன்றைக்கு ஆட்சியிலிருக்கும் கட்சியைச் சார்ந்த ஒருசிலரைப் பயன்படுத்திக் கொண்டு, அங்கே போட்டியாகச் சங்கங்களை ஆரம்பிக்க கட்டாயப் படுத்திக் கையெழுத்து வாங்குவது போன்ற காரியங்களைச் செய்து கொண்டு வருகிறார்கள். இம்மாதிரிக் காரியங்கள் இந்த நாட்டிலிருக்கும் முதலாளிகளால் செய்யப்பட்டு, அவற்றின் விளைவாகப் பல்வேறு விதமான சம்பவங்கள், பல்வேறு மோசமான காரியங்கள் நடைபெறுவதற்கு ஏதுவாகின்றன. ஆகவே, தொழிற்சாலை என்னும்போது, தொழிற்சாலைகளின் முதலாளிகள் இன்றைய நிலைமைகளைப் புரிந்துகொண்டு காரியங்கள் செய்வதில்லை. பழைய காலத்தில் இருந்ததைப்போலவே காரியங்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டிலே தொழிற்சாலை ஆரம்பிப்பதென்றால், அது இந்த நாட்டிலிருக்கும் மக்களுடைய சக்தியை, உழைப்புச் சக்தியை எவ்வளவு தூரம் பயன்படுத்த முடியும் என்று கணக்கிட்டுச் செய்வதில்லை. பணத்தையும் இயந்திரங்களையும் வைத்துக்கொண்டு ஏதோ செய்துவிடவேண்டும் என்றுதான் செய்யப்படுகிறதே தவிர, இந்த நாட்டில் இருக்கிற விவசாய மக்களைப் பயன்படுத்தி, அந்த உழைப்புச் சக்தி மற்றவர்களுக்கும் பயன்படும் வகையில் திட்டமிட்டுக் காரியங்கள் செய்வதில்லை. ஆகவே, இந்த இராச்சியத்தில் இருக்கும் தொழில்களெல்லாம் இப்பொழுது குவியலாக இருப்பதை மாற்றி, ஆங்காங்கு பரவலாக்கப்படுவதன் மூலம், மனித சக்தியைப் பயன்படுத்த முடியும். இந்த இராச்சியத்திலுள்ள மனித சக்தியைக் கணக்கிட்டு, அதை முறைப்படுத்திப் பயன்படுத்துவதற்கான ஒரு ஏற்பாட்டை இந்த அரசாங்கம் செய்தால் அது மிகவும் நலமாக இருக்கும். வருங்காலத்தில், இம்மாதிரியான தொழிற்சாலைகளிலிருந்து வரும் பணத்தையும் சரியான முறையில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

* திரு. எஸ். அக்னிராஜு: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தொழில்கள், தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவுகள் என்னும் தலைப்பின்கீழ் கொண்டுவரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கைகளை ஆதரித்து, என்னுடைய சில கருத்துக்களை நான் சொல்ல விழைகின்றேன்.

தொழில்களுக்கான மானியக் கோரிக்கையைப்பற்றிப் பேசுகின்ற நேரத்தில், இருபதாண்டுக் காலமாக இந்த நாட்டில் பெரிய பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட்டுக்கொண்டு வந்தன என்பதைப் பற்றியும், அவை நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன என்பதைப்பற்றியும் இருபதாண்டுக் காலமாக ஆட்சி செய்த கட்சியைச் சார்ந்த சில உறுப்பினர்கள் சொன்னார்கள். அப்படித் தொழிற்சாலைகளுக்கு மூலதனம் போட்டுச் செலவு செய்கிற நேரத்தில், அந்த மூலதனம் யார் யாரிடம் கொடுக்கப்பட்டது என்பதை நாம் எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில், நூற்றுக்கு



எழுபது பங்கு தனியார்த் துறையிலே செலவழிக்கப்பட்டு, தனியார் துறையின் மூலமாகப் பொருளாதாரத்திலே ஒருமுகமாகச் சேர்க்கப்பட்டு, தனிப்பட்டவர்களுடைய கையில் அந்த மூலதனம் போய்ச் சேர்ந்தது. ஒரு நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பொருளாதாரத்தில் தனிப்பட்டவர்கள் கையில் மூலதனம் சேர்ந்திருக்கிறதா, இல்லையா என்பதைப் பற்றி ஆராயக் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டு, அது மகலனோபஸ் அவர்கள் தலைமையின்கீழ் பணியாற்றி வந்தது. அவருடைய கருத்தைத் தெரிவிக்கின்ற நேரத்தில் இந்திய நாட்டினுடைய மொத்தச் சொத்தில் நூற்றுக்கு 60 பங்கு தனிப்பட்ட 75 முதலாளிகளுடைய கையில் இருக்கிறதென்பதைப்பற்றிச் சொன்னார்கள். அப்படி 75 முதலாளிகளின் கையில் இருக்கக்கூடிய சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் மிகுதியாக இருக்கின்றன வென்று சொல்லப்பட்டது. அரசாங்கமானது பெரிய தொழில்களை எடுத்து நடத்தினால், அப்படித் தனியார் கையில் இருக்கும் சொத்து நாளடைவில் சரிக்கட்டப்பட்டு, அதனால் நிச்சயம் சோஷலிச சமுதாயம் ஏற்பட்டு, ஏழை எளிய மக்கள் நல்வாழ்வு பெற வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மேலும், பெரிய பெரிய நகரங்களில் பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட்டு, அதனால் அங்கே வேலையில்லாத் திண்டாட்டமும், கிராமப்புறங்களிலுள்ள மக்கள் ஆயிரக்கணக்கான பேர்கள் நகரில் குடியேறியிருக்கிற காரணத்தினால் இட நெருக்கடியும் ஏற்படுகின்றன. அதே நேரத்தில் கிராமங்களில் இருக்கக்கூடிய தொழில்கள் பாதிக்கப்பட்டு விடுகின்றன. கிராமங்களில் சிறிய சிறிய தொழில்களை ஆரம்பிப்பதால், பெரிய நகரங்களில் இருக்கக்கூடிய இட நெருக்கடி குறையும். கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்க வழி பிறக்கும். ஜப்பான் நாட்டிலே நடைபெறுகின்ற தொழில்கள் எல்லாம் குடிசைத் தொழில்களாக, குடிசையில் வாழ்கின்ற மக்களுக்காக நடத்தப்படுபவைகளாக இருக்கின்றன. இதனால் எல்லா இடங்களும் தொழில் ஸ்தாபனங்களாக அமைந்திருக்கின்றன. மற்றும் ஸ்விட்ஸர்லாந்து நாட்டிலே கடியாரம் செய்வது குடிசைத் தொழிலாக இருக்கின்ற காரணத்தால், கிராமப்புற மக்கள் நகருக்குச் செல்லாமல், பரவலான முறையில் தொழில்கள் நாடெங்கும் அமைக்கப்பட்டு வருகின்றன. பெரிய நகரங்களில் தொழிற்சாலைகள் அமைக்காமல் நிச்சயமாக கிராமங்களுக்கும் விரிவுபடுத்தக்கூடிய நிலையில் ஏழை எளிய மக்கள் கிராமங்களிலிருந்து நகருக்குச் செல்ல வேண்டிய ஒரு நெருக்கடியான சூழ்நிலை அமையாது.

மேலும், வேலைவாய்ப்புத் தருகின்ற நேரத்தில் நகரத்திலிருந்து வரக்கூடியவர்களுக்குப் பெரிய சலுகை காட்டாமல், கிராமத்திலேயே இருக்கக்கூடியவர்களுக்கு வேலைவாய்ப்புத் தருகின்ற முறையில் சலுகை காட்டினால், மக்கள் கிராமப்புறத்திலேயே வசிக்கக்கூடிய ஒரு நிலை உருவாகும். கைத்தறித் தொழிலைப் பற்றியும், கதர்த் துணியைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒரு பக்கத்தில் பெரிய பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பித்துக் கொண்டு, இன்னொரு பக்கத்தில் கதருக்கும், கைத்தறிக்கும் மானியம் வழங்குவது முரண்பாடாக இருக்கிறது. தொழிற்புரட்சி எந்த ஒரு நாட்டில் ஆரம்பிக்கப்படுகிறதோ, அந்த ஒரு நாட்டில் தொழில்கள் எல்லாம் யந்திரமயமாக ஆகிவிடும். இங்கிலாந்து நாட்டிலும் இம்மாதிரித் தொழிற்புரட்சி ஏற்பட்டது. இப்போது தமிழகத்திலே நாம் தொழிற்புரட்சியை உண்டாக்குகின்ற நேரத்தில், கிராம மக்களுக்கு நல்ல வாய்ப்புத் தருகின்ற விதத்தில் குடிசைத் தொழில்களை யந்திரமயமாக்கி, வேலை வாய்ப்பை அதிகப் படுத்தித் தரக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையை திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் மேற்கொண்டு, விவசாயப் பிள்ளைகளுக்கும் மற்றவர்களுக்கும் வேலை வாய்ப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை மாவட்டம் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. சென்னைக்கு அடுத்த படியாக மதுரை என்று சொன்னாலும்கூட, தொழிற்துறையில் சென்னைக்கு அடுத்தபடியாக கோயம்புத்தூர், திருச்சியைப்பற்றித் தான் சொல்ல முடியும். மதுரை மாவட்டத்தில் எந்தவிதமான தொழிற்பேட்டையும் இல்லை. கப்பலூரிலே ஒரு பெரிய தொழிற் பேட்டை ஆரம்பித்திருக்கிறார்கள். அதில் எந்தவிதமான நடவடிக்கையும் செய்துதரவில்லை. அதற்கான நிலங்களை ஆர்ஜிதம் செய்கின்ற நேரத்தில், அரசாங்க நிலத்தை முழுவதும் ஒருமுறை தனிப்பட்டவர்கள் ஏலம் விட்டிருக்கிறார்கள். இதைப் பற்றி அமைச்சர் அவர்களுக்குப் புகார்க் கடிதம் கொடுத்திருக் கிறேன். இதுபற்றிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE: Mr. Deputy Speaker, Sir, at the very outset I request the Hon. Deputy Speaker to give me a few more extra minutes because we have given a list of only a limited number of Members to speak from our Party. With regard to the industrial policy of the State Government, I have to state very plainly that there is a great disappointment among many of us here because no clear-cut industrial policy statement has been mentioned in any of the printed pamphlets that have been supplied to us. It has not been given a clear indication as to the number of persons who are going to be employed during this Plan and the subsequent Plan period and the number of persons who have already been employed in the previous Plan periods. I would go into this matter in detail later on.

Now, I would like to refer to another matter. With regard to our Party's policy, I want to make it clear that we believe (1) in increased material production and (2) in increased employment opportunities. I am quite sure that every section of this House will be with us. So far as these two points, viz., increased material production and increased employment opportunities to as many poor persons as possible so that the unemployment problem can be wiped





out to a maximum extent are concerned, there is no difference of opinion. Now the whole problem is that this Government have not made any clear-cut industrial policy statement. Now, Sir, with your permission, I shall briefly quote a few excerpts from the industrial policy statement that has been made by the Government of the neighbouring State of Kerala. It runs as follows:—

Inviting intending industrialists both inside and outside the State, to come forward and establish industries in Kerala, the United Front Government (that is the Government there), in its 5,000-Word "Industrial policy statement" published today, assures industrialists that "the State is conscious of the necessity of fostering industrial peace and avoiding strike and lock-outs. The Government while upholding the legitimate claims of labour for a share of the wealth produced by them, wish to stress the importance of discipline and the supreme need for the maintenance of high productivity standards. At the same time, workers will be protected from unfair labour practices on the part of the employers".

I fully agree with this part of the statement. According to the Constitution, the right of collective bargaining definitely vests with the workers. As far as the workers are concerned, they have got the right to press their collective bargaining.

'The statement says Kerala will build up and preserve necessary climate to attract entrepreneurs and capital from outside the State.'

Sir, we should also create the necessary industrial climate in our State. Then the statement says—

'The State will favour recognition to trade unions having constitutions containing adequate provisions for maintaining industrial peace. It will encourage mutual negotations at all levels to eliminate every cause of friction between labour and management. Steps will be taken to discourage multiplicity of trade unions.'

I only wish to point out that even now it is not too late to make such a policy statement.

Then with regard to the speech of my hon. Friend, Thiru Martin, I agree with one portion of his speech but disagree with the other portion of his speech. He referred to the Government enterprises. The Government have already gone ahead as far as nationalization of bus transport is concerned. If they try to take hold of more instruments of production, the Government will be in a serious position and in serious trouble. As far as nationalisation is concerned, 'thus far and no further.' If they try to nationalise more industries, they would unnecessarily be inviting trouble. In my opinion, what we should do is that a suitable climate for investment must be created. Only then more and more entrepreneurs will be taking part in the industrial development of the State. Now the position is the capitalists and entrepreneurs are not coming forward. This is a dangerous situation. When we want to nationalise industries, we have to invest a large amount of capital.

[Dr. H. V. Hande] [1967 ஜூலை 8

நண்பகல் 12–00 Otherwise, we will be neglecting those industries and the interests of the workers. There must be opportunities given to the workers to achieve maximum production. More industries should be started and the proper climate for it must be created.

I would like to make a couple of remarks with regard to the pathetic way in which the Industries Department is working. With regard to the Continuous Steel Casting Plant, Arkonam, the Chief Minister was good enough to reply to a question put by me that all the aspects of the Plant had been gone into. That is what the officers have said by way of instructions from the previous Ministry. Before a project report is submitted, a survey of the economics of the project and a survey of the raw materials is made. Only after making the survey, we have to apply to the Department and get clearance from the Development Wing. My information is that the clearance from the Development Wing was got and only afterwards the survey was conducted. After the licence was granted, the survey was made. In other words, a post-sanction economic survey was made.

With regard to availability of scrap, my information is that there is enough scarp but that there is a fifteen-page report against this by the Finance Secretary. I have not had the opportunity of perusing it; if I can lay my hands on a copy of it, I shall be glad to peruse it. I do not know whether it is confidential. I request the Hon. Chief Minister to read this fifteen page report prepared by the Finance Secretary.

I wish to point out that the Industries Department should work more efficiently. In the ceramic centre in Vridhachalam, a large quantity of stock is lying idle. They cannot allow things to rot in a godown. A great crisis will develop and there will not be proper sales. In addition to its other activities, the Industries Development should pay attention to the sales side and take the trouble of finding a suitable market. It must be businesslike in disposing of the stocks.

Then I wish to refer to cotton goods. My hon. Friend made a very pertinent remark with regard to employment. I am fully in agreement with Mr. Surendran so far as the first part of his speech is concerned. But he wanted the issue of instructions for transfer of production from private management to Government. If all these things are transferred, we will have to subsidise many of them just as we are now subsidising rice and the taxation will be fantastically high. Half-hearted nationalisation is dangerous.

Then I come to the most important subject of textile industry. Stated in its simplest terms, the problem before the cotton textile industry is one of the wide gap between the high price at which its products have to be sold, and the low purchasing capacity of the consumer. The three elements in the price of cloth are the cost of production, the excise duty and the cost of distribution. The prices of cotton are controlled, but this control has remained only on paper. In actual fact the prices of cotton have, on an average, ruled



1967 ஜூலை 8] [Dr. H. V. Hande]

15 per cent above the ceiling. Wages constitute nearly a third of the cost of cloth. The dearness allowance payable to workers has been going up very fast. Unless the cost of cotton is reduced, the labourers will be hit hard because the cost of textile goods is going up very fast.

Finally I want to refer to the way in which the Industries Department is helping a small industrialist. I will read an extract from a letter written to the Madras State Industrial Co-operative Bank, Guindy :—

While we do not grudge your refusing us the loan, we wish to point out that after nearly six months we have been informed that due to lack of funds the loan could not be sanctioned. Had we been informed sufficiently early, at least we could have raised the loan from the market at a better term of interest and payment. Money is set apart for giving loans to small entrepreneurs. Unless the money is given quickly and to the deserving persons, only persons who want to exploit the Government will get it and all the money that this House authorises the Government to spend will go to waste. I wish that the Ministry will take into consideration all the points that I have mentioned.

Once again I want to clearly stress that unless we produce a climate congenial for the starting and development of industries, unless we attract more and more industries to this State, unless we create a climate of industrial peace and create confidence in the minds of the entrepreuners, the situation in the Madras State will become very very gloomy. Let us not hug to the illusion created by statistics. Statistics can be conveniently created. Even with regard to consumption of electricity by industries, it is not as cheap as it is made out. The total capacity has gone up very high and there is a large gap. All these things have to be considered before a proper appraisal of the situation is made. Thank you, Sir.

* திரு. எம். சண்முகம்: மாண்புமிக்க துணைத் தலைவர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கை மீது என்னுடைய இரண்டொரு கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒரு நாட்டில் பொருளாதாரத் துறை வளர வேண்டுமானால், அந்த நாட்டிலே தொழில் துறை வளம் பெற்று இருக்கவேண்டும். நம் நாடு தொழில் துறையில் விவசாயத்துக்கே முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்த நாடாக இருந்ததால் பொருளாதாரத் துறையில் வளம் பெறுவதற்கு வழி இன்றி வறுமையிலே மிகுந்த நாடாகவே இருந்து வந்திருக்கிறது. இந்த நாட்டில், இயற்கையாகக் கிடைத்த மரம், கற்பாறைகள் போன்ற பொருள்களைக் கொண்டு ஏதோ சித்திரங்கள் போன்ற சில தொழில்களைச் செய்து வாழ்ந்து வந்ததாக நாம் அறிகிறோம். ஆனால் அவை எல்லாம் பொருளாதாரத் துறையில் நல்ல அபிவிருத்திகளை மக்களிடை ஏற்படுத்தவில்லை, தேசப் பொருளாதாரத்தை உயர்த்தக் கூடிய

வகையில் அமையவில்லை. ஆனால், அன்னியர்கள் நம் நாட்டிற்கு வருவதற்கு முன்னால் நூல் நூற்பு, நெசவு போன்ற சிறு குடிசைத் தொழில்கள் நல்ல முறையில் நடந்து கொண்டிருந்தன. இத்தகைய தொழில் துறைகள் எல்லாமே நசுக்கப்படும் முறையில் அமைந்தது அந்நிய ஆட்சி. பிறகு, இந்நாடு சுதந்திரம் பெற்ற நாடாகியும், ஆட்சியாளர்கள் தொழில்துறையில் வளம் பெறுவதற்காக கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலமாக எடுத்துக்கொண்ட முயற்சிகளில் பல கோடிக்கணக்கில் செலவாகியும் நற்பயன் கிட்டவில்லை. நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்கவென கனரகத் தொழில்களிலேயே செலவிடப்பட்டதால் மேலும் வறுமைமிக்கதாகவே ஆகியது நம் நாடு. கடந்த ஆட்சியாளர்கள் கனரகத் தொழில்கள் ஆரம்பித்ததால் கடன்தான் மேலே மேலே அதிகரித்துக்கொண்டு போயிற்று. இதற்கு முக்கியக் காரணம், நம் நாட்டில் 6-ல் 5 பங்கு மக்கள் விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தது தான். ஆகவே, நாட்டின் பொருளாதாரம் வளரச் செய்ய, கிராம மக்களிடையே சிறுரக கைத் தொழிலும் குடிசைத் தொழிலும் வளரக் கூடிய நிலைமையை ஆட்சியாளர்கள் உருவாக்கவேண்டும்.

மேலும், இந்த நாட்டில் இதுவரையில் தொழிற் துறையில் நாம் உற்பத்தி செய்த பொருள்கள் தேவையுள்ளனவாகவோ, தரமானவையாகவோ இருக்கவில்லை. அதனால் பொருளாதாரச் சரிவு தான் ஏற்படுகிறது. உதாரணமாக, நம் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட நெசவு செய்த கைத்தறித் துணிகளை அமெரிக்கா போன்ற நாடுகளில் மிகவும் ஆதரவு காட்டி வாங்கி வந்தார்கள். ஆனால் நாளடைவில் அவர்களே இத்துணிகளைப் புறக்கணித்து விட்டார்கள். இதற்குக் காரணம் உற்பத்தியில் தரக் குறைவும், அதை நம்மவர்கள் விளம்பரப்படுத்தியதும் தான்.

இன்னும், சிறு ரகத் தொழில்கள் செய்வதில் தரக்குறைவு ஏற்படாமல் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். சில காலம் முன்பு மூர்தாபாத் என்ற வடநாட்டில் இருக்கும் ஊரிலிருந்து, சிறு ரகத் தொழில் உற்பத்தியாளர் செய்யும் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் சாமான்களை அவர்கள் வார்த்தையை நம்பி வாங்கினோம். ஆனால் சில மாதங்களுக்கு உள்ளாகவே அவை எவ்வளவு தரக் குறைவானவை என்பதை அறிந்து மிகவும் வருத்தம் ஏற்பட்டது. இப்படி எல்லாம் ஏற்படும் தரக்குறைவுகளைத் தடை செய்வதில் அரசு மிக கவனமாக இருந்தால் தான் பொருளாதாரம் வளர வழி ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், விவசாய விளைபொருளை உப பொருள்களாக உற்பத்தி செய்யவும், அவைகளுக்கான சிறு தொழில்களுக்கு ஊக்கமளிப்பதன் மூலமும் கிராமங்களில் பொருளாதார அபிவிருத்தி ஏற்படச் செய்யலாம் என்பதைக் கூறிக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).



*திரு. க. முருகேசன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழில் மானியக் கோரிக்கை மீது எனது கருத்துக்களைத் தெரிவிக்க சந்தர்ப்பம் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்தின் பெரிய முக்கிய கிராமத் தொழில் கைத்தறித் தொழில், பன்னெடுங் காலமாக நடைபெற்று வரும் தொழிலும் கூட. 1961-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஏழு லட்சம் தறிகள் நமது தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன. ஆனால் இப்போது கணக்கெடுத்தால் அது குறைந்துள்ளதைக் காணலாம். இதில் இருபது லட்சம் ஜனங்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள். இவர்கள் வாழ்வு நல் வாழ்வாக, கைத்தறித் துணிகள் தேங்காமல் இருக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இதற்குக் காரணம் நைஸ் ரக மில் துணி அதனுடன் போட்டி போடுவதேயாகும். ஏற்கனவே இந்த மாமன்றத்தில் பல மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் கோரியிருப்பது போல கரைபோட்ட வேஷ்டிகளை மில்கள் தயாரிப்பதை நிறுத்தி விடவேண்டும். நாள்தோறும் நூல் விலையை உயர்த்திக் கொண்டே போவதைக் கண்காணிக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் மூலம்தான் கைத்தறித் தொழில் பெரும் அளவில் நடைபெற்று வருவது தெரியும். அந்தக் கூட்டுறவு சங்கங்களுக்கு நூல் தாராளமாகக் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். மேலும், நெசவாளிகளுக்குக் கொடுக்கப்படும் கூலி பல ஆண்டு காலமாக ஒரே மாதிரியிருக்கிறது. இப்பொழுது வாழ்க்கைப் புள்ளிகளை அனுசரித்து கூலி உயர்வு அளிக்க கூட்டுறவு சங்கங்கள் முன்வரவேண்டும்.

இப்பொழுது பண்டிகை நாட்களில் ரிபேட் தள்ளி கொடுப்பதனால் ஓர் அளவு தேங்கிக் கிடக்கும் ஜவுளிகள் விற்பனை அதிகரித்து இருப்பதைக் காணலாம். 10 காசு கழிவுத் தொகை கொடுக்கும் முறை எல்லாக் காலங்களிலும் கொடுக்கப்பட்டால் என்ன நிலைமையில் இருக்கிறது என்பதை, அதாவது ஓர் ஆண்டு காலம் ரிபேட் நீடித்தால் எப்படி ஜவுளி தேக்கம் இருக்கிறது என்பதை, அரசு பரிசீலித்துப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர் குடும்பங்களுக்கு வீட்டு வசதியுடன் கூட்டுறவு சங்கங்களின் மூலம் சேமிப்பு நிதி திட்டத்தைக் கட்டாயப்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட நெசவாளர்கள் குடும்பங்களுக்கு கிராமத் தொழில் திட்டத்தில் பல தொழில்கள் ஆரம்பித்து அவர்களுக்கு வாழ்வு அளிக்கக் கோருகிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் நெசவாளர் குடும்பங்கள் அதிகம். இந்தப் பகுதிக்கு ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். தர்மபுரி கூட்டுறவு மத்திய வங்கியில், நெசவாளர் பிரதிநிதிக்கு இடம் கிடையாது. அங்கு நெசவாளர் பிரதிநிதி ஒருவருக்கு இடம் கொடுக்க வேண்டும் என இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. க. முருகேசன்] [1967 ஜூலை 8

இன்று பஞ்சத்தாலும் பட்டினியாலும் வாடும் மக்கள் நெசவாளர்கள்தான். ஆகையால் கைத்தறி நெசவாளர்களுக்கு நெசவாளர் ஷேமநல போர்டு ஒன்று ஏற்படுத்தி அவர்களுக்கு அரசு எல்லா சலுகைகளும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைக்கு என் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. சு. துரைசாமி: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன். எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கடந்த காலத்தில் காங்கிரஸ் கட்சியினர் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாகத்தான் தமிழகம் தொழில் துறையில் முன்னேறியிருக்கின்றது என்ற ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு எல்லாம் மிகப் பணிவுடன் இதே மன்றத்தில் 1965-ஆம் ஆண்டு, மார்ச் மாதம், 17-ஆம் தேதி நடைபெற்ற தொழில் துறை மானியக் கோரிக்கையின் மீது ஆளும் கட்சியில் இருந்த டாக்டர் பா. நடராசன் அவர்கள் பேசியுள்ள வாசகத்தை தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"நமது தொழில் வளர்ச்சி கிட்டத்தட்ட 5 சதம் தான் இருக்கிறது. துல்லியமாகச் சொன்னால் 4.8, 4.9 என்று—அப்படித்தான் இருக்கிறது. அகில இந்தியத் தொழில் வளர்ச்சி 9 சதம் ஆகும். அகில இந்திய வளர்ச்சியானது 8, 9 சதம் இருக்கும்பொழுது நமது வளர்ச்சி 5 சதம் தான் . . . ."

இதைக் குறிப்பிடுவதற்கான காரணம் எதிர்க்கட்சியில் இருந்து இன்றைக்கு பேசுகின்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் தாங்கள் ஏதோ பெரும்பாலான காரியங்களைச் சாதித்திருப்பதாக இந்த மன்றத்தில் எடுத்துச் சொன்னார்கள். அந்த நிலை உண்மையில் இன்றைக்கு இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு எனது கருத்துக்கள் சிலவற்றை எடுத்துச் சொல்லலாமென்று இருக்கிறேன்.

இன்று நான் சார்ந்திருக்கிற திருப்பூர் தொகுதியைப் பொறுத்தவரையில் ஐநூறுக்கும் மேற்பட்ட பனியன் பாக்டரிகள் இருக்கின்றன. பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களால் தயாரிக்கப்படுகிற பனியன்களை பம்பாயில் இருந்து சில தனிப்பட்டவர்கள் வந்து வாங்கிப்போய் வெளிநாடுகளுக்கு எல்லாம் அனுப்பி லாபம் அடைகிறார்கள். அதை மாற்றுகின்ற அளவில் எங்கள் பகுதியில் தயாரிக்கப்படுகிற பனியன்களை நமது அரசாங்கமே ஒரு ஸ்தாபனத்தின் மூலம் வாங்கி வெளிநாடுகளுக்கு அனுப்பினால் நிறைய லாபம் கிடைக்கும். அந்தத் தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்கு ஒரு பாதுகாப்பும் கிடைக்கும்.



1967 ஜூலை 8] [திரு. சு. துரைசாமி]

அதுபோல அனுப்பர்பாளையம், ஜயங்காளிபாளையம் என்ற இரண்டு ஊர்களில் பாத்திரத்தொழில் பிரசித்திபெற்ற தொழிலாக இருக்கிறது. அங்கிருந்து வேறு பல மாநிலங்களுக்குக் கூட பாத்திரங்கள் அனுப்பப்படுகின்றன. சர்க்காரே ஒரு அமைப்பின் மூலமாக அந்தப் பாத்திரங்களை வாங்கி பிற மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கலாம். அதனால் லாபம் கிடைக்கும். அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு ஒரு பாதுகாப்பும் கிடைக்கும்.

பஞ்சாலைகளைப் பொறுத்தவரையில் ஒரு நெருக்கடியான நேரம் என்பதை நாம் யாரும் மறந்துவிடுவதற்கில்லை. குறிப்பாக தமிழகத்தில் இருக்கிற பஞ்சாலைகளின் நிலை, டெல்லி சர்க்கார் போட்டிருக்கும்படியான வரி மூலம் அந்தத் தொழிலுக்கே ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அத்துணைபேரும் அறிவோம். ஏற்கனவே ஒரு கிலோ நூல் 30 நம்பர், 60 நம்பர் தயாரித்தால் ஒரு ரூபாய் இருபது காசு மத்திய சர்க்கார் வரியாக இருந்தது. இன்றைக்கு ஆறு ரூபாய் இருபது காசாக மத்திய சர்க்கார் உயர்த்தியிருப்பதன் மூலமாக பஞ்சாலைத் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இன்றைக்கு பஞ்சு கிடைக்காத நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அத்தொழிலைப் பாதுகாக்கின்ற வகையில் நமக்குத் தேவையான பஞ்சைப் பெறக் கூடிய முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இதே நேரத்தில் கூட்டுறவுத் துறையில் இருக்கிற பஞ்சாலைகள் இன்றைக்கு நல்ல முறையில் இயங்கவில்லை என்றால் அதில் இருக்கிற நிர்வாகக் குறைபாடுதான் என்பதை சொல்லாமல் இருக்க முடியவில்லை. அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற இந்த அறிக்கையிலே நாம் பார்க்கிறோம். 12 பஞ்சாலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பஞ்சாலையிலும் 12 ஆயிரம் முதல் 17 ஆயிரம் வரை கதிர்கள் இருக்கின்றன. கதிர்கள் எல்லாம் வேலைசெய்யவில்லை. 12 ஆயிரம் கதிர்கள் இருக்கின்றன என்றால் அவற்றில் 8,000 கதிர்கள் தான் ஒரு ஷிப்டில் வேலை செய்கின்றன; 12 ஆயிரம் கதிர்களிலே மூன்றில் ஒரு பங்கு வேலை செய்யக்கூடிய நிலையில் இல்லை. இதைப் போக்கக் கூடிய முறையிலே கதிர்களைச் சீர்திருத்தியாகவேண்டும்.

இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டைப் பொறுத்தவரையில் கோயம்புத்தூரில் ஒன்று இருக்கிறது. அது இன்னும் தொடங்கப்படவில்லை. ஆகவே அதை விரைவாக வேலை செய்யக்கூடிய முறையில் காரியத்தில் ஈடுபடவேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். நடைபெற்று இருக்கவேண்டிய வேறு பல நல்ல காரியங்களும் இன்னும் நடைபெறாமல் இருக்கிறது. ஆகவே அவற்றையும் நிறைவேற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும். தொழில் துறை முன்னேற வேண்டுமானால் ரயில் போக்குவரத்து மிகவும் அவசியம். ஆகவே மைசூரிலிருந்து மதுரைக்குப் போடுகின்ற ரயில் பாதை தாராபுரம், திருப்பூர் போன்ற ஊர்களின் மூலமாகப் போவதற்கு ஏற்பாடு செய்ய

வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அப்படிச் செய்தால் தான் தொழில் துறை அபிவிருத்தி அடையும் என்பதைச் சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. எம். பூபதி: மாண்புமிகு அவைத் துணை தலைவர் அவர்களே, எனக்குச் சற்று அவகாசம் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய திரு. ராமச்சந்திரன் அவர்கள் சென்ற 20 ஆண்டுகள் ஆட்சி செய்த காங்கிரஸ் சர்க்கார் பொதுத் துறையில் தொழில்களை வளர்த்து அதிகமான வருவாயை உருவாக்கி அதிகமான வேலைவாய்ப்பை தொழிலாளர்களுக்கு உண்டாக்க வேண்டுமென்றும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க வேண்டுமென்றும் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை, அதற்குப்பதிலாக தனியார்களுக்கு அதிகச் சலுகைகள் கொடுத்து, கடன் வசதிகள் செய்துகொடுத்து இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். நான் அதை ஏற்றுக்கொள்கிறேன்.

இந்த அமைச்சரவை பூகர்ப்ப ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டிலே அடிப்படை மூலப்பொருள்கள் குறைவாக இருப்பினும் இங்கே கிடைக்கும் மாக்னெசைட், சுண்ணாம்புக்கல், பாக்சைட், பழுப்பு நிலக்கரி, களிக்கல், இல்மெனைட், குரோமைட் போன்ற விலைமதிப்புள்ள கனிப்பொருள்களுக்கு, தனியார் முயன்று வரும் தீவிர முயற்சிகளுக்குச் சற்றும் இடம் அளிக்காமல் சர்க்கார் தாங்களே இப்படிப்பட்ட மூலப்பொருள்களைக் கொண்டு பொதுத் துறையில் நடத்தி பொருளாதாரத்தை வளர்ப்பதுடன் அதிக வேலைவாய்ப்பைத் தொழிலாளர்களுக்கு உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் இரும்பையும், நெய்வேலி பழுப்பு நிலக்கரியையும் கொண்டு பொதுத் துறையில் மத்திய சர்க்கார் ஏற்று நடத்துவதற்கு மாநில சர்க்கார் மத்திய சர்க்காரை நிர்ப்பந்தப்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெய்வேலியில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுடைய குறைகளைப் போக்குவதற்கு அரசு முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மனித உழைப்புச் சக்தி மிகுதியாக உள்ள நம் நாடு, பிற்பட்ட பொருளாதாரத்தைக் கொண்டுள்ள நாடு நம்நாடு. இங்கு ஆட்டோமேஷன் போன்றவற்றைத் திணிப்பது, அரைகுறையாகத் திணிப்பது ஆக இருந்தாலும், அது உண்மையிலேயே வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தான் அதிகரிக்க வாய்ப்பளிக்கும். தொழில் வளர்ச்சியின் நோக்கமே வேலைவாய்ப்பை அதிகரித்து, பொருட் செல்வத்தைப் பெருக்குவதுதான். ஆகவே தோலைப் பதனிடும் தொழில் மிஷினை உபயோகிப்பதையும், கடலையை வறுத்து உடைக்க மிஷினை உபயோகிப்பதையும் தடுக்க வேண்டும். அதோடு கைத்தறிக்குப் பதில் பவர்-லூம்கள் புகுத்துவதையும்





தடைசெய்வதோடு, ஆட்டோமேஷனை எந்தத் துறையிலும் புகுத்த கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் லாபம் அடைவது முதலாளிகள்தானே தவிர சர்க்கார் அல்ல.

பஞ்சாலைத் தொழிலைப் பற்றி சர்க்கார் ஆய்வுரையில் சிறிதளவு கூறியிருக்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சாலைத் தொழிலில் மந்த நிலை, மின்சார வெட்டு, கடன்வசதிக் குறைவு இவை காரணமாக ஆலைகள் மூடப்படவேண்டிய நிலை ஏற்பட்டது என்று இருப்பது முழுமையல்ல. பஞ்சாலை முதலாளிகள் தங்கள் பணத்தை பஞ்சாலையைவிட சுலபமாக, அதிக லாபம் பெறுகின்ற நோக்கத்தில் தங்கள் லாபத்தின் ஒரு பகுதியைக்கூட பஞ்சாலைத் தொழிலில் போட மறுத்ததும், முதலாளிகளின் சீர்கேடான நிர்வாகமும்தான் காரணங்களாகும்.

அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட தொழில் நுட்பக் குழு சிபாரிசுப்படி வங்கியின் மூலம் நிதி உதவி பெற்ற திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கீதாஞ்சலி ஆலை முதலாளி, பணத்தை மட்டும் பெற்றுக் கொண்டாரேயொழிய மில்லை முறையாகத் திறக்கவில்லை. அந்த முதலாளி தொழிலாளிகளின் கஷ்ட நிலைமைகளை உபயோகித்து தொழிலாளிகளிடம் சம்பளத்தில் 40 ரூபாய் குறைத்துக் கொள்வதாகவும் போனஸ் முதலியவை வேண்டாம் என்றும் எழுதிக் கையெழுத்து வாங்க முயற்சி செய்தார். இத்தவறான போக்கைத் தவிர்க்க தொழிற் சங்கத் தலைவர்களும், லேபர் ஆபீசர் மற்றவர்களும் முயற்சிகள் செய்தும் எந்தவிதமான பயனும் அளிக்கவில்லை. மில் இன்னும் திறக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக, கைத்தறி டைரக்டர் திரு. முராரி அவர்களுக்கு, மில் திறக்கப்பட்டு தொழிலாளிகள் வேலை செய்வதாகக் கடிதம் எழுதியுள்ளார், அந்த முதலாளி. அவர் சர்க்கார் பணத்தைப் பெற்றுக் கொண்டு தொழிலாளிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்காமல் மில்லைத் திறக்காமல் வைத்திருப்பது பற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மில்களுக்கு உதவியளிக்க யோசனை கூற அமைக்கப்பட்ட டாக்டர் பி. எஸ். லோகநாதன் கமிட்டி 10 மில்களைப்பற்றித் தங்கள் முடிவை சர்க்காருக்கு அறிவித்து 5 வாரங்களுக்கு மேல் ஆகிவிட்டது. தொழில் அமைச்சரால் கூட்டப்பட்ட முக்கூட்டுக் குழுக் கூட்டம் முடிந்து 3 மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால் இன்றுவரைக்கும் எந்த மில்லும் திறக்கப்படவில்லை. மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் வங்கி உரிமையாளர்களை நேரில் சந்தித்து நிலைமையை விளக்கி நிதி உதவியைச் செய்யும்படி செய்தால் அன்றி மில்களைத் திறப்பதற்கு முடியாது. இதைத் தவிர இவ்வாரம் முடிவு அனுப்பியுள்ள 11 மில்களையும் உடனடியாகத் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோவையில் இருக்கின்ற தொழிலாளர்கள் 6 மாதம் முதல் 15 மாதங்களுக்கு மேலாக வேலைவாய்ப்பு இழந்து அல்லலுறும் நேரத்தில் அந்த தொழிலாளர்

களுடைய கஷ்டமான நிலையைப் போக்கி உதவி நிதி வழங்குவதற்கு அரசாங்கம் ஆவன செய்ய செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுதந்திரமான வியாபாரம் வேண்டுமென்று, கன்ட்ரோலை நீக்கியதன் விளைவாக ஒரு டன் இரும்பு விலை ரூபாய் ஐம்பது முதல் 150 ரூபாய் அளவுக்கு அதிகமாக விற்பதால நாகை ஸ்டீல் ரோலிங் மில்லே திண்டாடுகின்ற நிலையில், கோயம்புத்தூரில் உள்ள மில்கள் எப்படி நடத்தப்பட முடியும்? இது எல்லா இன்ஜினியரிங் தொழில்களையும் பாதித்துள்ளது. இதனால் தமிழ் நாட்டில் பத்தாயிரக் கணக்கில் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழந்து தவிக்கின்றனர். இந்த இன்ஜினியரிங் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருள்களான இரும்பும், கோக்கும் கிடைக்கவும், அவைகளை ஏற்றிச் செல்ல தக்க வாகன்களும் கிடைக்கத்தக்க நடவடிக்கைகளை மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மாநில சர்க்கார் நிர்ப்பந்தப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டில் 35 லட்ச மக்களுக்கு வாழ்வளித்து வந்த இக் கைத்தறித் தொழில் மிகவும் க்ஷீணதிசை அடைந்திருக்கிறது. மக்களிடம் வாங்கும் சத்தி குறைந்து கைத்தறித் துணி தேங்கி வருவதால் மக்கள் வாங்கும் சக்திக்கு ஏற்றவகையில் கைத்தறித் துணி விலையைக் குறைக்க வேண்டும். அதே சமயத்தில் கைத்தறித் தொழிலாளிகளின் கூலியும் குறையாமல் பாதுகாக்க வேண்டும். அப்படிச் செய்ய வேண்டுமென்றால் தொழிலாளர்களுக்கு நூல் குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய வேண்டும். ஆகவே நூலை சர்க்காரே வாங்கி அவர்களுக்குத் தர வேண்டும். அப்படித் தரும்பொழுது மத்திய சர்க்கார் எக்சைஸ் வரியிலிருந்து கைத்தறித் தொழிலாளிக்கு கொடுக்கும் நூலுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. வி. எஸ். எஸ். மணி : மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த தொழில் துறை மானியத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நமது மாமன்றத்தில் அழகுபட கம்பீரமாகக் காட்சியளிக்கும் வள்ளுவப் பெருந்தகையாரின் தொழில் கைத்தறி நெசவுதான். இதைப் பற்றி நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நெசவுத் தொழிலுக்கு நிகரில்லை என்று சொல்லி வந்த காலம் இப்பொழுது இல்லை. இப்பொழுது அந்தத் தொழிலைச் செய்கின்ற மக்கள் அவதியைப்பற்றிச் சொல்லாமல் இருக்க முடியாது. கைத்தறி நெசவாளர்கள் பிரச்னை வரும்பொழுதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவும், ஊக்கமும் ஆக்கமும் கொடுத்து வந்திருக்கிறது. இப்பொழுது கழகத்தின் ஆட்சியில் கைத்தறி நெசவாளர்களுக்கு அதிகமான ஊக்கமும் ஆக்கமும் சலுகைகளும் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. இரண்டு தினங்





களுக்கு முன்பு நம்முடைய தொழிலமைச்சர் அவர்கள் டெல்லி சென்றபொழுது விசைத் தறிகளில் உபயோகிக்கக்கூடிய உயர்தர நூல் விலையில் அதிகமாக்கியிருக்கிற எக்சைஸ் வரியைக் Excise duty குறைக்க வேண்டுமென்று டெல்லி அமைச்சரிடம் கூறியதாகவும் அவர்களும் அதைக் குறைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். அதற்காக நான் நம்முடைய தொழிலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். கைத்தறி செயற்கைப் பட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் உபயோகிக்கக் கூடிய உள்நாட்டில் ஆலை உற்பத்தி செய்யக்கூடிய செயற்கைப் பட்டு நூல் விலையை 100 Deiner (டினயர்) ஒரு கிலோவுக்கு ரூ. 12.25 காசிலிருந்து ரூ. 17.25 காசுக்கு உயர்த்தியிருக்கிறார்கள், மத்திய சர்க்கார். அதே மாதிரி 120-க்கு 9.25 காசிலிருந்து 15.50 வரை உயர்த்தியிருக்கிற காரணத்தினாலே மில் உரிமையாளர்கள் இஷ்டம்போல் விலையை உயர்த்திக் கொள்ளலாம் என்ற நிலையிலே மத்திய சர்க்கார் இருப்பதினாலே செயற்கைப் பட்டுத் தொழில் நலிந்துவிட்டது. செயற்கைப் பட்டினால் தயாராகின்ற சேலைகள் அதிகமாக உற்பத்தி செய்யப் படுவதில்லை. அவைகளுக்கு மார்க்கட் கிடையாது. இதனால் அதிலே ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் பூராவும் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் கஷ்டப்படுகிறார்கள், இதற்கு நம்முடைய அரசாங்கம் ஒரு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, செயற்கைப் பட்டு நூலை அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்வதில் நேரடியாக உற்பத்தியாளருக்கு அனுமதி வழங்கி இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால் சமீபகாலமாக அந்த உரிமை ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனுக்குக் கொடுக்கப் பட்டது. 'செயற்கைப் பட்டு நூலை இறக்குமதி செய்யும் வேலையை அரசாங்க வாணிபக் கழகத்தினிடம் ஒப்படைக்கவும் விநியோகத் பி. ப.
திற்காக மாநிலக் கைத்தறி நெறியாளர்களுக்கு மொத்த அளவில் 12-30
நூலை ஒதுக்கவும் இந்திய அரசு தீர்மானித்துள்ளது' என்று ஆய்வுரையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே நேரடியாக இறக்குமதி செய்யும் உரிமை களுக்கு கொடுக்கப்பட்டிருந்தால் ஒரு கிலோ 10 ரூபாய் அடங்கும் என்றால் ஸ்டேட் டிரேடிங் மூலம் அவர்கள் வாங்கிக் கொடுக்கும்போது அவர்கள் மார்க்கெட் விலைக்கேற்ப 20 ரூபாய் அளவுக்கு விற்கிற காரணத்தால் ஸ்டேட்டிரேடிங் கார்ப்பரேஷன் 10 ரூபாய் லாபத்தை எடுத்துக் கொள்கிறது. இந்த லாபம் உள்ளபடியே நேரடியாக உபயோகிக்கிறவர்களுக்கு களுக்குப் போகாதபடி ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனுக்குப் போகும்படி மத்திய அரசு செய்வது பெரும் அநீதியாகும்.

அடுத்தபடியாக, தமிழகத்தில் ஜரிகை, புடவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஜரிகை செய்யக்கூடிய ஆலை ஒன்றைக் காஞ்சிபுரம் போன்ற முக்கியமான இடத்தில் வைக்க எற்பாடு செய்தால் நன்றாக இருக்கும்.

பிளீடிங் மெட்ராஸ், வண்ணமாறும் துணி ஏற்றுமதியை அதிகரிக்கும்பொருட்டு அமெரிக்காவுக்கு எக்ஸ்போர்ட் டிபிட்டி டெலிகேஷன் ஒன்று போய்வந்தது. அதனால் ஏற்பட்ட பயன் என்னவென்றால் ஒன்றுமே இல்லை. பிளீடிங் மெட்ராஸ் துணி ஏற்றுமதி அறவே நின்றுவிட்டது. 1965-ல் 6.16 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது 1966-ல் 0.03 கோடி என்ற அளவுக்குக் குறைந்து விட்டது. 50,000 ரூபாய் செலவு செய்து டெலிகேஷன் அமெரிக்காவுக்குப் போய் வந்ததே தவிர, பிளீடிங் மெட்ராஸ் எக்ஸ்போர்ட் அறவே இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகளை எல்லாம் சீர்திருத்தி கைத்தறி நெசவாளர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **ஹாஜி ம. மு. பீர்முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்கள், தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

"செய்யும் தொழில் எல்லாம் சீர்தூக்கிப் பார்க்கின்
நெய்யும் தொழிலுக்கு நிகர் இல்லை"

என்று வான்புகழ் வள்ளுவர் கூறினர்.

"வானம் பார்த்தவன் வளர்த்த பருத்தியிலே
மானம் காப்பதற்கு உற்பத்தியானது வேட்டி சேலை"

என்று கவிஞர்களாலும் அறிஞர்களாலும் புகழப்படுகின்ற கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கிற மக்கள் வாழ்வு எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று நாம் சிந்தித்துப் பார்க்கும்போது உண்மையிலேயே வெட்கமும் துக்கமுந்தான் ஏற்படுகிறது. நாட்டு மக்களுடைய மானத்தைக் காப்பதற்காக ஆடையை உருவாக்கித் தருகிற அந்தத் தொழிலாளியின் வாழ்வு, இந்த நாட்டைப் பொருத்தவரை, மானம், விமானத்தில் பறக்கின்ற நிலையில் இருந்து கொண்டிருக்கிறது? இதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

ஏழு லட்சம் கைத்தறியின் மூலம் ஏறக்குறைய 30 லட்சம் மக்களும் ஜீவனம்சம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழில் இந்த நாட்டைப் பொருத்த வரை நெருக்கடி நிலைக்கு இலக்காகிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இந்த நிலையில் கைத்தறித் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் நிரந்தரமான நெருக்கடிக்கு ஆளாகியிருப்பதோடு கூட்டுறவுத் துறையில் செயல்படும் நெசவாளர் சங்கங்களும் கூட செயல்பட முடியாத முறையில் முடக்கி வைக்கப்பட்டு இருக்கின்றன. அந்தத் துறையில் அரசாங்கத்தின் கண்காணிப்பும் கவனிப்பும் இன்னும் கொஞ்சம் அதிகமாக இருக்க வேண்டும்.

மேன்மைதங்கிய முதலமைச்சர் அவர்கள் புதிதாக அமைச்சரவையை விஸ்தரிக்கும்போது, கைத்தறி ஜவுளிக்குத் தனி





அமைச்சரைப் போடுவார்களேயானால் இரண்டாவது பெரிய தொழில், நீண்ட பாரம்பரியத் தொடர்புடைய தொழில், மானம் மறைக்கும் ஆடைகளை உற்பத்தி செய்யக் கூடிய தொழில், ஓரளவு பாதுகாப்புப் பெறும், போதிய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

வடநாட்டைப் பொருத்த வரை மின்சாரத் தறித் தொழில் வளர்ந்து வருகிறது, தென்னாட்டைப் பொருத்த வரையில் அந்தத் துறையிலே வளர்ச்சியடையத்தக்க அளவுக்குக் கவனம் செலுத்தப்படவில்லை. இந்தத் துறையிலே வடக்கையும் தெற்கையும் ஒத்துப் பார்க்கும்போது வடக்கே வளர்ந்து வருகிற காரணத்தால் தெற்கே மின் தறித் தொழில் பின்தங்கி விடுவதுடன் நமது கைத்தறித் தொழிலையும் பாதித்துவிடும்.

கூட்டுறவுத் துறையில் புதிய நூல் மில் ஒன்றைத் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆரம்பிக்கலாம் என்ற நிலை இருக்கிறது. அப்படி அந்த நிலை உருவாக்கப்படுகிறபோது மிக அதிகமான அளவில் பர்மாவில் இருந்தும் சிலோனில் இருந்தும் அகதிகளாக வந்திருக்கின்ற நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை அதிகம் கொண்டு இருக்கின்ற மேலப்பாளையம் நகரத்தில் கூட்டுறவு மில்லை நமது அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டும். அதற்கான தொழிலாளர்கள் நிறைய இருக்கிறார்கள். இட வசதி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

கூட்டுறவுத் துறையில் அல்லாது தனியார் துறையில் இருக்கின்ற மாஸ்டர் வீவர்ஸ் இடம் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் ஏராளம். அவர்களுக்கு 'பிராவிடண்ட் ஃபண்ட்' முறையை ஏற்பாடு செய்து கொடுத்தோமானால், வயதான காலத்தில், தொழில் செய்ய முடியாத நிலையில், வாலிபத்தில் ஈட்டிய பணத்தின் மூலம் வறுமைக்கு இலக்காகாது பாதுகாப்புப் பெற்றுக் கொள்ளலாம். இதனை நம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தென் மாவட்டங்களில் பனையேறுகிற தொழில் இருந்து வருகிறது. அது மிக மிக அபாயகரமான தொழில். அதே நேரத்தில் நம்முடைய மக்களுக்கு மதுரமான பதநீரை இறக்கித் தருகிற தொழில்; ஆரோக்கியத்திற்குகந்த கருப்புக் கட்டியை உற்பத்தி செய்து தருகின்ற தொழில். சென்ற கால ஆட்சியினர் அபாயகரமான பனையேறும் தொழிலுக்கு லைசென்ஸ் முறையை விதித்திருந்தார்கள். அதை ரத்து செய்ய வேண்டும். அதை ரத்து செய்ய வேண்டுமென்பதோடு மட்டுமல்ல; பதநீரை விற்பனை செய்கிறவர்களும் லைசென்ஸ் எடுத்துக் கொள்ள வேண்டும்; அவ்வாறு லைசென்ஸ் எடுத்துக் கொள்ளப்படவில்லையென்றால் போலீசாரால் பிடிக்கப்பட்டு வழக்குப் போடுகிற நிலை இருக்கிறது. இதை நம்முடைய ஆட்சியினர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நீண்ட நெடும் காலமாக பனையேறும் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்கள் லைசென்ஸ் கட்ட வேண்டுமென்று விதித்

[திரு. ஹாஜி ம. மு. பீர்முஹம்மது] [1967 ஜுலை 8

திருப்பதால் போலீஸ் கெடுபிடிக்கு உள்ளாகின்றனர். நம்முடைய ஆட்சி இந்தத் துறையில் கவனம் செலுத்தி பனை ஏறும் தொழிலாளர்களுக்கு கட்டணம் விதித்திருப்பதை ரத்து செய்து சுயேச்சையாகப் பனை ஏறலாம் என்ற நிலையை ஏற்படுத்தித் தரவேண்டும்.

தஞ்சை மாவட்டத்தைப் பொருத்தவரை வைக்கோலும் மூங்கிலும் அதிகமாகக் கிடைக்கின்றன. தொழில் துறையில் அந்த மாவட்டம் பிற்பட்ட நிலையில் இருக்கிறது. வைக்கோலும், மூங்கிலும் அதிகமாகக் கிடைக்கிற காரணத்தால் காகித உற்பத்தித் தொழிற்சாலைகளை சிறு சிறு அளவுக்கு அரசாங்கத்தின் ஆதரவோடோ அல்லது அரசாங்கத்தாராலோ ஆரம்பிப்பதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கூறி முடித்துக் கொள்ளுகிறேன். நன்றி.

* திரு. க. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பேச வாய்ப்பு நல்கியமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தொழிற்துறை மானியத்தில் பல நல்ல அரிய திட்டங்களைக் கொண்டு வருவதற்காக அமைந்துள்ள அமைச்சரவைக்குப் பணிவு கலந்த நன்றி. எங்களுடைய உடையார்பாளையம் வட்டத்தில் முந்திரித் தொழிற்சாலை ஆரம்பித்தால் அரசாங்கத்திற்கு வருவாய் வர சாதகமாக இருக்கும். முந்திரித் தோலில் இருந்து பிளாஸ்டிக் தயாரிக்கும் பிளாஸ்டிக் தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தேர்தலுக்கு முன்பு கூறினார்கள். அந்த வகையில் எங்கள் பகுதி நன்மை அடையும் வகையில் அந்தப் பகுதியில் அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் வட்டம் பெரும்பகுதி வேர்கடலை மிகுதியாகப் பயிராகக்கூடிய வட்டம். அங்கு வனஸ்பதி உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையை ஏற்படுத்தித் தருவார்களேயானால் அது அந்தப் பகுதி ஏழை மக்களுக்குப் பயன் அளிப்பதாக இருக்கும்.

உடையார் பாளையம் வட்டத்தில் கைத்தறி நெசவுக்குப் பேர் பெற்ற மக்கள் பல்லாயிரக்கணக்கில் வாழ்கின்றனர், அங்குள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டித் தர இலவச மனையும், கடன் உதவியும் கொடுக்க சில தொகைகளை வழங்குவது என்று அரசினர் முடிவு செய்திருக்கிறார்கள். அதை மனதார வரவேற்கிறேன். கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் அதிகமாக இருப்பதால் கூட்டுறவு நூற்பாலை ஒன்றை செயங்கொண்டத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆறு நாள் கூட பட்டினியாக இருந்து விடலாம். ஆனால் அரை விநாடி கூட ஆடை இல்லாமல் இருக்க முடியாது. அத்தகைய தொழிலிலே ஈடுபட்டிருக்கும் மக்களுக்கு, நசுக்கப்பட்டிருந்த மக்களுக்கு, வசதி அளிக்கும் வகையில், கூட்டுறவு நூற்பாலையை ஏற்படுத்தினால் வேலை இழந்து தவிக்கும் கைத்தறி நெசவாளர்கள் இரண்டாயிரத்திற்கும் அதிகமாக வேலை பெறுவார்கள்.



1967 ஜுலை 8] [திரு. க. ந. இராமச்சந்திரன்]

அடுத்து, தென்னகத்தைப் பொறுத்தவரையில் தொழிற்துறை சீர்கேடான நிலையில் இருக்கிறது என்று எல்லோரும் கூறினார்கள். ஜுலை 23-ம் தேதி கொண்டாடப் போகிற எழுச்சி தினத்திற்குக் காரணமே இந்த சேலம் இரும்பாலைத் திட்டம்தான். சேலம் இரும்பாலைத் திட்டத்தை மத்திய அரசு வழங்காமல் இருப்பது தான் அதற்குக் காரணம். 1830-ம் ஆண்டில் தென் ஆற்காடு மாவட்டத்தில் பறங்கிப் பேட்டையில் இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிக்க மார்ஷல் ஹீத் என்பவர் தயாராகயிருந்தார்கள். பிறகு சேலம் மாவட்டம் பூலாம்பட்டியிலும், வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலையிலும் ஆரம்பிக்க இருந்தது கைவிடப்பட்டன. அதற்குக் காரணம், நிலக்கரி கிடைக்கவில்லை. நெய்வேலியில் மட்டும் 200 கோடி டன்னுக்கு மேல் நிலக்கரி இருப்பதாக நிபுணர்கள் கூறுகிறார்கள். சேலம், திருச்சி மாவட்டத்தில் 37 கோடி டன் நிலக்கரி இருப்பதாக நிபுணர்கள் கூறுகிறார்கள் சேலம் அருகே காஞ்சமலையில் 12 கோடியே 20 லட்சம் டன் நிலக்கரி இருப்பதாக கண்டு பிடித்துள்ளார்கள். சேலத்தில் முதல் கட்டத்தில் ஐந்து லட்சம் டன் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்கலாம் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். இரண்டாவது கட்டத்தில் 12 லட்சம் டன் அளவிற்கு உற்பத்தி செய்யக் கூடிய வகையிலும், மூன்றாவது கட்டத்தில் 30 லட்சம் டன் அளவிற்கு உற்பத்தி செய்யக் கூடிய வகையிலும் அமைக்க முடியும் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். சேலத்திற்கு நிலக்கரி கொண்டு வர 100 கல் தொலைவுதான் இருக்கிறது. ரூர்கேலாவை எடுத்துக் கொண்டால் நிலக்கரி கொண்டு வர 550 கல் தொலைவு இருக்கிறது. பிலாயை எடுத்துக் கொண்டால் 1,000 கல் தொலைவு இருக்கிறது. ஆகவே மற்ற மாநிலங்களை விட சேலம்தான் 100 கல் இடைவெளி தூரத்தில் நிலக்கரியைப் பெற்று இருக்கிறது. அதோடு ஒரு டன் இரும்பு தயார் செய்ய ரூர்கேலாவில் 2,745 ரூபாய் செலவிடப்படுகிறது, பிலாயில் 2,270 ரூபாய் செலவிடப்படுகிறது. துர்காபூரில் 2,208 ரூபாய் செலவிடப்படுகிறது. ஆனால் சேலத்தில் ஆரம்பிக்கப்பட்டால் ஒரு டன் தயாரிக்க ரூ. 2,130 தான் ஆகிறது. ஆகவே ரூர்கேலாவுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் டன் ஒன்றுக்கு 615 ரூபாய் வேறுபாடு வருகிறது. அதனால் சேலம் இரும்பாலைத் திட்டம் நல்ல பயன் அளிக்கக்கூடியதாக இருக்கும். இது தஸ்தூர் குழுவின் அறிக்கை. இத் திட்டத்தின் மூலம் 5,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்க வழியிருக்கிறது. ஆகவே வைசாக்கில் தொடங்கலாமா, ஹாஸ்பெட்டில் தொடங்கலாமா, கோவாவில் தொடங்கலாமா, சேலத்தில் தொடங்கலாமா என்று எண்ணக் கூடாது. அந்தந்த மாநிலத்தில் உள்ளவர்களுக்கு அக்கறை இருக்கிறது. ஜுலை 23-ம் தேதி நம் முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் தொடங்க இருக்கிற எழுச்சி நாளில் காங்கிரஸ்காரர்கள் முதற்படியாக வந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு துணையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அடுத்து நமக்கு ஒத்துழைப்பு தருகிற மற்றக் கட்சிக்காரர்களையும் கேட்டுக் கொண்டு, அண்ணா அவர்களின் காலத்தில் இந்த சேலம் இரும்பு உருக்காலை

அமைக்கப்பட்டு, நம் மாநிலம் பிற மாநிலங்களை விட பெயரும் புகழும் பெற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கோ. பூவராகன் : தலைவர் அவர்களே, எங்கள் கட்சி சார்பாக கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையையொட்டி ஒரு சில வார்த்தைகள் சொல்லலாமென்று கருதுகிறேன். நம் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக நல்லமுறையில் தொழில் துறையில் வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதை இங்கு தயாரித்துக் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலிருந்தே அறியலாம். பதினைந்து ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சி எந்த அளவிற்கு இருந்தது என்றால் தொழில் என்று சொன்னால் பஞ்சாலைத் தொழில்தான் என்று சொல்லக் கூடிய நிலை இருந்தது. இன்றையதினம் அந்த நிலை மாறி தொழில் துறையில் நாம் கணிசமான அளவிற்கு முன்னேறியிருக்கிறோம் என்றால் அதற்கு முக்கிய காரணம் தொடர்ந்து ஒரு நிலையான ஆட்சி, உருப்படியான நல்ல ஆட்சி இந்த மாநிலத்தை ஆட்சி புரிந்ததுதான் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மின்சார உற்பத்தியைப் பெருக்கி, போக்குவரத்து வசதிகளைப் பெருக்கி, பொருளாதார துறையில் ஒரு நல்ல சூழ்நிலையை அமைத்திருந்ததனால் தான் இந்த அளவிற்கு நல்ல முறையில் தொழில் வளர்ச்சியைக் காண முடிந்திருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டு நடந்து கொண்டிருக்கும்போது நாம் என்ன நிலையில் இருக்கிறோம், மேலும் பல தொழில்கள் வளர வாய்ப்பிருக்கிறதா என்று பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

எனக்கு முன் பேசிய உறுப்பினர்கள் பொதுத்துறை ,தனியார்த் துறை என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். பொதுத்துறை என்று பார்க்கிறபோது நம் தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கிற மத்திய அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கக்கூடிய தொழில்களையும் இணைத்துப் பார்க்க வேண்டுமே தவிர மத்திய அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிற தொழில்களை விட்டு விட்டு பொதுத்துறை எங்கேயிருக்கிறது, பொதுத்துறை எங்கேயிருக்கிறது என்று கூறும் நிலை இருக்கக் கூடாது. இன்றைய தினம் பொதுத்துறையை வளர்க்க வேண்டுமென்று சொல்கிற நிலையில் உள்ளவர்கள்கூட தனியார்த் துறையை வா வா என்று அழைக்கிற நிலைக்குப் போய்க் 'கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். தொழில்கள் வளரவேண்டும், தொழில்கள் வளர்ந்தால்தான் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும் என்ற நிலையை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். தொழில் வளர்ச்சி என்பது நம் பொருளாதார வளர்ச்சிக்கு ரத்த ஓட்டம் போன்றது. தொழில் வளர்ச்சி நின்று விட்டால் ரத்த ஓட்டம் நின்று விட்டால் என்ன நிலை ஏற்படுமோ அந்த நிலைதான் ஏற்பட்டு விடும்.





தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் விவசாயத்தை முழுக்க முழுக்க நம்பிக் கொண்டிருக்கிற நாடாக இருந்தது. அந்த நிலை மாறி ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு செய்து கொடுக்கக்கூடிய அளவில் கடந்த அரசாங்கம் அந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறது. தொழில்கள் தொடர்ந்து நன்கு வளரவேண்டுமானால் அதற்கு தொழிலில் நல்ல பயிற்சி பெற்றவர்கள் வேண்டும். அதற்காக கடந்தகால அரசாங்கம் பல தொழிற் பயிற்சிக் கூடங்களை ஏற்படுத்தி தொழில்கள் வளருவதற்கான வழி வகைகளைச் செய்திருக்கிறது. அது தொடர்ந்து நீடிக்கப்பட வேண்டும். ஏதோ ஒரு மூலையில் நடக்கும் ஏதோ ஒரு காரணத்திற்காகத் தொழில் வளர்ச்சி நின்று விடக்கூடாது. ஆகவே தொழிற் பயிற்சிப் பள்ளிகளை அதிகமாக ஏற்படுத்த வகை செய்ய வேண்டும்.

நான்காவது திட்டத்தில் எந்தத் தொழில்கள் வளர்க்கப்பட வேண்டும் என்று ஏற்கனவே என்ன கருத்தோடு இருந்தார்கள் என்பதுபற்றி திட்டம் தயாரிக்கப்பட்டு ஒரு சில கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். பொதுவாக பாரதத்திற்கு வேண்டிய பொருள்கள் தயாரிக்கப்பட வேண்டும். குறிப்பாக அந்தந்த மாநிலங்களுக்கு வேண்டிய பொருள்கள் தயாரிக்கப்பட வேண்டும். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய பொருள்களும் தயாரிக்கப்படவேண்டும். இந்த இந்த மாதிரி தொழில்களில் ஈடுபட வேண்டுமென்று விளக்கியிருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஏற்கனவே கூட்டுறவுத் துறையில் இருக்கிற நூற்பாலைகள் உள்ளன. அந்த நூற்பாலைகள் எல்லாம் அவற்றின் சக்தியை இரண்டு மடங்காக்கிக் கொடுக்கும் நிலை இருக்கிறது.

சர்க்கரை உற்பத்தியும் இரண்டு மடங்காக்கப்படவேண்டும் என்ற நியதியை ஏற்படுத்தியிருந்தார்கள். ஏற்கனவேயுள்ள உற்பத்தி நிலையங்களை அதிகமாகப் பெருக்குவார்கள் என்ற ஒரு எண்ணத்தையும் ஏற்படுத்தியிருந்தார்கள். ஆனால் இன்றைய தினம் இந்த அறிக்கையைப் பார்த்தால் அதற்கு என்ன வழிவகை செய்திருக்கிறார்கள் என்று இதில் ஒன்றும் காணவில்லை. தொழில் வளர்ச்சி ஏற்படுகிறபோது பின்தங்கிய வட்டங்கள் எங்கெங்கு உள்ளனவோ அவ்விடங்களில் அக்கறை செலுத்தப்படவேண்டும். அப்படிப்பட்ட இடங்களுக்கு தொழில் நிறுவனங்களில் உள்ளவர்கள் போகமாட்டார்கள். ஆகவே அந்த பின்தங்கிய இடங்களில் அரசாங்கம் தொழிற்பேட்டைகளை அமைத்து தண்ணீர் வசதி, இருக்கை வசதி, மின்சார வசதி, போக்குவரத்து வசதி இவைகளையெல்லாம் செய்து கொடுத்து தொழில்கள் நிறுவ ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த நிலையை மேலும் ஊக்குவிக்க வேண்டும்.

நான்காவது திட்டத்தில் ஒவ்வொரு ரெவின்யூ டிவிஷனிலும் ஒவ்வொரு தொழிற்பேட்டை அமைக்கவேண்டுமென்ற நியதி

இருந்தது. எந்த எந்த மாவட்டங்களில் எந்தெந்த இடங்களில் தொழிற்பேட்டைகளை அமைப்பது என்ற எண்ணம் இருந்தது. தொழிற்பேட்டைகள் சரியாக இல்லை. ஆகவே அவற்றை மூடி விடுவது மேல் என்று சிலர் சொன்னார்கள். எந்தத் தொழிலிலும் அதை ஆரம்பித்தவுடன் போட்ட முதலும், வட்டியும், லாபமும் வந்து விடும் என்று நினைப்பதற்கில்லை. சிலவற்றில் உடனடியாக லாபம் கிடைக்கும். சிலவற்றில் நாள்படக் கிடைக்கும். ஒரு சதவிகிதம், 2 சதவிகிதம்தானே லாபம் வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்ட தொழிற்சாலைகள் ஒரு ஆண்டுக்குள் ஏற்பட்ட தொழிற்சாலைகள் இவைகளில் இருந்து வரும கணக்கை மொத்தமாகப் போட்டு சராசரி பார்க்கிறார்கள். மொத்தம எவ்வளவு வருமானம் என்று பார்க்கிறார்கள். ஆகவே தனித்தனியாக இந்தத் தொழிலில் இவ்வளவு லாபம், இதில் இவ்வளவு லாபம் என்று கணக்கிடுகிற வழக்கத்தை நிதிநிலை தயாரிக்கிறவர்கள் ஏற்றுக்கொளவதில்லை. ஆகவே இதை வைத்துக்கொண்டு நம் தொழிற்சாலைகள் லாபமாக ஓடவில்லை, நஷ்டத்தில ஓடுகிறது, இதில கவனம காட்டவில்லை, அதில் கவனம் காட்டவில்லை என்று குற்றச்சாட்டு கூறுவது பொருத்தமல்ல. தனியார் துறையை அறவே புறக்கணித்து விட வேண்டுமென்று சிலர் கூறினார்கள். இப்போது பொதுத் துறையும் இருக்கிறது, தனியார் துறையும் இருக்கிறது. தனியார் துறைக்கு உதவி செய்கிறோம். அப்படி உதவி செய்வது சும்மா செய்யவில்லை. மின்சாரம் கொடுக்கிறோம், அதற்காக அவர்கள் கட்டணம் செலுத்துகிறார்கள். அவர்கள உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு விற்பனை வரி மூலம் வரி கொடுக்கிறார்கள். அதனால் நமக்கு வருமானம் வருகிறது. அவர்களுக்கு கடன் கொடுத்தால் அதற்கு வட்டி வாங்கிக்கொள்கிறோம். ஆகவே சும்மா விட்டுவிடுவதற்கில்லை. ஆகவே நாம் தொழில் வளர்ச்சியில் எந்த அளவு முன்னேறியிருக்கிறோம் என்ற கண்ணோட்டத்துடன தான் பார்க்க வேண்டும், பொதுத்துறையாக இருந்தாலும் சரி அல்லது தனியார் துறையாக இருந்தாலும் சரி.

பொதுவாகத் தொழில் வளர்ச்சியை நாம் எடுத்துக்கொள்வோமானால், இன்றைய தினம் தொழில்களில் முதலீட்டுக்கு, தொழில் நிறுவனங்களுக்கு முதலீடு செய்கிற நிறுவனங்கள் இருக்கின்றன. அந்த நிறுவனங்களெல்லாம், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அதிகமாகப் பணம் ஒதுக்கம் செய்து தொழில் நிறுவனங்களுக்கு உதவி கொடுக்கும் நிலையில் இருக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. பொதுவாக அந்த நிறுவனங்களெல்லாம் பணம் கொடுப்பதை நிறுத்தி விடக்கூடாது என்றும், நிறுத்தி விடவேண்டும் என்றும் இரண்டு வேறுபட்ட கருத்துக்களைச் சொன்னார்கள். என்னைப் பொறுத்த வரையில், அது போன்ற நிறுவனங்களெல்லாம் இருப்பதால் தான் சிறு சிறு தொழில்கள் வளரச் சந்தர்ப்பம் இருக்கின்றன. அந்த நிறுவனங்



களை எடுப்பதோ, அல்லது கொடுக்கக் கூடிய பணத்தைக் குறைத்து விடுவதோ என்றால், அது தொழில் வளர்ச்சிக்கு ஊறாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சி நிறைய ஏற்படவேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் சாத்தியக்கூறுகள் இருப்பதை நன்றாக ஆராய்ந்து, எந்தெந்தத் தொழில்களைப் பெருக்க முடியுமோ, அவைகளைப் பெருக்க வேண்டும். அதிலும் பார்க்கும்போது எல்லாப் பொருள்களிலும் பற்றாக்குறை இருப்பதைப் பார்க்கிறோம். சர்க்கரையை எடுத்துக்கொண்டால், இனிமேல் புதிதாகச் சர்க்கரை ஆலைகள் கூடாது என்று சொல்லுகிறார்கள். எங்கெங்கே சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்த முடியுமோ, எங்கெங்கே சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் ஏற்படுத்த வேண்டும். நம் நாட்டில் சர்க்கரை உற்பத்தியில் பற்றாக்குறை இருக்கிறது. எதிலும் தமிழ் நாட்டில் இருக்கிற நிலைமையை மட்டும் வைத்துப் பார்க்கக் கூடாது. தேச நிலையில் எந்த அளவுக்குப் பற்றாக்குறை இருக்கிறது என்று பார்க்க வேண்டும். தொழில் வளர்ச்சி என்று பார்க்கும்போது தேசீய அடிப்படையில் பார்க்க வேண்டுமே தவிர, தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் நிலைமையைப் பார்த்து அமைக்கின்ற நிலை இருக்குமானால், அதை உண்மையான வளர்ச்சியாக எடுத்துக்கொள்ள முடியாது. அது தேசீய அடிப்படையில் இருக்கவேண்டும் தென் ஆற்காடு மாவட்டத்தில் திருவெண்ணைநல்லூரில் கரும்பு உற்பத்தி இருக்கிறது. ஏற்கெனவே, கூட்டுறவுத் துறையில் நான்காவது திட்டத்தில் மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே ஒன்று திருவெண்ணைநல்லூரில் ஏற்படுத்தப்படவேண்டுமென்று அங்கிருந்து மக்கள் கையெழுத்துப் போட்டு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க அனுமதி கோரியிருக்கிறார்கள், அதை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த சமயத்திலே கூறிக்கொள்கிறேன்.

நெய்வேலியையொட்டி அங்கே சிறு சிறு தொழில்கள் வளர ஏற்பாடு செய்யவேண்டும். அங்கு தொழில் பேட்டைகள் ஏற்படுத்தவேண்டும். அது மட்டுமல்லாமல் அங்கே நல்ல தொழிற் பயிற்சிப் பள்ளிகள் ஏற்படுத்தி சிறு சிறு தொழில்கள் விரிவு அடையச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். 160 கோடி ரூபாய் அளவுக்கு பெரிய அளவிலே மத்திய அரசு ஏற்படுத்தியிருந்தாலும், அங்கே சிறு சிறு தொழில்கள் வளர வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன. நெய்வேலியில் நிலக்கரி பயன் படுத்தப்பட்ட பிறகு வருகின்ற சாம்பலை வைத்து இரண்டாம் தரமான சிமெண்ட் உற்பத்தி செய்ய அந்த சாம்பல் உபயோகப் படும் என்று சொல்லுகிறார்கள். அந்தச் சாம்பலை உபயோகப் படுத்தி சிறு அளவில் சிமெண்ட் உற்பத்தி செய்யக் கூடிய தொழிற் சாலையை ஏற்படுத்துவதுபற்றிப் பரிசீலனை செய்து ஏற்படுத்த வேண்டும்.

கள்ளக்குறிச்சி, மாமண்டூர் பகுதியில் செம்பு கிடைக்கிறது. அது ஆராய்ச்சி செய்யப்பட்டு முடிவும் நல்ல விதமாகவே இருக்கிறது என்று அறிகிறேன். அந்த அறிக்கையும் நம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. அந்த அறிக்கையைப் பரிசீலனை செய்து விரைவிலே, எவ்வளவு சீக்கிரத்தில் அந்தத் தொழிலை ஆரம்பிக்க முடியுமோ அதை ஆரம்பிக்க வேண்டும் என்று இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ளுகிறேன்.

எனக்கு முன் பேசிய நண்பர் ஒருவர் விருத்தாசலத்தில் இருக்கிற பீங்கான் தொழில்சாலையில் பண்டங்கள் அப்படியே தேங்கிக் கிடக்கின்றன என்று சொன்னார்கள். அது தாற்காலிகமான தேக்கம். அதை வைத்துக் கொண்டு தொழில் முன்னேற்றம் இல்லை என்று சொல்லிவிட முடியாது. நம் நாட்டிலே விருத்தாசலத்தில்தான் பீங்கான் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை பொதுத் துறையில் இருக்கிறது. அதை மேலும் வளர்க்கவேண்டும். அரசாங்கத்தினால் கட்டப்படுகிற கட்டடங்களுக்கும் வீட்டு வசதி இலாகாவினால் கட்டப்படுகிற கட்டடங்களுக்கும் அவர்கள் சப்ளை செய்து வந்தார்கள். வீட்டு வசதி இலாகாவினால் கட்டப்படும் கட்டடங்கள் குறைக்கப்பட்டிருப்பதால்தான் விற்பனை குறைந்திருக்கிறது. அந்தப் பொருள்களை பம்பாய் போன்ற நகரங்களுக்கு அனுப்பத் தயாராக இருப்போமானால், அவைகள் நல்ல விலைக்குப் போகும் என்று சொல்லுவேன். அதை விருத்திசெய்ய வேண்டும். விருத்தாசலத்தில் இருக்கிற தொழில் பேட்டையில் 29 தொழிற்கூடங்களை அமைக்கவேண்டுமென்று இருக்கிறது. அவைகளுள் 8 தான் அமைந்திருக்கின்றன. விரைவாக, உடனடியாக அந்த 29 தொழிற் கூடங்களையும் ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையை உருவாக்கி, நல்ல முறையில் அந்தத் தொழிற் பேட்டை வளர்க்கப்படவேண்டும். அதற்கான வாய்ப்புக் கூறுகள் நிறைய இருக்கின்றன.

பல தொழில்களை ஒவ்வொரு இடத்திலும் சந்தர்ப்பங்கள் ஏற்படும்போது வளர்க்கவேண்டும். ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும்போது, புதிய அரசாங்கம் வந்த பிறகு ஒன்றுமே ஏற்படுத்தவில்லையே என்று கேட்டதற்கு, மேட்டூரில் பிளாஸ்டிக் ப்ராடக்ட்ஸ் தொழிற்சாலை, மேட்டுப் பாளையத்தில் வாட்டில் எக்ஸ்ட்ராக்ட் தொழிற்சாலை, இங்கே இந்தியா பிஸ்டன் தொழிற்சாலை எல்லாம் ஆரம்பிக்கவில்லையா என்று சொன்னார்கள். இந்தத் தொழிற்சாலைகளுக்கான வேலைகளை எப்போது ஆரம்பித்தார்கள், எப்போது வேலைகள் முடிந்தன, யார் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன என்று பார்க்க வேண்டும். சில பத்திரிகைகளில் தவறான செய்திகள் வருகின்றன. டிசம்பர் 31-ம் தேதி போய், ஜனவரி 1-ம் தேதி வந்து ஒரு ஆண்டு சுற்றுப்பிரயாணம் முடித்துவிட்டு வந்தேன் என்று சொல்வார்கள். அந்த மாதிரி குறுகிய காலத்தில் இப்படிப்பட்ட தொழில்களை ஏற்படுத்தியிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள்.





இன்னொரு சமயம் சொல்லும்போது வேலை வாய்ப்பைத் தேடிக் கொடுக்க, புதிய வாய்ப்புக்களைத் தேடிக் கொடுக்க இந்த நிதி நிலை அறிக்கையிலே திட்டம் ஏதும் இல்லை என்று சொன்னதற்கு, அவர்கள் வேடிக்கையாகச் சொன்னார்களோ அல்லது வினயமாகத்தான் சொன்னார்களோ, இருக்கின்ற ஃபோன்களை எல்லாம் எடுத்துவிட்டால் ஒரு கோடிப் பேர்களுக்கு மட்டை விசிறி செய்யும் வேலை கொடுக்கலாம், ரைஸ் மில்லையே எடுத்துவிட்டால் 10 லட்சம் பேர்களுக்கு நெல் குத்தும் வேலை கொடுக்கலாம் என்று சொன்னார்கள்—வேடிக்கையாகக் கூடச் சொல்லியிருக்கலாம். சட்டமன்ற அங்கத்தினர்கள், குறிப்பாகத் தொழில் வளர்ச்சிக்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது, என்ன என்ன விதத்தில் வாய்ப்புக் கூறுகள் ஏற்படுத்திருக்கிறார்கள், என்ன புதிய தொழில்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று கேட்டால் அவர்களுக்கு உண்மையான நிலைமை விளக்கப்படவேண்டும். அப்படி நிலைமையை விளக்குவதற்கு மாறாக, வேறு விதமாகச் சொல்லுவார்களானால், எல்லா இடங்களிலும் உள்ள ஃபோனை எடுத்து விடப்போகிறார்களோ, ரைஸ் மில்களையே எடுத்துவிடப் போகிறார்களோ என்று மக்களெல்லாம் நினைக்கக் கூடிய சூழ்நிலை உருவாகக் கூடும். அந்த நிலை இருக்கக் கூடாது என்று சொல்லிக் கொள்வேன்.

சேலம் இரும்பாலை பற்றி எழுச்சி நாள் வேண்டுமென்று சொன்னார்கள். சேலம் இரும்பாலை பற்றிப் பொதுவாக மேலவையிலே கூட டாக்டர் லட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் ஒரு பக்கம் இந்த அரசாங்கத்திற்குப் பாராட்டுச் சொன்னார்கள். அதோடு இதற்கு எழுச்சி நாள் அவசியமில்லை. அது இல்லாமலேயே இதைச் சாதிக்க முடியும் என்று கூறியிருக்கிறார். எழுச்சி நாள் பற்றி முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நான்கு நாட்களாகச் சென்னை நகரத்தில் பார்க்கிறோம்—தடி எடுத்தவன் தண்டல்காரன் என்ற நிலை. அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எழுச்சி நாள் என்றால் ஏற்படக் கூடிய நிலைமைகளை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி எழுச்சி நாள் வைத்துக்கொண்டால், எல்லோரும் ஒரே மாதிரி இருப்பார்கள் என்று கருத முடியாது. எல்லோரும் முதல் அமைச்சர் மாதிரி இருப்பார்கள் என்றால் ஆரம்பிக்க வேண்டியது தான். அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஒரு சிலர் அப்படி இருப்பவர்களும் இங்கே இருப்பார்கள். ஒரு சிலர் ஏன் வேறு விதமாகச் செல்லக் கூடாது? இதனால் தொழிற் கூடங்களும் மற்ற காரியங்களும் பாதிக்கப்படும். சூழ்நிலை ஏற்பட்டால் என்ன ஆகும் என்று எண்ணிப் பார்க்கவேண்டும். மத்திய அரசு இன்னும் 'உண்டு', 'இல்லை' என்று சொல்லவில்லை. அப்படி 'இல்லை' என்று சொன்னாலும் நாம் அதை ஆரம்பிக்கத் தயாராக இருக்கிறோம். அதற்கு நாம் எல்லா வகையிலும் தயாராக இருக்கிறோம். மத்திய அரசாங்கமே அந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறது. 100 கோடி ரூபாய் அதற்குச் செலவு ஆகும். இருந்தாலும் ஒரே ஆண்டில்

அதைச் செலவழிக்கவேண்டியதில்லை—செலவழிக்கவும் முடியாது. ஐந்து, பத்து ஆண்டுகளில் திட்டமிட்டு செலவு செய்து மாநில அரசே ஏற்றுக்கொள்ளும் முறையில் கூடுமான முயற்சி எடுப்போம். எப்படி இருந்தாலும் நாமே ஆரம்பிக்கத் தயாராக இருக்கிறோம் என்ற உள்ளத் தெளிவோடு இருக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. அ. லெ. சுப்பிரமணியம் : பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று நான் என்னுடைய ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இன்றைக்கு தொழிலிலே முதலீடு செய்யும்போது, இரண்டு விதமான முதலீடுகள் இருப்பதைக் காண்கிறோம். முதலில் தனியார் துறை முதலீடும், இரண்டாவது அரசாங்கமே ஏற்று நடத்துகிற தொழில்களில் முதலீடும் ஆகும். இன்றைக்கு இந்திய அரசு இரண்டையும் இணைத்து சோஷலிஸ்ட்டிக் பாட்டேர்ன் என்று ஜனநாயக சோஷலிச அடிப்படையில், தனியார் துறையும் இருக்கும், அரசாங்கத் துறையும் இருக்கும் என்ற அடிப்படையில் தொழிலை வளர்த்தார்கள். ஆனால் அவர்கள் கொள்கை அளவில் சோஷலிஸ்ட்டிக் பாட்டேர்ன் என்று கொண்டார்களே தவிர, அவர்கள் செய்ததெல்லாம் தனிப்பட்ட முதலாளிகளை வளர்த்திருக்கிறார்கள் என்று இந்த மன்றத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.
பி பகல் 1-0 இந்திய அரசாங்கம் ஆனாலும் சரி, அல்லது இங்கிருந்த முந்திய அரசாங்கம் ஆனாலும் சரி, தனியார் துறையை வளர்ப்பதிலே அதிக கவனம் காட்டியுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முன்னாள் அமைச்சர் திரு. பூவராகன் இந்திய அரசாங்கம் அரசாங்கத் துறையிலேயே அதிகப்படியாக தொழில்களை நடத்தவில்லையா என்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நான் ஒன்று கூற விரும்புகிறேன். அவர்களிடத்திலேயே இப்பொழுது ஒரு 'அப்ரூவர்' இருக்கிறார் என்று நான் கூற விரும்புகிறேன். முன்னாள் நிதி அமைச்சர் திரு. டி.டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு இருக்கிற இந்திய அரசாங்கத்தின் பொருளாதாரம் கிட்டத்தட்ட 50, 60 குடும்பங்களின் கையிலே சிக்கி இருக்கிறது என்று அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள், அந்த அளவுக்கு தனியார் துறையை வளர்ப்பதிலே தான் முந்திய அரசு அக்கறை கொண்டிருந்தது என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். இப்பொழுதிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் நிச்சயம் இந்தத் தொழில்களையெல்லாம் விரைவிலே தேசியமயமாக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். தொழில்களை நாஷனலைஸ் செய்வதில் இரண்டாவதாக ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். தொழில்கள் அனைத்தும் டிசென்ட்ரலைஸ் செய்யப்படவேண்டும் என்ற அடிப்படையில் பரவலாக்கப்படவேண்டும்.



இந்த மாநிலத்தை எடுத்துக்கொண்டால், சென்னையிலும் சென்னையைச் சுற்றியுள்ள 10 மைல்கள் தூர அளவிலும் தான் தொழில்கள் வளர்ந்திருக்கின்றன. ஆவடி தொழிற்சாலை, பெரம்பூரில் இருக்கிற ரயில் பெட்டி தொழிற்சாலை, என்று எதைச் சொன்னாலும் சரி; சென்னையிலும், அதற்கு அடுத்திருக்கிற பகுதிகளிலும்தான் தொழிற்சாலைகள் அமைந்திருக்கின்ற நிலையைப் பார்க்கிறோம். ஆகவே இந்த நிலைமையை தவிர்த்து திருநெல்வேலி, கன்யாகுமரி போன்ற மாவட்டங்களில் தொழில்கள் பரவலாக நிறுவப்படவேண்டும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சென்னையிலும், சுற்றுப்புறத்திலும் தொழில்கள் அமைவதில் ஒரு நன்மை இருக்கிறது. போக்குவரத்து மிக எளிதாக இருக்கும்; ஆதலால்தான் இங்கே தொழில்கள் அதிகமாக இருக்கின்றன என்ற ஒரு வாதத்தை அவர்கள் வைக்கக்கூடும். கிராமங்களில், மொபசில் என்று சொல்லக்கூடிய இடங்களில் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டால் ஒரு வேளை போக்குவரத்துச் செலவு அதிகமாகக்கூடும். ஆனால் அங்கே தொழிலாளர்கள் மிகக் குறைந்த அளவு ஊதியத்தில் வேலை செய்ய முன்வருவார்கள். ஆகவே போக்குவரத்துக்கு அதிகப்படியாக ஆகக்கூடிய செலவை—லேபர் சுலபமாக கிடைக்குமாதலால்—சரிகட்டிக் கொள்ளலாம். ஆகவே, தொழில்கள் அந்த முறையில் பரவலாக்கப்படவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

பெரிய தொழில்களில் மட்டும் அதிகப்படியாக முதலீடு செய்யாமல் அந்தப் பெரிய தொழில்களை பல பகுதிகளாகப் பிரித்து, சிறு சிறு தொழில்களை அதிகமாக துவக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். வெளிநாடுகளிலுள்ள நிலைமையைப் பார்த்தால், அங்கே போதுமான தொழிலாளர்கள் கிடைப்பது ரொம்ப கஷ்டம். மனித சக்தியை அங்கே பயன்படுத்துவது மிகக் கடினம். நம் நாட்டிலுள்ள சூழ்நிலை வேறு. இங்கே மனித சக்தி அதிகமாகக் கிடைக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அப்படி பயன்படுத்திக்கொள்கிற நேரத்தில் வேலையில்லா திண்டாட்டம் நிச்சயம் நீக்கப்படும் என்று கருதுகிறேன். தொழில்கள் பரவலாக அமைக்கப்படுவதோடு, சிறு தொழில்களும் அதிகமாக துவக்கப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் அமைச்சரவையை கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்டம் தொழிலில் மிகவும் பின்தங்கிய ஒரு மாவட்டமாக இருக்கிறது. நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பலர் இலங்கை, பினங்கு போன்ற வெளி நாடுகளுக்குச் சென்று வாழ்க்கை நடத்திவந்தார்கள். இலங்கை அரசின் கொள்கை மாறுபாட்டின்காரணமாக எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த ஏராளமான பேர்கள் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அப்படி இலங்கையிலிருந்து திரும்பிவந்து அவதிப்படுகிறவர்கள் நெல்லை மாவட்டத்தில் அதிகமாக இருப்

[திரு. அ. லெ. சுப்பிரமணியன்] [1967 ஜூலை 8

பதினுல் நிச்சயம் அந்த மாவட்டம் தொழில் துறையில் முன்னேறினுல் தான் அங்கே வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்க முடியும். நெல்லை மாவட்டத்தில் தொழில் முன்னேற ஏற்பாடுகள் செய்யவேண்டும். அங்கு தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்படவேண்டுமென்ருல் அங்கே இருக்கிற தூத்துக்குடி துறைமுகத் திட்டம் நல்ல முறையில் நிறைவேற்றப்படவேண்டும். ரூபாய் 5 கோடி தூத்துக்குடி துறைமுகத் திட்டத்திற்காக செலவு செய்யப்பட்டிருக்கிறது. ரூபாய் 21 கோடி செலவு செய்யப்படும் என்று கணக்கு கூறுகிறது. இப்பொழுது தமிழக அரசு நிச்சயம் இந்திய அரசை வற்புறுத்தி, தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தை அமுல் நடத்தினுல் தான் நெல்லை மாவட்டத்திலே தொழில்துறையிலே நல்ல முன்னேற்றம் காணமுடியும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தை அமுல் நடத்தினுல், சுற்றியுள்ள இடங்களில் உப்பளங்கள் ஏற்பட்டுவிடும். ஏராளமான தொழிலாளர்கள் உப்பளத்தில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

நான் சார்ந்திருக்கிற திருநெல்வேலி தொகுதியில் நெசவுத் தொழிலாளர்கள் இருக்கிருர்கள். பாளையங்கோட்டையிலே 20, 25 சதவிகிதம் மக்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிருர்கள். அந்தத் தொகுதிக்கு அடுத்த மேலப்பாளையம் தொகுதியில் 70 சதவிகிதத்தினர் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிருர்கள். இந்த மூன்று முனிசிபாலிடிகளையும் ஒன்ருக இணைத்து, ஒரு நூற்பு ஆலையை பாளையங்கோட்டைக்கும் மேலப்பாளையத்திற்கும் இடையே உள்ள காலி இடத்தில் ஏற்படுத்திக் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், நெல்லை மாவட்டத்தில், திருச்செந்தூர், நாங்குநேரி, ராதாபுரம், சாத்தாங்குளம் ஆகிய பகுதிகளில் பனைமரங்கள் அதிகம். ஆகவே, அங்குள்ள மக்களை ஊக்கிவைக்கும் வகையில் அங்கே பனைவெல்லம் காய்ச்சும் தொழிற்சாலை ஒன்றை அமைத்துக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் தொழிலை ஊக்கிவைக்கிற வகையில் நெல்லைத் தொகுதியிலே ஒரு பி.ஈ. தொழில் கல்லூரி ஏற்படுத்தித்தரவேண்டும் என்று இந்த அமைச்சர் அவையை கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. நா. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் தொழில் மான்யத்தில் எங்கள் கட்சி கொண்டுவந்திருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில் தொழில் துறையில் நல்லதோர் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதற்கு முன்ருலிருந்த அரசு தொழில்துறையில் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளும், அந்தத் துறையை நிர்வகித்து வந்த முன்ருள் தொழில் அமைச்சர் அவர்களுடைய முயற்சியும் தான் காரணம் என்று சொன்னுல் அது மிகையாகாது. குறிப்பாக இந்த அரசு புதியதாக பெரிய தொழில்களையும், சிறிய



1967 ஜூலை 8] [திரு. நா. சௌந்தரபாண்டியன்]

தொழில்களையும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டதாகக் காணப்படவில்லை என்பது வருந்தத்தக்க விஷயம் என்று சொலிக் கொள்கிறேன்.

தொழில் துறையை எடுத்துக்கொண்டால், சென்னையும் அதைச் சுற்றியுள்ள பிரதேசமும்தான் நல்ல முறையில் வளர்ந்திருக்கிறது. மற்ற மாவட்டங்களில் நல்ல முறையில் தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்படுவதற்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கப்படவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில், நாங்குனேரி தாலுகாவைப் பொறுத்த வரையில், அது தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய பிரதேசம் என்று கருதித்தான் அங்கே ரூரல் இண்டஸ்ரீஸ் பைலட் பிராஜக்ட் ஸ்கீம் ( Rural Industries Pilot Project Scheme ) கிராமத் தொழில் முன்னோடித் திட்டம் என்று ஒரு திட்டத்தை நமது இந்திய அரசு துணைகொண்டு நடத்திவருகிருர்கள். இந்தத் திட்டம் அங்கே நான்கு ஆண்டுகளாக நடைபெற்றுக்கொண்டிருந்தாலும் கூட, குறிப்பாக ஒரு முக்கியமான தொழிலும் அங்கு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அங்கிருந்து இங்கு ஏதாவது திட்டங்கள் அனுப்பட்டிருந்தாலும், அந்தத் திட்டங்களுக்கு மூலப்பொருள்கள் இல்லை, முதலீடு செய்வதற்கு மூலதனம் இல்லை என்று அரசு சொல்லிவிடுகிற காரணத்தினுல், அங்கு தொழில் வளர்ச்சி நல்ல முறையில் ஏற்படவில்லை. நாங்குனேரி தாலுகா சேர்மாதேவிக் கோட்டாட்சிக்கு உள்பட்டது. சேர்மாதேவிக் கோட்டாட்சியில் தொழில் பயிற்சிக்கூடம் தொழில்பேட்டை தொழில் நுட்ப பயிற்சி நிலையங்கள் இல்லை என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். என் தொகுதியிலுள்ள இராதாபுரம் திசையன்விளை, வள்ளியூர் ஆகிய இடங்களில் ஒன்றில் இண்டஸ்டிரியல் டிரையினிங் இன்ஸ்டிட்யூட், ( Industrial Training Institute ) தொழிற் பயிற்சிக் கூடம் ஒன்று அமைத்துத்தர, இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன். மேலும் பின்தங்கிய பிரதேசத்தில் யாராவது தொழில் ஆரம்பிப்பதற்கு முன் வந்தால், அரசு அதற்கு ஊக்கம் கொடுக்கவேண்டும், குறிப்பாக அங்கு ஏற்படுத்தப்படுகின்ற தொழிலில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு விற்பனைவரியிலிருந்து விலக்கு அளிக்கப் வேண்டும். மின்சாரக் கட்டணத்தில் சலுகைகள் கொடுக்கப்பட வேண்டும். இப்படிப்பட்டச் சலுகைகள் வழங்கப்பட்டால் ஒழிய தொழில் துறையில் இருக்கிற முதலாளிகளும், மற்றபடி வசதியுள்ளவர்களும் பின்தங்கிய இடங்களில் தொழில் செய்வதற்கு முன் வரமாட்டார்கள். இப்படி பின்தங்கிய பிரதேசத்தில் பல தொழில்களைத் துவக்குவதற்கு வழிவகை செய்தால் தான், நாங்குனேரி தாலுகா போன்ற பின்தங்கிய பிரதேசங்கள் தொழில்துறையில் முன்னுக்கு வரமுடியும் என்பதை இந்த அரசின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

[திரு. நா. சௌந்திரபாண்டியன்] [1967 ஜூலை 8

வள்ளியூரில் சிமெண்டு தொழிற்சாலை ஒன்று ஆரம்பிப்பதற்கு அரசு தனிப்பட்ட ஒருவருக்கு லைசென்ஸ் வழங்கிற்று. அதைச் சுற்றியுள்ள இடங்களில் அதிக அளவு சுண்ணாம்புக் கற்கள் கிடைப்பதால், அங்கே ஒரு சிமெண்டு தொழிற்சாலை ஏற்படுத்த திட்டமிடப்பட்டது. லைசென்ஸ் பெற்ற தனியார் அந்தத் தொழிற்சாலையை அங்கே இன்னும் ஆரம்பிக்காத காரணத்தினால், அதை அரசே மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாககிராமப்புறங்களில் வள்ளியூரைச் சுற்றி அதிகமாக வாழை மரங்கள் இருக்கின்றன. வாழை மரங்களிலிருந்து வாழை நார் எடுத்து தும்புகள் மூலம் பல தொழில்களை ஏற்படுத்துவதற்கான வசதிகள் இருக்கின்றன அதையும் அரசு ஆராய வேண்டும். வாழை மரங்கள் அதிகமாக இருப்பதினால், வாழைக் காயை பௌடர் செய்து, அதைக் குழந்தைகளுக்கு பால் போன்ற சத்து உள்ள உணவாகத் தயார் செய்து கொடுக்கலாம் என்ற கிராமத் தொழில் முன்னேடி திட்டக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதையும் அரசு கவனித்து அப்பேர்பட்ட தொழிற்சாலையை அங்கே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப்பகுதிகளிலே ( garnet sand ) கார்னெட் சாண்ட் அதிகமாகக் கிடைப்பதால் அதை அரசு பரிசீலனை செய்து அங்கு ( Sand paper ) தேய்ப்புதாள் செய்யும் தொழிற்சாலை ஒன்று நிறுவவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தொழில் துறையில் அந்த பிரசேதம் பின்தங்கி இருப்பதின் காரணத்தால், பாலிடெக்னிக் ஒன்று அங்கு ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நமது நாட்டின் வேளாண்மை வளர்ச்சிக்கு வேண்டிய 'பவர் டிரில்லர்ஸ்' (Power Drillers) 'ராக் பிளேஸ்டிங் யூனிட்' Rock Plasting Unit 'பவர் டில்லர்ஸ்' (Power Tillers) போன்ற கருவிகளை உற்பத்தி செய்யும் தொழில் ஒன்று ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பனைமரங்கள் ஏராளமாக அப்பகுதிகளில் இருப்பதால், பனையேறும் தொழிலாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு லைசென்ஸ் விதிக்கப்படுகிறது. அந்த லைசென்சை உடனடியாக நீக்க வேண்டுமென்றும் அந்தத் தொழிலாளர்களின் பிற்கால வாழ்வுக்கு இது 'இன்ஷ்யூரன்ஸ் திட்டமும்' அமுலாக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அந்தப்பகுதியில் அதிகமான அளவுக்கு செங்கல் உற்பத்தி செய்ய வசதி இருக்கிற காரணத்தால், கிராமத்தொழில் முன்னேடி திட்டத்திலிருந்து செங்கல் உற்பத்திச் செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ வேண்டுமென்று கேட்டதற்கு, திட்டத்தில் நிதி இல்லை என்று அரசு அறிவித்துவிட்டது. ஆயினும் அரசாங்கமே அதை 'டிபார்ட்மெண்டலாக' ச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.



1967 ஜூலை 8]

* திரு. கா. வேழவேந்தன் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் மானியத்தின்மீது நானும் கலந்து கொள்வதற்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய பணிவான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேரு அவர்கள் "இந்த நாட்டில் சாதாரணமாக சூடத்தினுடைய புகையைப் பார்த்து மகிழ்பவர்கள் மகிழட்டும்; என்னைப் பொறுத்தவரையில் ஆலைகளிலே எழுகின்ற புகையைப் பார்த்து மகிழ்ச்சியடைவேன். அது தான் எனக்கு பூரிப்பையளிக்கும்" என்று சொல்வார்கள். ஆனால் அவர்கள் கண்ட கனவு நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் மிகவும் பரிதாபகரமான கனவாகவே முடிந்துவிட்டது. மத்திய சர்க்கார் தொழில் துறையைப் பொறுத்தவரையில் நாம் எதிர்பார்த்த எந்தவிதமான திட்டமும் சீரான முறையில் நிறைவேற்றப்படவில்லை என்பதை வெட்கத்தோடு ஒப்புக்கொண்டாக வேண்டும். சாதாரணமாக இங்கு பேசியவர்கள் கடந்த இருபது ஆண்டுகளில் ஏற்பட்ட எழுச்சியையும் தொழில் வளர்ச்சியையும் பற்றி சொன்னார்கள். ஆனால் நாம் கூர்ந்து கவனித்தால், பொதுவாக எஞ்சின்கள் செய்வது எல்லாம் வடக்கே, பெட்டிகள் செய்வது மட்டுமே தெற்கே என்கிற வகையில் இங்கே சாதாரணமாக ஒன்றிரண்டு தொழிற்சாலைகள் மட்டுமே இருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் அப்படிப் பேசியவர்கள் வடக்கே போயிருந்தால் அங்கே இருக்கிற துர்க்காபூர், பிலாய் தொழிற்சாலைகளைப் பார்த்து அதிர்ச்சியடைந்திருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. வடக்கே இருக்கிற மிகப் பெரிய தொழிற்சாலைகளைப் பார்க்கிற நேரத்தில், அங்கே லட்சக்கணக்கானவர்கள் பணியாற்றி ஒரு புதிய தொழில் நகரத்தை உருவாக்கி, கணிசமான வருமானத்தை ஈட்டி வருகிற நிலையைப் பார்க்கிற நேரத்தில் நமக்கே கூட வெட்கமாகத்தான் இருக்கும். சேலம் உருக்காலை வேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகிறோம். எழுச்சி நாள் கொண்டாட இருக்கிறோம். உண்மையில் இந்த எஃகு தொழிற்சாலைபற்றி அங்கு உள்ள எஃகு உள்ளம் கொண்டவர்கள் இரங்கி வரவில்லை எழுச்சி நாளாவது கொண்டாடி அந்த எழுச்சி நாளில் எல்லோரது ஒருமித்த குரலையும் மூன்றே முக்கால் கோடி மக்களின் குரலையும்–அவர்களின் செவிப்பறைக்கு உணர்த்தும் வகையில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் இன்றையத் தினம் முடிவு கட்டியிருக்கிறது. இதில் எந்தவிதமான உள்நோக்கமும் இல்லை என்பதைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம் தாயன்னை தன்னுடைய மடியிலே ஏராளமான செல்வத்தை வைத்திருக்கிறார்கள். நாம் எடுத்து அனுபவிக்கக்கூடிய திராணியற்றவர்களாக இருக்கிறோம். நெய்வேலியில் நெடுங்காலத்திற்கு, நூறு ஆண்டுகளுக்கு மேலும் எடுக்கக்கூடிய அளவிற்கு நிலக்கரி இருக்கிறது. அதற்குப் பயன்படுத்த வேண்டிய புதிய புதிய ரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்யக் கூடிய கருவிகள் இல்லை. அவற்றிற்கு மட்டும் மத்திய சர்க்கார் உள்ளன்போடு ஒப்புக் கொண்டார்களேயானல், வளர்ச்சித் திட்டத்திற்கு உதவுவார்களேயானல் இன்னும் ஏராளமான அளவுக்கு 100 ஆண்டுகளுக்கு

மேல் எடுக்கக்கூடிய அந்த நிலக்கரியிலிருந்து இன்னும் பலபல இரசாயனப் பொருள்களைப் பெறலாம். இவ்வாறு இருக்கிற செல்வத்தை வைத்துக் கொண்டு, "வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுவதைப்போல" நாம் பரிதாபகரமான நிலையில் இருக்கிறோம்.

குறிப்பாக, இங்கே பேசிய காங்கிரஸ் தரப்பினர் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். எதிர்காலத்திட்டமும், புதிய தொழில் திட்டமும் இங்கே இல்லை; புதிய அமைச்சரவை சமர்ப்பிக்கவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். நீங்கள் ஏற்றிய விளக்கை யாரும் அணைத்துவிடவில்லை. நீங்கள் சிறுசிறு வீடுகளுக்கு ஏற்றி வைக்கவே முனைந்தார்கள், நாங்கள் தெரு முழுதும் பொது விளக்கேற்ற இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**திரு. டி. மார்டின்:** சார், பாயின்ட் ஆப் ஆர்டர், கனம் உறுப்பினர் பேசுகின்றபொழுது 'நீங்கள்' என்ற வார்த்தையைக் குறிப்பிடுகிறார்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர்:** அவ்வாறு பேசுவது கட்டுக் கடங்காமல் போய்விட்டது.

**திரு. கா. வேழவேந்தன்:** இனிமேல்தான், புதிதாகப் பொறுப் பேற்றிருக்கிற தமிழக அரசு புதுப்புத்தொழிற்சாலைகளை நிறுவ வேண்டுமென்ற எண்ணத்தோடு, அண்மையில் முதலமைச்சர் அவர்கள் அறிவித்த சில திட்டங்களின் அடிப்படையில் நிறுவப் போகிறது. காங்கிரஸ் உறுப்பினர்கள் சொல்வார்கள் தனிப்பட்ட நிறுவனங்களையும் சேர்த்து, பொதுவாக நஷ்டத்திலே பொதுத் துறை நடக்கிறதே, இதைப்பொறுத்து பொதுத்துறையைக் காட்டிலும் தனியார் துறைக்கு ஊக்கம் அளிக்கலாம் என்று சொன்னார்கள். இங்கே நாமெல்லாம் உட்கார்ந்திருக்கிற இந்த நாற்காலி மேசைகள் அந்தமான் தீவிலிருந்து தேக்குமரத்தால் செய்யப்பட்டு வருகின்றன. அந்தமானில் ஏராளமான படாக்கு, தேக்கு மரங்கள் இருக்கின்றன. அவற்றை வெட்டி, அவைகளை அறுத்து, இப்படி மரவகைகளாகச் செய்து அனுப்புகிறார்கள். முடிவில் கணக்கைப் பார்த்தால், இருக்கின்ற மரங்களை வெட்டி அவற்றைத் தயார் செய்து அனுப்புகின்ற அந்தத் தொழிற்சாலை நஷ்டத்திலே நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். இயற்கை படைத்த அந்த மரங்கள் வெட்டி அனுப்புவதிலேயே நஷ்டம் ஏற்படுகிறது என்று சொன்னால் புதிய முயற்சிகளை மேற்கொள்ளும் இந்த அரசாங்கத்தினுடைய நிலைமையை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தில் கொண்டு வந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வாக்கியங்கள் சொல்ல ஆசைப்படுகிறேன். மானியத்திலே பேசும்பொழுது [illegible] பேசும்பொழுது அது கட்சிப்பேச்சாக இருக்கிறதே தவிர, இது ஒன்றும் ஆக்க வேலை





என்று சொல்வதாக இல்லை. இருபது வருஷம், இருபது வருஷம் குட்டிச்சுவர், குட்டிச்சுவர் என்று இன்றைய ஆளும் கட்சியின் தேர்தல் பிரசாரமாகவும் வந்திருக்கிறது. ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தச் சென்னை மாநிலத்திலே, தொழிலைப் பொறுத்தவரையில் முன்னேற்றம் கண்டிருக்கிறது என்பதை இந்தியா பூராவும் சுற்றிப் பார்த்தது மட்டுமல்ல; உலகத்திலே பல பகுதிகளையும் சுற்றிப்பார்த்த காரணத்தால் சொல்கிறேன். நேர்மையும், நியாயமுமுள்ளவர்கள் மறுத்துப் பேசமாட்டார்கள். பேச்சுத் திறமையால் தொழில் முன்னேற்றம் அடையவில்லை; வளர்ச்சியே இல்லை என்று மறுத்துக் கூறுவது அழகாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சுதந்திரத்தைப் பெறுவதற்கு முன்னால் சென்னை மாகாணத்திலே எந்தத் தொழிலும் கிடையாது. 1947-க்குப் பின்னால் அதிலும் குறிப்பாக இந்த 10 ஆண்டுகளில் சென்னைப் பட்டணத்திலே, கொஞ்சம் முன்னால் வந்தவர்கள் சுற்றிப்பார்த்தால் எவ்வளவு தொழில் வளர்ந்திருக்கிறது என்பதைக் கண்டிருப்பார்கள், சொல்லியிருப்பார்கள். கண்ணிருந்தும் பார்வையில்லாதவர்கள்தான் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நடந்த காரியத்தை, மிகமிக நன்றாக அறிந்தவர்கள் ஏற்றுக் கொள்வதுதான் தமிழர் பண்பாடு.

மேல்சபையிலுள்ள எங்கள் கட்சியைச் சார்ந்த திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தொழிலமைச்சராயிருந்த காலத்திலே, பத்து வருஷ காலத்திலே, உலகத்திலே பல பாகங்களுக்கும் சென்று எவ்வளவு தூரம் தமிழ் நாட்டுக்கும், தமிழகத் தொழில்களுக்கும் வேறு யாரும் பாடுபடாத அளவுக்கு பாடுபட்டு முன்னேற்றம் செய்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறக்க முடியாது. நாங்கள் செய்தது எல்லாம் தவறு என்று சொல்பவர்கள், உங்கள் தொழில் திட்டமே தவறு, புதிதாக நாங்கள் திட்டம் வைத்திருக்கிறோம் என்று சொல்லியிருபார்களேயானால் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்பேன். ஆனால் அப்படிப்பட்ட திட்டங்கள் இல்லை. ஆகவே ஒரு காரியத்தை, செய்த காரியத்தை அபிவிருத்தி செய்வதை மிகவும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வோம்.

மத்திய சர்க்கார் துறையா, இராஜ்ய சர்க்காரத் துறையா என்று பிரித்துப் பிரித்துப் பேசுவதை விடுத்து, யார் எந்த எந்தத் தொழிலைச் செய்தாலும், அது நமது தமிழக மக்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துகிறதா என்பதைத்தான் நாம் கவனிக்க வேண்டும். நெய்வேலித் திட்டத்தில் வேலை செய்யும் இருபதாயிரம் தொழிலாளர்களும் நம்முடைய தமிழர்கள்தான். நூற்றுக்கு ஐந்து பேர்கள்கூட அங்கே வெளி பகுதியிலிருந்து வந்திருக்க மாட்டார்கள். பெரம்பூர் கோச் பாக்டரியில் வேலை செய்யக்கூடிய ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் நம்முடைய தமிழர்கள் தான். இம்மாதிரி நிலையில் மத்திய சர்க்கார்தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள், மாநில சர்க்காரிடம் இல்லை என்று சொல்லி மனக் கசப்பை உண்டாக்கக் கூடாது. மாநிலத்திற்கு வேண்டி

யதையெல்லாம் நாம் மத்திய சர்க்காரைக் கேட்கலாம், ஆட்சேபணை இல்லை. சேலம் இரும்பு உருக்கு தொழிற்சாலை வேண்டும் என்று முதலமைச்சரோடு சேர்ந்து நாம் எல்லோருமே கேட்கலாம். செய்ய வேண்டிய காரியங்களை நிச்சயமாகச் செய்வோம். அது மாதிரி நாம் செய்வதில் ஆக்க பூர்வமான வேலையை எடுத்துச் செய்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

தொழில் வளர்ச்சி என்னும்போது, அது மூன்று வகையில் ஏற்படுகிறது. சர்க்காரே நடத்தும் தொழில்கள், சர்க்கார் உதவி செய்யும்படியான தொழில்கள், தனியார்த் துறையில் உள்ள தொழில்கள் என்று இருக்கக்கூடிய நிலையில், எந்தத் துறையிலாகட்டும் தொழில் வளம் பெற வேண்டும் என்பதுதான் முக்கியம். தொழில் வளம்பெற்றால்தான், பொருளாதாரம் மிகவும் சிறந்த முறையில் அமைக்கப்படும். அப்பொழுதுதான் வாங்கும் சக்தி இருக்கும். எந்தத் தேசத்தில் தொழில்கள் வளரவில்லையோ, எந்தத் தேசத்திலே தொழில்கள் வளம்பெறவில்லையோ, அந்த தேசத்தின் பொருளாதாரம் சிறப்பாக இருக்க முடியாது. ஆகவே, விட்டுச்சென்ற, குறைவாக இருக்கும்படியான தொழில் பேட்டைகளை ஆக்கத்துடன் செய்வதற்கு சர்க்கார் முன்வரவேண்டும். குறிப்பாக, கூட்டுறவு இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் எந்த எந்த இடத்தில் ஆரம்பிக்கப்பட்டதோ, அந்த இடத்திலெல்லாம் அதை வெற்றிகரமாக நடத்துவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்வார்கள் என்று நினைக்கிறேன். சமீபத்தில் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, சேலத்திலிருக்கும் கூட்டுறவு தொழிற்பேட்டையை எடுத்து நடத்தவேண்டும் என்று நான் சொல்லியிருந்தேன். நிதி வசதி சாத்தியமானால், ஒவ்வொரு பகுதியாகச் செய்வதாக வாக்களித்திருக்கிறார்கள். அம்மாதிரி இப்பொழுது இருக்கும்படியான நிலையில், அரசியல் கருத்தை நாம் புகுத்தாமல் தமிழகத்தில் தொழில்கள் வளம்பெறவேண்டும். தமிழக மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வேண்டும் என்பதிலே கண்ணுங்கருத்துமாக நாம் இருக்க வேண்டும் என்பதிலே இந்த சர்க்கார் கவனம் செலுத்தும் என்று நான் நம்புகிறேன். இம்மாதிரி நிலையில், ஏற்கனவே இருந்தவர்கள் செய்ததெல்லாம் தவறானவை, நாம்தான் இப்பொழுது எல்லாம் செய்யப்போகிறோம் என்ற மனப்பான்மை இருக்கக்கூடாது, தொழில் வளர்ச்சிதான் மிகமிக முக்கியமானது. தொழில் வளர்ச்சி இல்லாவிட்டால் நாடு முன்னேற முடியாது. ஜப்பானிலும், மேற்கு ஜெர்மனியிலும் உபயோகப்படுத்தும் பொருள்களை (கன்ஸ்யூமர் குட்ஸ்) குறைந்த உற்பத்திச் செலவில், அதிகமான அளவிற்கு உற்பத்தி செய்யும்படியான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த நிலைமை நம் நாட்டிலும் உருவாக்கவேண்டும். அதிக அளவிற்கு உற்பத்தி பெருகவேண்டுமானல், சட்டம் அமைதி பாதுகாக்கப்பட வேண்டும். மக்களிடத்தில் பீதி இல்லாமல் இருக்கவேண்டும். சர்க்கார் நடத்தும்படியான தொழில்களில் ஏன் அதிகமாக லாபம் வருவதில்லையென்றால், சர்க்கார் நடத்தும்படியான தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ளுவதில்லை. ஏதோ சர்க்காரப் பணம்



என்றால் ரூபாய்க்கு 100 காசு என்று மதிப்பிடாமல், ரூபாய்க்கு 70 காசு மதிப்பு என்றுதான் நினைத்துக் கொள்ளுகிறார்கள். அதே சமயத்தில், தனியார்த் துறை என்றால் ரூபாய்க்கு 150 காசு மதிப்பிட்டு, சிக்கனமாகச் செலவு செய்யப்பட்டு நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறுகிறது. ஆகவே, சர்க்காரத் துறை, தனியார்த் துறை என்று இப்படியாகப் பிரித்துப் பார்க்கும் மனப்பான்மை நமக்கு மாறவேண்டும். சர்க்காரே தொழில்களை ஆரம்பித்து விட வேண்டும் என்று சொல்லுவது. ஆனால், அந்த இடத்தில் சரியாக வேலை செய்யாமல் இருப்பது. தொழிலாளர்களுக்கு அதிகமாக வசதி வேண்டும் என்பது, தொழிலாளர்களை ஏவி விடுவது, தொழிலாளர்களை ஏவிவிட்டு, சர்க்காரத் துறையில் வேலை நடக்காமல் செய்வது, அதேசமயத்தில் தனியார் துறையிலும் வேலை நடக்காத நிலைமை நாட்டிலே இருக்குமானால், அதனால் என்ன ஆபத்து என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் எத்தனையோ திட்டங்களைப் போட்டாலும், அவற்றில் ஈடுபட்டுள்ளவர்கள் வேலை செய்யாமலிருப்பதற்காக நமது நாட்டிலே ஒரு கட்சி இருக்கிறது. இந்த நாட்டில் தொழில் ஸ்தம்பிக்க வேண்டும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தொழில் செய்யாமல் இருக்க வேண்டும், இந்த நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்படக்கூடாது என்னும்படியான நிலையில், மக்களுடைய உரிமை, மக்களுடைய உரிமை என்னும்படியான நிலையில், கடமையை மறந்து, உரிமை அதிகமாக்கி, அதைக் கூடுதலாக வைத்து அரசியலை வளர்த்துக் கொள்ளும்படியான கட்சி நமது நாட்டில் இருக்கும் வரை நம்முடைய நாடு என்றும் சுபீட்சப் பாதையில் போக முடியாது என்பதைத் திட்ட வட்டமாக சர்க்கார் உணரவேண்டும். இந்த நாட்டில் தொழில் வளர்ச்சி நன்றாக ஏற்படவேண்டுமானல், பொருளாதார வளர்ச்சி நன்றாக ஏற்படவேண்டுமானல், உள்ளொன்று வைத்து வெளியொன்று செய்து, அராஜகத்தை ஏற்படுத்தக் கூடியவர்கள்மீது கண்டிப்பான, நிலையான, உறுதியான நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் தொழில்கள் வளர்ச்சியுறுவதற்கும், நம்முடைய நாட்டு மக்கள் பொருளாதாரத்தில் மேன்மையுறுவதற்கும் வகை செய்தவர்களாவோம் என்று நினைவுபடுத்தி, எங்கள் தரப்பில் கொண்டுவரப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் உரையை முடிக்கின்றேன்.

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்தத் தொழில் துறை மானியத்திற்கான விவரங்களையெல்லாம் தொழிலமைச்சர் அவர்கள் பின்னர் விளக்கிப் பேசவிருக்கிறார் என்றாலும், சில பொதுப்படையான கருத்துக்கள் உறுப்பினர்களாலே எடுத்துச் சொல்லப்பட்டதாலே அவைகளுக்குத் தொடர்பான சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். "அவைகளுக்குத் தொடர்பான கருத்துக்கள்" என்றுதான் குறிப்பிட்டேனே தவிர, அவைகளுக்கு மாறுபாடான கருத்துக்கள் என்று நான் சொல்லவில்லை.

பொதுவாக, இந்த நாட்டிலே தொழில் வளரவேண்டும் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளுகின்ற ஒரு கொள்கையாகும். ஆனால் கருத்து வேறுபாடு எதிலே வருகிறது என்றால், எந்த விதமான தொழில் வளரவேண்டும் என்பதிலே ஒவ்வொருவருக்கும் ஒரு கருத்து இருக்கலாம், அது எந்தத் துறையிலே வளரவேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு இருக்கலாம். அந்தத் தொழில் வளர்ச்சியின் முழுப் பலனை யார் அனுபவிக்கிறார்கள் என்பதிலே கருத்து வேறுபாடு இருக்கலாம். இந்த வேறுபாடுகளின் அடிப்படையிலேதான் பல்வேறு கட்சிகளாக நாம் இயங்கிக் கொண்டிருக்கிறோம். ஆகையால் தொழில் வளர வேண்டும் என்பதிலே யாருக்கும் அபிப்பிராயபேதம் இல்லை என்று எடுத்துக் கொள்ளுகிறபோது, முதன் முதல்—இப்பொழுது இருக்கிற நிலையில்—புதிதாகப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற நாங்கள் உடனடியாகப் பெரிய பெரிய தொழில் திட்டங்களை ஆரம்பிக்கவில்லை என்பதைப்பற்றிச் சிலர் மனக்குறைப் பட்டுக்கொண்டதாகத் தெரிய வருகிறது. தொழில் வளரவேண்டும் என்பதிலே நாங்கள் ஒருமித்த கருத்தோடு இருக்கிறோம் என்பதைச் சொல்லும்போது, இப்பொழுதிருக்கிற நிலையில், பொருளாதாரத் துறையில் ஏற்பட்டிருக்கிற மந்த நிலையைப் போக்குவதுதான் ஒரு பொறுப்புள்ள சர்க்காருடைய முதல் வேலையாக இருக்கவேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்.

ஆங்கிலத்தில் recession என்று சொல்லுவார்கள். ஏற்கனவே நல்ல முறையில் இயங்கிக்கொண்டுவந்த பல தொழில்கள் மந்தப்படுத்தப்பட்டு, இன்றையதினம் சரியான முறையில் நடத்தப்பட முடியாமல், அவர்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள் கிடைக்காத காரணத்தினாலோ, அல்லது தொழிற் தகராறு ஏற்பட்ட காரணத்தினாலோ அல்லது தங்களது மூலதனத்தை வேறு தொழிலுக்குத் திருப்ப வேண்டும் என்ற எண்ணத்தினாலோ, அல்லது நிருவாகத்தைச் சரியாகப் பாதுகாக்க முடியாத காரணத்தினாலோ, அல்லது எல்லாக் காரணங்களும் சேர்ந்ததனாலோ, எந்த நிலைமைகளினாலோ, இன்றையதினம் தொழிற்துறையிலே ஏற்பட்டிருக்கிற recession என்று சொல்லுகிற இந்த மந்த நிலைமையை முதலிலேயே நாம் போக்கியாக வேண்டும். அந்த மந்த நிலைமைப் போக்கப்பட்டாலொழிய, தனியார்த் துறையானாலும், பொதுத் துறையானாலும், புதிய தொழில்கள் ஆரம்பிப்பதென்பது முடியாத காரியமாகும். ஆகையால்தான், இப்பொழுது பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற, தமிழக அரசை நடத்துகிற நாங்கள் புதிய புதிய தொழில்களை ஆரம்பிக்கிறோம் என்று பட்டியலைத் தருவதைவிட, முதலிலேயே தெளிவாக ஒன்றைச் சொல்லியிருக்கிறோம், அதாவது—

'Consolidation of existing units is to be the immediate scheme rather than expansion or beginning of new units.'

என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, இதிலே ஒன்றும் புதிய தொழில் திட்டத்தை ஆரம்பிக்கவில்லையே; ஏற்கனவே இருந்ததைத்தானே வைத்துக்கொண்டிருக்கிறார்கள்; நாங்கள் நாற்பது



ஆரம்பித்திருந்தால், இவர்கள் நாற்பத்தைந்து ஆரம்பிப்பார்கள், இதைத் தவிர வேறு இல்லை என்று நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர்களாலே சொல்லப்பட்டதனால், இவர்கள் காலத்திலேதான் என்ன நடந்தது என்பதை ஆராய வேண்டிய அவசியம் வருகிறது. இல்லையென்றால், நாம் அதிலே போகவேண்டிய அவசியம் இல்லை. அதிலும், நம்முடைய முன்னாள் தொழிலமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்களிடத்தில் எனக்குத் தனிப்பட்ட முறையில் மிகுந்த மதிப்பு உண்டு. நாம் அவரை இழுத்துவைத்து நம்முடைய வாதங்களுக்குச் சொக்கட்டான் காயாக ஆக்கும்போதுதான், அவரை மிகவும் பாராட்டிப் பேசுகிறபோதுதான், எதிர்த்தரப்பிலே உள்ளவர்கள் அதில் என்னென்ன குறைபாடு இருக்கிறது என்பதைச் சொல்லவேண்டி வருகிறது. ஆகவே, இரண்டு பேருமே அவர்களுக்கு நண்பர்கள் என்று நான் கருதவில்லை.

நாம் இதிலே பார்க்கவேண்டியது—என்னென்ன தொழில்களைத்தான் இதுவரையில் உண்டாக்கியிருக்க முடிந்தது என்பதை. இரண்டு மூன்று வருஷங்களினுடைய புள்ளி விவரங்களைப் பார்த்தால் தெரிகிறது. 1964-65-வது ஆண்டில் தனியார் துறையில் (ப்ரைவேட் செக்டார்) 40 தொழில்கள் துவக்கப்பட்டிருக்கின்ன. கூட்டுறவுத் துறையில் (கோவாபரேடிவ் செக்டார்) ஒன்றும் இல்லை. பொதுத் துறையில் (பப்ளிக் செக்டார்)—ஸ்டேட் செக்டாரில் ஒன்றும் இல்லை—பொதுத் துறையில்—சென்ட்ரல் செக்டாரிலும் ஒன்றும் இல்லை.

1965-66 வது ஆண்டில் தனியார் துறையில் 12 தொழில்களும், கூட்டுறவுத் துறையில் 9 தொழில்களும் துவக்கப்பட்டிருக்கின்றன. பொதுத் துறையில், ஸ்டேட் செக்டாரில் ஒன்றும் இல்லை. சென்ட்ரல் செக்டாரில் மூன்று தொழில்கள் துவக்கப்பட்டிருக்கின்றன.

1966-67-வது ஆண்டில் தனியார் துறையில் 12 தொழில்களும், கூட்டுறவுத் துறையில் இரண்டு தொழில்களும் துவக்கப்பட்டிருக்கின்றன. பொதுத் துறையில், ஸ்டேட் செக்டாரில் ஒன்றும் இல்லை. பொதுத் துறையில், சென்ட்ரல் செக்டாரில் இரண்டு தொழில்கள் துவக்கப்பட்டிருக்கின்றன.

நம்முடைய முன்னாள் அமைச்சர் திரு. பூவராகன் அவர்கள் பேசும்போது, யார் ஆரம்பித்தார்கள்? எப்பொழுது நீங்கள் வந்தீர்கள்? என்று கேட்டார்கள். நாங்கள் ஒன்றும் பாத்தியதை கொண்டாடிவிடவில்லை. 1967-68-வது ஆண்டைத்தான் குறிப்பிடுகிறேன். அந்த ஆண்டில், தனியார் துறையில் ஐந்து தொழில்கள் துவக்கப்பட்டிருக்கின்றன. கூட்டுறவுத் துறையில் ஒன்றும் இல்லை. பொதுத் துறையில், ஸ்டேட் செக்டாரில் ஐந்து தொழில்களும், சென்ட்ரல் செக்டாரில் இரண்டு தொழில்களும் துவக்கப்பட்டிருக்கின்றன.

இந்த அளவிற்குத்தான் நாம் தொழில் வளர்ச்சியை இந்த மூன்று வருஷங்களில் பெற முடிந்திருக்கிறது. ஆகையால் இதைப்

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 ஜூலை 8

பற்றிரொம்ப அதிகமாகப் பேசிக்கொண்டு போவதானால், நாம் இரண்டு பக்கத்திலுமே வாதாடலாம். ஆகையால்தான், நான் முதலிலேயே சொன்னேன், நீங்கள் அந்தவிதமான முறையிலே இதைத் திருப்புவதைவிட, தொழில் வளரவேண்டும் என்பதிலே எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறோம் என்பதை அடிப்படையாக வைத்துக்கொண்டு, என்னென்ன தொழில்களை ஏற்படுத்தலாம் என்பதை யோசனையாகச் சொல்லவேண்டும் என்று. அப்படி ஒரு யோசனையை நம்முடைய முன்னாள் அமைச்சர் திரு. பூவராகன் அவர்கள் சொல்லும்போது இரண்டு மூன்று கருத்துக்களைச் சொன்னார்கள். நெய்வேலியிலே இருக்கிற கழிவுப் பொருள்களிலிருந்து—துணைப் பொருள்களிலிருந்து—பல்வேறு வகையான புதிய தொழில்களெல்லாம் உண்டாக்கலாம் என்று சொன்னார்கள். விருத்தாசலத்திலேயுள்ள பீங்கான் தொழிற்சாலை இப்பொழுது மந்த நிலையில் இருந்தாலும் இன்னும் அதை விரிவு படுத்தலாம் என்று சொன்னார்கள்.

இவைகளையெல்லாம் என்னென்ன செய்யலாம் என்பதை, நம்முடைய சென்னை மாநிலத்தினுடைய தொழில் வளத்தைப்பற்றி நிபுணர்களெல்லாம் தக்க முறையில் ஆராய்ந்து, சில ஆண்டு

பிற பகல் 1-30

களுக்கு முன்னாலே டாக்டர் லோகநாதன் அவர்கள் கொடுத்த அறிக்கை, நான் முன்பு சட்டமன்றத்தில் இருந்தபோதுதான் இங்கே வைக்கப்பட்டது. நாம் ஓய்வாக இருக்கிறபோது அதைப் பார்க்க வேண்டும். அதில் குறிப்பிட்டிருப்பதெல்லாம் செய்துவிட்டிருக்கிறோமா, என்றால் இல்லை. செய்வதற்கு இன்னும் வாய்ப்புக்கள் இருக்கின்றனவென்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டு, அதற்கேற்ற முறையில்; "இதை ஆரம்பியுங்கள், அதைச் செய்யுங்கள்" என்று சொல்ல வேண்டுமே தவிர, இவர்கள் என்ன செய்து விட்டார்கள்?" என்று பேசுவது—வேண்டுமானால் நாங்கள் வந்து விட்டோம் என்பதால் ஏற்பட்டுள்ள அதிருப்தியின் விளைவாக இருக்கலாமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்த 100 நாட்களுக்குள் பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலையைப்போன்று ஏற்படுத்திவிட முடியுமா?—திருச்சியிலுள்ள பாய்லர் பிளாண்ட் ஒன்றை உருவாக்கிவிட முடியுமா—நெய்வேலி சுரங்கத்தைப்போல் தோண்டியிருக்க முடியுமா?—நாங்கள் வருவதற்கு முன்னாலிருந்த பைல்களைத் தோண்டியெடுக்கவே காலம் போதவில்லை. நாங்கள் வந்த 100 நாட்களில் எங்கள் சாதனைகள் என்ன என்னவென்று நீங்கள் எதிர்பார்த்தீர்களானால், நீங்கள் ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் என்ன செய்திருந்தீர்கள் என்பதையும் நான் எடுத்துக்காட்ட வேண்டியிருக்கும். நாங்கள் இந்த 100 நாட்களில் செய்தவைகளைவிட, நீங்கள் ஆயிரம் நாட்களில் செய்தது குறைவாகவே இருக்கும். நம்முடைய நண்பர்கள் எல்லாம் பொறுமையாக உட்கார்ந்து பழைய ஏடுகளையெல்லாம் எடுத்துப் பார்த்தாலே தெரியும்.

நமது நண்பர் திரு. கருத்திருமன் அவர்கள், "இதெல்லாம் சுதந்திரம் வந்தபிறகுதானே ஏற்பட்டது" என்று சொன்னார்கள். "நான் குளித்த பிறகுதானே சுத்தமாக இருக்கிறேன்" என்று



1967 ஜூலை 8] [திரு. சி. என். அண்ணாதுரை]

சொல்வதுபோல அவர் கூறியிருக்கிறார். ஆனால் அதைக்கூட நாம் அதிகமாக வலியுறுத்தக்கூடாது. சுதந்திரத்திற்கு முன் இருந்த அரசாங்கம் வேறு; சுதந்திரத்திற்குப் பின் இருக்கும் அரசாங்கம் நம்முடைய ஆட்சி. சுதந்திரத்திற்கு முன்னாலே, பெரம்பூரிலே இன்டக்ரல் கோச் ஃபாக்டரி ஓரளவு இருந்தது. பொன்மலையிலே ஓரளவு இருந்தது—கோயம்புத்தூரிலுள்ள மில்களில் பெரும்பாலானவை சுதந்திரத்திற்கு முன்னால் ஏற்பட்டவை—பக்கிங்ஹாம் கர்னாடிக் மில் சுதந்திரத்திற்கு முன்னாலே ஏற்பட்டது—நீங்கள் அவைகளை எடுத்துப் பேசுவதிலே என்ன பொருள் இருக்கிறது? நீங்கள் இவைகளையெல்லாம் பேச ஆரம்பித்தால், நானும் அதற்கு முன்னாலிருந்த நிலைமையைப்பற்றி என் பேச்சை எடுக்க வேண்டியிருக்கும். எங்கள் பதவிக் காலம் முடிந்த பிறகு, நாங்கள் ஐந்து வருடத்தில் எவ்வளவு செய்தோம், நீங்கள் எவ்வளவு செய்தீர்கள் என்று கணக்குப் பார்க்கவேண்டும். நாங்கள் இடையிலேயே ஆட்சியை விட்டுவிட்டுப் போய்விட வேண்டுமென்று நீங்கள் நினைத்தால் சொல்லுங்கள். நண்பர்கள் எல்லோரும், "இருக்க வேண்டும், இருக்க வேண்டும்" என்று சொல்கிறார்கள். எங்களுடைய பதவிக் காலம் முடிந்த பிறகு கணக்குப் பார்ப்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

இப்போது தொழில் வளர்ச்சியைப்பற்றி யோசிக்கும் நேரத்தில் இதை மூன்று வகையாகப் பிரிக்கலாம். நம்முடைய மாநிலத்தில் கிடைக்கக்கூடிய இயற்கை வளங்களுக்கு ஏற்ற முறையில் தொழில் வளர்ந்திருக்கிறதா? அதில் கிடைக்கும் வருவாய் மாநிலம் முழுவதற்கும் பெறப்பட்டிருக்கிறதா? வளர்ந்திருக்கின்ற தொழில்கள் மாநில சர்க்காருக்கு உட்பட்டிருக்கிறதா?—இந்த மூன்றையும் யாரும் மறுக்க மாட்டார்கள். நெய்வேலி இயற்கைச் செல்வம் மத்திய சர்க்காரால் துவக்கப்பட்டிருக்கிறது. "அது மத்திய சர்க்காரிடத்தில் இருந்தால் என்ன? மாநில சர்க்காரிடத்தில் இருந்தால் என்ன?" என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதனால் கிடைக்கும் வருவாய் எங்கு போகும் என்பது எல்லோருக்கும் தெரியும். நாம் விரும்பும்போது நெய்வேலிச் சுரங்கத்தை மாநில சர்க்கார் எடுத்துக்கொள்ளலாம். அந்த விவரங்கூட எனக்குத் தெரிந்திருக்கிறது. இயற்கை வளங்களைப் பொறுத்து in proportion to the natural resources அதற்கேற்ற அளவுக்கு நமக்குத் தொழில் வளர்ச்சி இல்லை. மத்திய சர்க்கார் மூலமாகத்தான் தொழில் வளர்ச்சி அடைந்திருக்கிறதே தவிர மாநில சர்க்கார் மூலமாக இல்லை. ஏனெனில் மாநில சர்க்காருடைய மேற்பார்வையில் எதுவும் இல்லை. நாமே, அதற்குச் சொந்தக்காரர்களானால் வேலைவாய்ப்பு நமக்குக் கிடைக்கும் Non-tax revenue அதாவது, வரி போடாமல் கிடைக்கக்கூடிய ஒரு வருவாய் நமக்குக் கிடைக்கும். இப்போது ஏழை மக்களை வாட்டி வதைக்கக்கூடிய வரியின் பெரும்பகுதியை நாம் தள்ளலாம். நம்முடைய எதிர்க்கட்சியிலுள்ள நண்பர் திரு. பூவராகன் அவர்கள் கூட பின்னால் யோசித்துப் பார்க்கட்டும். இதுவரையிலும் மாநில சர்க்காருக்குத் தொழில் துறையின்மூலம் என்ன வருமானம் கிடைத்திருக்கிறது

என்பது தெரியவரும். நீங்கள் அந்த ஏடுகளைப் பார்த்தால் தெரியும் மாநில சர்க்கார் ஆரம்பிக்கும் தொழில் மூலதனம் என்று ஆரம்பித்து வருவாய் என்ற இடத்தில் இரண்டு மூன்று புள்ளிகள்தான் இருக்கும். அவர்கள் பேரில் குற்றம் சொல்லவில்லை. அப்படிப்பட்ட தொழில்கள்தான் நம்மிடத்தில் இருக்கின்றன. மாநில சர்க்காரிடத்திலே இருக்கின்ற பெரிய தொழில்கள் மின்சாரம், நீர்ப்பாசனம் என்பவைதான். இந்த இரண்டுக்கும்தான் நாம் மூலதனம் போட்டிருக்கிறோம். மின்சாரத்தைப் பொறுத்தவரையில் சர்க்கார் கொடுத்திருக்கிற கடனுக்கு வட்டியிலேயே பாக்கி செலுத்த வேண்டியிருக்கிறது. நீர்ப்பாசன மூலதனத்திற்குக் கிடைக்க வேண்டிய வட்டியைக் கணக்கிட்டுப் பார்த்தால் 3 கோடி நஷ்டமாக இருக்கிறது. மோட்டார் தொழிலிலே சென்னை நகரத்தைத் எடுத்துக்கொண்டால், நஷ்டத்தில் இருக்கிறது—வெளியூர்களில் லாபம் இருக்கிறது. இருந்தாலும் அதிகம் என்று கூறிவிட முடியாது. உதகமண்டலத்திற்குப் பக்கத்திலே, கொயினா மாத்திரை தயாரிக்கின்ற இடம் இருக்கிறதே, அதை ஒவ்வொரு தடவையும் மூடிவிட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இரண்டு மூன்று வருடங்களாக அந்தக் கொயினா மாத்திரையை வெளிநாடுகளுக்கு அனுப்பி, வருவதனால் கொஞ்ச லாபம் கிடைக்கிறது. வருவாய் அதிகம் கிடைக்கவில்லை. ஆகையால் மாநில சர்க்காருக்கு வருவாய் கிடைக்கத்தக்க விதத்தில் மாநில சர்க்காருக்குச் சொந்தமாக்கப்பட வேண்டுமென்ற கொள்கை அடிப்படையில் வைத்துக்கொள்ளாவிட்டாலும், வருவாய் அடிப்படையில் கணக்கிடுவது சரியென்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

வேறொரு பிரச்சினையைப்பற்றி திரு. சுவராகன் அவர்கள் சொன்னார்கள். "இந்த மின்சார விசிறிகளையெல்லாம் எடுத்து விட்டு, பனை ஓலை விசிறிகளை வைத்துக்கொள்ளலாம். அப்படிச் செய்தால் எல்லோருக்கும் வேலை கிடைக்கும்" என்று வேடிக்கையாகச் சொல்லப்பட்டதற்கு, "பொது மக்கள் என்ன எண்ணிக் கொள்வார்கள்?" என்று சொன்னார்கள். பொதுமக்களிடத்தில் எனக்குக் கொஞ்சம் பழக்கம் இருக்கிறது. அவர்களுக்கு எது வேடிக்கை, எது இல்லை என்பதைப் புரிந்துகொள்வார்கள். நான் அன்றையதினம் சொன்ன நேரத்தில், "சில இலாக்காக்களில் குறிப்பிட்ட ஆட்களுக்கு வேலை கொடுக்க வேண்டிய நேரத்தில், சில பேர்களை வீட்டுக்குப் போகச் சொல்கிறீர்களே, நியாயமா?" என்று அவர்கள் கேட்டார்கள். வேலை கொடுப்பதுதான் முக்கியம் என்றால், இந்த மின்விசிறிகளையெல்லாம் நிறுத்திவிட்டு, பனை ஓலை விசிறிகளை வைத்துக்கொள்ளலாம். அதனால் அதிக பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது. பொதுமக்கள் தப்பாக எண்ணிக் கொண்டு விடுவார்கள் என்று திரு. பூவராகன் நினைக்கிறார்கள். ஆனால் பொதுமக்கள் நல்லவிதமான கருத்தை உணர்ந்திருக்கிறார்கள். இனிமேல் அதை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நீங்கள் முயற்சிக்கலாம். பொதுமக்கள் நன்கு தெளிவாக இருக்கிறார்கள்.



வேலைவாய்ப்பு மட்டும் தேவையென்றால், மத்திய சர்க்கார் இருந்து நடத்தினால் என்ன? வெள்ளைக்காரனே இருந்து தொழில் நடத்தினால்தான் என்ன? வெள்ளைக்காரன் இருந்து புதிய புதிய தொழில்களை ஆரம்பித்தால் வேலைவாய்ப்பு அதிகம் கிடைக்கும். ஆனால் அதில் கிடைக்கின்ற லாபம் வேறு இடத்திற்கு அல்லவா போகிறது? வெள்ளைக்காரனும், மத்திய, சர்க்காரும் ஒரேமாதிரி என்று நினைக்கவில்லை. "அவர்கள்தானா இவர்கள்?--இவர்கள்தானா அவர்கள்?" என்று அந்த ஆராய்ச்சியில்கூட சொல்லவில்லை. மத்திய சர்க்காரைவிட வெள்ளைக்காரர்களே சில விஷயத்தில் நல்லவர்களாக இருந்து வருகிறார்கள். நாமும் ஒரு சர்க்கார் நடத்துகிறோம். நமக்கும் வருவாய் தேவைப்படுகிறது. வரி போட்டுக் கொண்டே போனால், மக்கள் கஷ்டப்படுவார்கள். அதற்காக தொழில் வளர வேண்டும். தொழிலை மத்திய சர்க்கார் எடுத்துக் கொண்டால் மக்கள், மத்திய சர்க்காரிடத்தில் இல்லை. நம்மிடத்தில்தான் இருக்கிறார்கள்: நம்மிடத்திலுள்ள இயற்கை வளத்தையெல்லாம் பயன் படுத்தி தொழில்வளங்களை உண்டாக்கியிருக்கிறோமே தவிர, அதனால் கிடைக்கும் வருவாய் நமக்குக் கிடைப்பதில்லை.

சேலம் உருக்காலை விஷயத்தில் மத்திய சர்க்கார் நடந்து கொள்வது நியாயம் என்று நீங்கள் கருத மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். எவ்வளவு காலமாக சேலம் இரும்பு கஞ்சமலைப் பகுதியில் தூங்கிக்கொண்டிருந்தது,—19-ம் நூற்றாண்டின் இறுதியில் ஆராய்ச்சிகள் முடிக்கப்பட்டு, இந்த இருபது வருடங்களாக நாம் அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம் உருக்காலைத் திட்டம் உண்டு என்று நினைக்கப்பட்டது, அது நான்காவது திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை. அதற்குப் பிறகும் என்னுடைய நண்பர் தைரியம் சொல்கிறார். தைரியமாகச் சொல்லலாம். "ஆரம்பிப்பதாக இருந்தால் நீங்கள் ஆரம்பியுங்கள். இல்லையானால் நான் ஆரம்பித்துவிடுகிறேன்" என்று சொல்லலாம். இது போலீஸ்காரரிடத்தில், "இதை நீ கண்டுபிடிக்கிறாயா, இல்லை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொல்வதைப் போன்றது தான். போலீஸ்காரர் கண்டுபிடித்துவிடுவார் என்பதுதான் நம்பிக்கை. அவரிடத்தில் அவநம்பிக்கை ஏற்படுகிறபோது "நானே பார்த்துக் கொள்கிறேன்" என்று சொல்கிற முறையில்தான் எதிர்க்கட்சித் தலைவர் இன்றைக்குப் பேசினாரே தவிர சேலம் இரும்பாலைத் திட்டத்தை மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்ளாததால் எனக்கு இருக்கிற மனத்தாங்கலைவிட எதிர்க்கட்சித் தலைவருக்கு அதிகம் இருக்கிறது என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். அந்தக் கட்சியைச் சேர்ந்த அவர்கள் எல்லோருக்குமே இருக்கிறது. ஆனால் எப்படிச் சொல்வது? அப்படிச் சொல்லிவிட்டால் கட்சிக்குள் பேதம் ஏற்பட்டுவிடுமே என்று அஞ்சுகிறார்கள். நான் வேண்டிக் கொள்வது எல்லாம் கட்சிப் பாகுபாடுகளை மறந்து நாம் எல்லோரும் இந்த ஒரு விஷயத்திலாவது ஒன்றுபட்டாக வேண்டும். ஒன்றுபடுவதற்கான அருமையான நாள் தான் எழுச்சி

நாள். அதில் விரும்பத் தகாதவைகள் ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது என்று அஞ்சலாம். உங்களைப் போன்ற நல்லவர்கள் பங்கு கொண்டால் தவருக காரியம் ஏன் நடக்கப் போகிறது? உங்களைப் போன்ற பொறுப்புள்ளவர்கள் கலந்து கொண்டால் தான் தவருகப் போனாலும் கூடக் கண்டு பிடித்துச் சொல்லலாம். தடுத்து நிறுத்தலாம். ஆகவே அன்றையதினம் சொன்னதையே இன்று மறுபடியும் நான் சொல்கிறேன். எழுச்சி நாளில் நீங்களும் கலந்துகொள்ள வேண்டும். சேலம் இரும்பாலைத் திட்டம், தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களும் அரசால் நியாய அடிப்படையில் கேட்கப்படுகின்றன. மக்கள் அடிப்படையில் கேட்கப்படுகின்றன. அவற்றினால் கிடைக்கக்கூடிய பலன் நிரம்ப இருக்கிறது. ஆகவே, மத்திய சர்க்காருக்கு உணர்த்தும் அடிப்படையில் இந்த எழுச்சிநாள் நடைபெற இருக்கிறது. நாங்கள் எழுச்சி நாள் என்று சொன்னவுடனேயே, நாடெங்கிலும் கதவடைப்பு, ஊர்வலங்கள் என்ற அடிப்படையில் நடக்கும் என்று எண்ணவேண்டாம். அப்படிச் செய்ய நாங்கள் எந்தவகையிலும் திட்டமிடவில்லை. எழுச்சி நாளில் எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட்டு சேலம் இரும்பாலைத் திட்டத்திலும் சரி தூத்துக்குடி துறைமுக ஆழ்கடல் திட்டத்திலும் சரி மத்திய சர்க்கார் நியாயக் குறைவாக நடந்துகொண்டிருக்கிறார்கள், நமக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும். ஆகவே இது விஷயத்தில் அவர்கள் கட்சிக் கட்டுப்பாடுகளை ஓரளவு தளர்த்திக்கொண்டு கட்சிக்கு அப்பாற்பட்ட இந்தப் பிரச்சினையில் ஒத்துழைக்க முன் வரவேண்டுமென்று அன்போடு அழைக்கிறேன்.

இன்னொன்று, தொழில் வளர்ந்தால் வருவாய் வருகிறது. அப்படிப் பெறுகிற வருவாயும் மத்திய சர்க்காருக்குப் போகிறது, நமக்கு வரவில்லை என்று குறிப்பிட்டேன். தனியார் துறையில் ஆரம்பிக்கபபட்டிருக்கிற தொழில்களில் இருந்து பெறும் பங்கு லாபம் வருகிறது என்றாலும் அது அவர்களுக்குப் போகிறது. அதனால்தான் நம் நாட்டில் மொத்த வருமானம்—தேசிய மொத்த வருமானம் 'National-income' —தனி நபர் வருமானம் 'Per capita-income' ஆகிய இரண்டுக்கும் ஏற்றத் தாழ்வு இருக்கின்றன. தொழில்கள் பெருகப் பெருக வருவாய் பெருக வேண்டும். வருவாய் பெருகப் பெருக அது பரவலாக்கப்பட்டு தனி நபர் வருமானம் பெருகவேண்டும். தனி நபர் வருமானத்திற்கும், தேசிய மொத்த வருமானத்திற்கும் ஏற்றத்தாழ்வு குறையும்படி செய்வதுதான் திட்டமிட்ட சரியான பொருளாதாரம் ஆகும். ஆனால், நம் நாட்டில் நாஷனல் இன்கம் பெருகியிருக்கிற அளவுக்கு தனி நபர் வருமானம் பெருகவில்லை. அதையும் நீங்கள் கவனிக்க வேண்டுமென்று கருதுகிறேன்.

முதலில் தொழில் துறை அமைதி பாதுகாக்கப்படவேண்டும் என்பதை டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். அதோடு மிக நல்ல கருத்தையும் சொன்னார்கள். கேரள அமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கும் அறிக்கையையும் படித்துக்



காட்டினார்கள். "அதைப் போல நீங்கள் ஏன் உங்களது தொழில் கொள்கையை எடுத்துச் சொல்லவில்லை?" என்று கேட்டார்கள். ஒரு சமயம் கேரள முதல் அமைச்சர் அவர்கள் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவராகையால் அவர்களுடைய தொழில் கொள்கையைப் பற்றி ஐயப்பாடு எழக்கூடும் என்கிற கருத்தில் இதுதான் எங்கள் தொழில்கொள்கை என்று அறிவித்திருக்கக் கூடும் என்று கருதுகிறேன். ஆனால் எங்களைப் பற்றி இன்னும் விளக்கிக்கொண்டிருக்கவேண்டுமென்ற நிலை இல்லை. ஆயினும் தெளிவுபடுத்த முன் வருகிறேன்.

முதல் திட்டம் தொழில் துறையில் உள்ள மந்த நிலைமை நீக்கப்படவேண்டும். அடுத்து, தொழில் துறையில் ஒரு சுமுகமான உறவு இருப்பதற்கு வேண்டிய எல்லா வழிகளையும் இந்தச் சர்க்கார் மேற்கொள்ளும். மூன்றாவதாக தொழில் துறையில் கிடைக்கிற வருவாய் சமூகம் முழுவதற்கும் பரவலாக்கப்பட படிப்படியாக இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும். நான்காவதாக கூடுமான வரையில் புதிய தொழில்கள் துவக்கப்படுகிற நேரத்தில் இதில் இருந்து கிடைக்கக்கூடிய வருவாய் மாநிலத்திற்கு வரக்கூடிய அளவில் துவக்கப்படவேண்டும் என்பது தான்.

இவைகளுக்கும் மேலே ஏதாவது கொள்கை உண்டா என்றால், வேண்டுமானால் இவற்றுக்கு முன்னே, பின்னே சில வார்த்தைகளைச் சேர்த்து, "இதுதான் எங்கள் கொள்கை, இதைச் செய்வதாக வாக்குறுதி அளிக்கிறோம்" என்பதாக எல்லாம் சொல்ல வேண்டும். இப்படிச் சொல்ல வேண்டுமென்று யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். நான் மேலே குறிப்பிட்ட அடிப்படையில் பணியாற்றுவது என்று இந்தச் சர்க்கார் முடிவு எடுத்திருக்கிறது.

மற்றொன்று, அரக்கோணத்தில் புதிய தொழில் அமைப்பதைப் பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் சில ஐயப்பாடுகளை எழுப்பினார்கள். முதலில் எந்த இடத்தில் ஆரம்பிப்பதாகச் சொல்லி ஆராய்ச்சி நடத்தினார்களோ அந்த இடத்தில் தொழிலை ஆரம்பிக்கவில்லை என்றார்கள். அவருக்குத் தரப்பட்டுள்ள தகவல்கள் தவறு என்று தெரிகிறது. எந்த இடத்தில் ஆரம்பிப்பதற்கு சர்வே நடத்தினார்களோ அதே இடத்தில் தான் தகுந்த ஆராய்ச்சிகளின் பின்னர் அந்தத் தொழிலை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இன்னொன்று அதற்கு வேண்டிய ரா மெட்டீரியல்கள் அந்த இடத்தில் போதுமான அளவில் கிடைக்குமா என்ற ஐயப்பாட்டை எழுப்பி, போதுமான அளவில் கிடைக்காது என்று தெரிவதாகச் சொன்னார்கள். அந்த இடத்தில் நிரம்ப கிடைக்கும் என்பதற்கு எல்லாவகையான ஆதாரங்களையும் தேடிக்கொண்ட பிறகு தான் இது அங்கே துவங்கப்படுகிறது. அதுமட்டுமல்ல. இதுபற்றி பைனான்ஸ் செக்ரடரி 15 பக்கத்தில் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார் என்று சொன்னார். அவர் சொன்னவுடனேயே அதைப்பற்றி விசாரித்தேன். ஏனென்றால் முக்கியமான இந்த விஷயத்தில் பைனான்ஸ் செக்ரடரி பணம்

எவ்வளவு ஒதுக்கலாம் என்கிற அளவில்தான் கருத்தைச் சொல்வார்களே தவிர இதுபற்றி அறிக்கை கொடுக்க என்ன இருக்கிறது என்று யோசித்தேன். அவர் 15 பக்கங்கள் அல்ல, 15 வரிகள் கூட அரக்கோணம் தொழிலுக்கு மாறான கருத்தை அவர் சொல்லவில்லை. இதுபற்றி நமது தொழில் இலாக்கா காரியதரிசி அவர்களும், மற்றவர்களும் மிகுந்த ஆர்வத்துடன், மிகுந்த நம்பிக்கையோடு இருக்கிறார்கள். அதை விரைவில் செயல்முறைக்குக் கொண்டுவருகிற கருத்தில் இந்தச் சர்க்கார் ஈடுபட்டிருக்கிறது.

மற்ற விவரங்களைப் பற்றி தொழில்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுப் பேசுவார்கள். தொழில் விளக்கக் கொள்கை இல்லை என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதால் தான் இந்தக் கொள்கையைப் பற்றி நான் விளக்கிச் சொல்ல நேர்ந்தது.

கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் கடந்த இருபது வருடங்களாக, பதினைந்து வருடங்களாக நாங்கள் ஒன்றுமே செய்யவில்லை என்பதாகச் சொல்கிறீர்களே, பழையதைப்பற்றியே பேசுகிறார்களே என்று சொல்கிறார்கள். அவர்களுக்குச் சொல்கிறேன். இப்போது கார்டு கவர் எழுதுகிறவர்கள் கூட "ஸ்ரீராமஜெயம்" என்று போட்டு எழுதுகிறார்கள். இராமனுக்கு எப்போதோ ஜயம் ஏற்பட்டது. என்றாலும் இன்றைக்கும் இராமனுக்கு ஜெயம் போடுகிறார்கள். (திரு. பி. ஜி. கருத்திருமன்: நீங்கள் அதை நம்புகிறீர்களா?) நல்ல கேள்வி. நம்பவில்லை என்றால், அண்ணாதுரைக்கு ராமனிடத்தில் நம்பிக்கை இல்லை என்று மாலையிலே போய் மக்களிடத்தில் சொல்வார்கள். (சிரிப்பு) இது ரொம்ப பழைய காலத்துப் பாணி. இராமாயணத்தை நம்புகிறவர்களுக்கே அது கற்பனைக் கதை என்று தெரியும். இப்படி ஒருவரை ஒருவர் சுட்டிக்காட்டிப் பேசுகின்ற நிலையில் இருந்து சில வருடங்களுக்குத் தப்ப முடியாது. அது வெகு சீக்கிரத்தில் முடிய வேண்டுமென்றால், நீங்கள் எங்களைச் சுட்டிப் பேசுவதை எவ்வளவு சீக்கிரத்தில் முடித்துக்கொள்கிறீர்களோ அவ்வளவு சீக்கிரத்தில் முடிந்துவிடும். நீங்கள் ஆரம்பிக்கும்போதே, "கனம் வெங்கட்டராமன் அவர்கள்" என்று ஆரம்பித்தீர்களானால். நாங்களும் 'கனம் கருத்திருமன்' காலத்தில் என்று ஆரம்பித்துவிடுகிறோம். போதும் இந்தப் பாணி என்றால் 'Let there be a gentleman's agreement. நீங்கள் பழைய காலத்துப் பாத்யதையை கொண்டாடாதீர்கள். நாங்களும் பழைய காலத்தை சுட்டிக்கொண்டே காலத்தை போக்கவில்லை. நடக்கவேண்டிய காரியங்களில் நாம் இரண்டு பேரும் கவனம் செலுத்தலாம். ஆனாலும் இப்படிச் சொல்லிக் கொள்வதில் தவறு இல்லை. உங்கள் ஆட்சிக் காலத்தில் தவறு இருப்பதாக நாங்கள் எடுத்துச் சொன்னால் தவறு இல்லை என்று நிரூபிக்கலாம். அப்படி நிரூபிப்பதன் மூலமாக எங்களுக்குக் கூட உபயோகமாக இருக்கும். ஆகையால், நாங்கள் உங்களைச் சுட்டிச் சொல்லும்போது நீங்கள் அருவருப்போ, எரிச்சலோ கொள்ளத் தேவையில்லை. இந்தச் சபையின் நடவடிக்கைகளிலும் எரிச்சல் இல்லாதபடி பேசிக் கொண்டு போகிறவர்கள் நிரம்ப இருக்கிறார்கள். ஒருவருக்



கொருவர் பேசிக்கொள்கிறபோது முகத்தில் கோபம் இருக்கும். உண்மையில் அவர் கோபப்படுகிறாரா என்று பாருங்கள். பேச உட்கார்ந்த உடனே அவர்களே யாருக்கும் தெரியாமல் சிரித்துக்கொள்வதை நான் கண்டு இருக்கிறேன். சிலர் அப்படிப் பேசுவதுதான் ஒரு முறை என்று கொண்டிருக்கிறார்கள். பாராளுமன்றத்தில மதிப்பிற்குரிய வாஜ்பாய் அவர்கள் பேசும்போது பார்க்கவேண்டும். அவரைப் பத்திரிகைகள் எல்லாம் குறிப்பிடும்போது angry-faced Vajpaye என்றே சொல்வார்கள். ஆனால் அவர் சிரிக்கிறபோது கட்டடமே அதிர்ந்துவிடும். ஆக, இப்படி பேசினால் தான் கோபத்திற்கு அடையாளம் என்று எண்ணிக்கொண்டு பேசுகிறார்களே தவிர நான் மிக நல்லமுறையில் சில மாதங்களிலேயே உங்கள் மன நிலையை ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கிறேன். காரணம், நான் அரசியல்வாதி மட்டும் அல்ல, நடிப்புத்துறையிலும் பழகியிருக்கிறவன். ஆகவே, உங்கள் மன நிலையைக் கண்டுபிடித்து விட முடியும். அப்படிப் பார்க்கிறபோது உறுப்பினர்களில் சிலர் எந்த எந்த நேரத்தில் எந்த எந்த பாவத்தில பேச வேண்டுமோ அந்த அந்த பாவத்தில் பேசுகிறார்கள். அவ்வளவுதான். ஆக, உங்கள் யாரும் எதையும் தப்பாகக்கொள்ள வேண்டியதல்ல. மேலான கருத்துக்களைக் கேட்டுக்கொள்ள நான் எப்போதும் தயாராய் இருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழிற்துறை மானியத்தின் மீது நடந்த விவாதத்தையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழிற்துறையில் அரசினர் எடுத்திருக்கிற நடவடிக்கைகள் பற்றியும், அரசினருடைய கொள்கையைப்பற்றியும் அவற்றை மேற்கொள்ளவேண்டிய வழிமுறைகளைப் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். காலமும் கடந்துவிட்ட காரணத்தாலே நான் மேலும் நீண்ட பல விளக்கங்களைச் சொல்லாமல் பொதுவாக உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு விடையளிப்பதற்கு கூட நான் காலத்தை எடுத்துக்கொள்ளாமல் ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே தொழில் வளர்ச்சியைப் பொறுத்த வரையிலும் உறுப்பினர்கள் இத்தனை தூரம் அக்கறை கொண்டிருப்பதை அவர்களுடைய உரைகளே நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதைச்சுட்டிக்காட்டினார்கள். நமது தமிழகத்தில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுகின்றவர்களுடைய எண்ணிக்கைதான் அதிகம். அதற்கடுத்தாற்போல் கைத்தறி நெசவுத்தொழிலில், அதிகம் பேர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிறவர்கள் வேறு தொழில்களில் ஈர்த்துக் கொள்ளப்படுவதன்மூலமாக இந்த மாநில மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தமுடியும் என்ற கருத்தை அத்தனை பேர்களும் கொண்டிருக்கிறோம். மெள்ள மெள்ள மற்றத் துறைகளுக்கு அவர்களை ஈர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக்களை

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1967 ஜூலை 8

ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழிற்சாலைகளைப் பெருக்குவதன் மூலமாக ஏற்படுத்தலாம். இதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே ஏற்று நடத்திக் கொண்டுவந்த தொழிற்சாலைகளின் தொடர்பாக இந்த ஆண்டு எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சிகளைப்பற்றியும் முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இந்த ஆண்டிலே மிக விறுவிறுப்போடு முமமுரமாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று திட்டமிடப் பட்டிருக்கிற தொழிற்சாலைகள் ஐந்து தொழிற்சாலைகள், இவற்றிற்காக அரசாங்கத்தின் சார்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வார்ப்பட உருக்குத் தொழிற்சாலை அரக்கோணத்திலே ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் இந்த ஆண்டு சிமிட்டித் தொழிற்சாலை வெர்டிகிள் ஷாப்ட் முறையில ஏற்படுத்த ஆலங்குளத்தில் உருவாக்க முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. அடுத்ததாக, இயந்திரத் தளவாடங்கள் தொழிற்சாலை ஜப்பான நாட்டின் உதவியுடன் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. சிறிய சிமிட்டித் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு பரீட்சார்த்தமாக டாலமியாபுரத்தில ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த முயற்சிகள் நடைபெறுகின்றன. அது நல்ல பலனைத் தந்திருக்கிறது. குறைந்த அளவிலே சுண்ணாம்புக் கல் கிடைத்தால அங்கே சிமிட்டித் தொழிற்சாலை சிறிய அளவிலே ஆரம்பிக்கலாம் என்ற கருத்துத தோன்றக் கப்பட்டு அதுபற்றி டால்மியாபுரத்தில் பரீட்சார்த்தமாகச் செய்யப் பட்டு நல்ல லாபம் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டதால் அது மாதிரி பத்துப் பன்னிரண்டு சிறிய சிமிட்டித் தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது. நாள் ஒன்றுக்கு 600 டன் உருவாக்கமுடியும் என்றால் அதற்கு 6 அல்லது 7 லட்ச ரூபாய் செலவாகும். 30,000, 35,000, 40,000 டன் உருவாக்க வேண்டுமென்றால், சிறிய தொழிற்சாலைகளின் மூலமாக 75 ஆயிரம் டன் உருவாக்கக்கூடிய தொழிற்சாலைக்கு 45 லட்ச ரூபாய் அளவிலே அமைக்கலாம். குறைந்த அளவிலே சுண்ணாம்புக்கல்லைப் பயன் படுத்தி தொழிற்சாலைகள் உருவாக்க முடியும். டால்மியாபுரத்தில் அந்த அடிப்படையில் நடத்தப்பட்டு வேறு பல தொழிற்சாலைகளாக பல பகுதிகளில் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது. செங்கற்சூளையொன்று திருமழிசையிலே ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

கூட்டுறவு நெசவுத் தொழிற்சாலைகளில் இப்பொழுது 12 ஆயிரம் ஸ்பின்டில்ஸ்தான் இருக்கிறது, 25 ஆயிரம் ஸ்பின்டில்ஸ் இருந்தால் லாபம் வரும் என்று தெரிகிறது. ஆகவே, இப்பொழுது இருக்கிற 12 ஆயிரத்தை அதிகமாக்கி விரிவு படுத்துவதற்கு அரசு முயற்சி செய்துவருகிறது. மேற்கொண்டு இதுபோன்ற ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கும் முயற்சியெடுத்துக்கொண்டிருக்கிறது. திருநெல்வேலியில் கூட்டுறவு நெசவுத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதன் மூலம் பர்மா, சிலோன் போன்ற நாடுகளிலிருந்து



1967 ஜூலை 8] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வருகின்ற அகதிகளுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கக்கூடிய முறை
யிலே ஏற்படுத்தமுடியும், அதற்காக 15 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்
டிருக்கிறது. மற்ற நூற்பாலைகளில் இப்பொழுது இருக்கிற 12,500
என்ற அளவை 25,000 என்ற அளவுக்குப் பெருக்குவதன்மூலம்
கைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவசதிகள் ஏற்படுத்திக்கொடுக்க
அரசு முயற்சிசெய்துகொண்டிருக்கிறது. கைத்தறி நெசவுத்
தொழிலாளர்கள் உற்பத்தி செய்கின்ற நூலில் 75 சத விகிதம்
மாநில கூட்டுறவு சங்கத்திற்கும், மற்றவற்றை வெளிமார்க்கெட்டில்
விற்பதற்கும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அவற்றைக் குறைந்த
விலையில் விற்பதற்கும் அதாவது கட்டு ஒன்றுக்கு 45 காசிலிருந்து
1 ரூபாய் அளவுக்குக் கொடுக்கின்ற வகையிலே ஏற்பாடு செய்யப்
பட்டிருக்கிறது. அந்த வகையிலே கைத்தறி நெசவாளர்களுடைய
கஷ்டங்களை நீக்குவதற்கு அரசு முயற்சி எடுத்துவருகிறது. கூட்டு
றவு நெசவுச் சங்கங்களுக்குக் கொடுக்கின்ற உதவியை கொடுப்ப
தற்காக ரிசர்வ் பாங்க் அதிகாரிகளைக் கலந்து பேசி, அதற்கான
விதிகளைத் தளர்த்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.
நெசவாலைகள் பல்வேறு இடுக்கண்களைக் கொண்டிருக்கவேண்டிய
நிலைமை ஏற்பட்டது. பஞ்சின் விலை குறைவாகவும், மின்சார
வெட்டுக் குறைவு காரணமாகவும், கடன் வசதிகள் சரியாக இல்லாத
தன் காரணமாகவும் பல தொல்லைகள் ஏற்பட்டன. அதனால் நெச
வாலைகளில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டு பல மில்கள் கோயம்புத்
தூரில் மூடப்பட்டன. ஏழு எட்டு மாதங்கள் அவை மூடிக் கிடப்ப
தால் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்துவிடுகின்ற நிலை
இருக்கிறது. இதற்காக ஒரு அட்ஹாக் கமிட்டி அமைக்கப்பட்டு
அதிலே ஐந்து ஆலைகளைப் பற்றி முடிவெடுக்கப்பட முயற்சி
செய்யப்பட்டு இரண்டு ஆலைகள் நடத்துவதற்கு வாய்ப்பில்லை
யென்றும். மீதி உள்ள மூன்று ஆலைகளும் பாங்குகள் கடன் வசதி
கள் செய்து கொடுத்தால் ஆரம்பிக்கமுடியும் என்றும் தெரிகிறது.
அந்த முறையிலேதான் அவற்றிலே ஒன்றான கீதாஞ்சலி மில்
29-ஆம் தேதி ஆரம்பிக்க இருக்கிறது.

கோயம்புத்தூர் மில்களைப் பொறுத்தவரையில் அதற்காக
டாக்டர் பி. எஸ். லோகநாதன் கமிட்டி அமைக்கப்பட்டது.
அந்தக் கமிட்டியில் ஆலை அதிபர்களின் பிரதிநிதிகளாக ஐந்து
பேர்களும், தொழிலாளர்கள் பிரதிநிதிகளாக ஐந்து பேர்களும்
அரசாங்க அக்கவுண்டன்ட் ஒருவரும், ஹாண்ட்லூம் டைரக்டர்
ஒருவரும், தொழில் வல்லுனர் ஒருவரும் ஆக சேர்ந்து
இந்தக் கமிட்டியின் மூலம் ஆராய்ச்சி செய்து ஒரு அறிக்கையைச்
சமர்ப்பித்திருக்கிறார்கள். அவர்கள் 9 மில்களைப்பற்றிய தகவல்
களை அரசாங்கத்திற்குத் தந்திருக்கிறார்கள். அந்த முறையை
யொட்டி கிட்டத்தட்ட 50 லட்சம் ரூபாய் 9 மில்களுக்கும் கடனை
பாங்கர்கள் கொடுத்தால் அவற்றை துவங்குவதற்கு வழிவகை
ஏற்படும் என்ற வகையிலே அறிக்கையைத் தந்திருக்கிறார்கள்.
அதன்பேரில் 24, 25 பேங்கர்களை அழைத்துப் பேசி, மில்களுக்குக்
கடன் வழங்குவதற்கு அரசாங்கம் கியாரண்டி தருவதின்பேரில்
கடன் வழங்க ஆயத்தமாக இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

இதைப்பற்றி ஆலைச் சொந்தக்காரர்களும் பேங்கர்களும் கலந்தாலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆலோசனை முடிவுற்று அரசாங்கத்திற்குத் தெரிவித்ததற்குப் பிறகு அரசாங்கம் அதைப்பற்றிய முடிவை எடுக்கும். அவர்களுக்கு கியாரண்டி தருவதற்கு அரசாங்கம் முயற்சிக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பேங்கர்களும், ஆலை அதிபர்களும் பேச்சு வார்த்தைகள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு அவர்களுடைய பேச்சுவார்த்தையின் முடிவு தெரிந்தபிறகு அரசாங்கம் அதன்மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறது.

பி.ப. 2-00 மேற்கொண்டு உள்ள 11 ஆலைகளைப் பற்றி ஆராய்ந்து ஏழு ஆலைகளைப் பொறுத்தவரை அரசாங்கம் காரண்டி தரலாம் என்று இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால்தான் அந்தக் குழுவினர் அறிக்கை தந்திருக்கிறார்கள். ஏழு ஆலைகளுக்கு 71 லட்சம் ரூபாய் காரண்டி தருவதன் மூலம் அந்த ஆலைகள் செம்மையாக நடக்க வழிவகைகள் ஏற்படும் என்று கூறியிருக்கிறார்கள். மேற்கொண்டு ஆலை அதிபர்களும் பாங்கர்களும் கலந்து பேசுவதன் மூலம் தீர்வு காண வழி ஏற்படும். கூட்டுறவு மில்களை ஆங்காங்கு பரவலாக ஏற்படுத்துவதன் நோக்கமும் ஆங்காங்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில்தான்.

பல மாவட்டங்கள் தொழில் துறையில் பின் தங்கியிருக்கின்றன என்ற கருத்தை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். 'அது பற்றியும் இந்தத் துறை ஆராய்ந்து வருகிறது. ஏற்கனவே இரண்டு மூன்று மாநாடுகள் கூட்டி, ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் வாய்ப்புக்கு என்னென்ன மூலப் பொருள்கள் இருக்கின்றன; என்னென்ன தொழில்களை ஆரம்பிக்கலாம் என்று ஆராயப்பட்டு அந்த முடிவுகள் அரசாங்கத்தின் கையில் இருக்கின்றன. சிலபல மாவட்டங்களில் கண்காட்சிகள் ஏற்படுத்துவதன் மூலம் என்னென்ன மூலப்பொருள்கள் கிடைக்கின்றன என்பதை மக்களுக்கு அறிமுகப்படுத்தி ஐயாயிரத்திலிருந்து ஐந்து லட்சம் வரை, ஐம்பது லட்சம் வரை கடன் கொடுத்து என்ன தொழில்கள் ஆரம்பிக்கலாம் என்று பொதுமக்களுக்குத் தெரிவிப்பதன் மூலம் பொதுமக்கள் சிறு தொழில்களை ஆரம்பிக்க முன்வருவார்கள் என்ற கருத்தில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படியாகக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

பாலிடெக்னிக்குகள் ஆரம்பிப்பது இந்திய அரசின் உத்தரவின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் 7 தொழில் நுட்பக் கல்லூரியை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டது. அதிலே இரண்டு தனியார் துறையில் ஆரம்பிக்கப்படுவதற்கு ஆயத்தமாக இருந்தாலும், இந்திய அரசு இதிலே படித்து வெளியே வருகின்றவர்களுக்கு வேலைவாய்ப்பு இருக்கிறது என்பதைப் பற்றி ஆராய்ந்து வருகிறபடியால் புதிதாக இத்தகைய தொழில் நுட்பக் கல்லூரிகளை ஆரம்பிப்பதை நிறுத்தி வைக்கும்படி கூறியிருக்கிறது. எனினும்



அந்த இரண்டு தனியார் தொழில் நுட்பக் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும். உடனடியாக வழங்க வேண்டும் என்று இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மற்றும் திட்டமிட்டபடி தொழில் நுட்பக் கல்லூரிகளை நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேற்கொள்வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

தூத்துக்குடி துறைமுகத் திட்டம் நிறைவேற்றப்படுவதன் காரணமாக தொழிற்சாலைகள் பெருக வழிவகைகள் ஏற்படும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் குறிக்கப்பட்டிருக்கிற 23-ம் தேதி எழுச்சி நாள் அந்த அடிப்படையில்தான் வைக்கப்பட்டிருக்கிறது. அதிலே இந்த மாநில மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களுடைய ஒன்றுபட்ட எண்ணத்தை இந்திய அரசுக்குத் தெரிவிப்பதற்காகத்தான் கொண்டாடப்படுகிறது. அந்தத் துறைமுகத் திட்டம் 17 பெர்த்துகள் வைக்கலாம் என்று உருவாக்கப்பட்டு, பிறகு 11 பெர்த்துகளாகக் குறைந்து, பிறகு 6 என்று ஆக, அதன் பிறகு 5 பெர்த்துகள் என்று வந்து அதையும் விட்டு மீன்பிடி துறைமுகமாகச் செய்தால் போதும் என்ற நிலைக்கு வந்து விட்டார்கள். மீன்பிடி துறைமுகமாக்க 12 கோடி ரூபாய் செலவாகும் என்று தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே 5½ கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு விட்டது. 25 கோடி ரூபாய் செலவு செய்தால் கப்பல்கள் வந்து செல்லக்கூடிய துறைமுகமாகவே செய்துவிட முடியும். அது பற்றிய நிலைமைகள் எல்லாம் அண்மையில் இங்கு வந்திருந்த இந்திய அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ராவ் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. ‘அந்தத் திட்டம் கைவிடப்படவில்லை; “பேஸ்டு புரோகிராமாக” எடுத்துக் கொள்ளப்படும்’ என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

தூத்துக்குடி துறைமுகத் திட்டம் நிறைவேற்றப்படுமானால் பல புதிய தொழில்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. சென்னையைச் சுற்றியுள்ள நஞ்சை நிலங்களை எடுத்து தொழிற்சாலைகளை அமைத்தது போன்று நிலைமை அங்கில்லை. தூத்துக்குடியைச் சுற்றி பல மைல்கள் வெட்ட வெளியாக இருக்கிறது. அந்தக் காடுகளை எல்லாம் மாற்றி புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த பெரும் வாய்ப்பு இருக்கிறது. அந்தத் துறைமுகம் ஏற்பட்டால் 10 லட்சம் டன் அளவுக்கு ஏற்றுமதி இறக்குமதி இருந்தாலும் அது 25 லட்சம் வரை போகும், உயரக்கூடும் என்ற கருத்தை இந்த அரசு தெரிவித்திருக்கிறது. திட்டக் கமிஷனே 20 லட்சம் டன் அளவுக்கு ஏற்றுமதி இறக்குமதி இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறது. தென்கோடியில் துறைமுகம் வருவதன் மூலம் வேறு பல வசதிகளையும் பெறமுடியும். சேதுசமுத்திரத் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுமானால் 215 மைல்கள் அளவுக்குச் சுற்றிச் செல்வது 30, 40, மைல்கள் அளவுக்கு ஆகும்போது தூத்துக்குடி துறைமுகத்தால் ஏற்படுகின்ற பலன் அதிகமாகும். இந்தக் கருத்துக்கள் எல்லாம் இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்

பட்டிருக்கிறது. அங்கு ஒரு தெர்மல் ஸ்டேஷனை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்தி இருக்கிறது. சென்னையில் எண்ணூரில் இருக்கும் அனல் மின்சாரத் திட்டத்திலேயே 100 மெகா வாட் அதிகமான மின்சாரத்தை உற்பத்தி செய்து தூத்துக்குடி பகுதியிலுள்ள தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கலாம் என்ற கருத்தினை மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. அது தூத்துக்குடி வரையில் கொண்டு செல்லப்படுவதன் மூலம் இழப்பு அதிகமாக இருக்கும் என்ற காரணத்தால் தூத்துக்குடியிலேயேதான் ஒரு அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம். இந்தத் திட்டத்திற்கான எல்லா முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

கைத்தறி நெசவாளர்களுடைய நிலைமை பற்றித் தெரிவித்தார்கள். அவர்களுடைய கஷ்டங்களைப் போக்க அரசு மேற்கொண்ட முயற்சிகள் விரைவுபடுத்தப்படும். கலர்ச் சேலைகள், கரை போட்ட வேட்டிகள் ஆகியவற்றைக் கைத்தறிக்கே ஒதுக்குவது அவர்களுக்குப் பாதுகாப்புத் தருவதாக அமையும் என்ற கருத்தை எல்லாக் கட்சியினரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். 1952-ம் ஆண்டே எல்லாக் கட்சியினரும் ஏகமனதாகத் தீர்மானத்தைப் போட்டு நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் அதனை ஏற்றுக்கொள்ளாத அளவுக்கு இந்திய அரசாங்கத்தின் கொள்கை, போக்கு இருக்கிறது. கைத்தறியாளர்களுக்கு மேலும் அதிக வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற நோக்கத்தில் இந்த அரசாங்கம் தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது.

வேறுபல தொழிற்சாலைகள் பற்றியெல்லாம் சொல்லப்பட்டன. அது பற்றிய விளக்கங்கள் எல்லாம் விளக்கக் குறிப்பில் தரப்பட்டிருக்கின்றன. பல உறுப்பினர்களுடைய தொகுதியில் தொழிற்சாலைகள் அமைப்பது பற்றியும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அவை பற்றியெல்லாம் கவனம் செலுத்தி தக்க முறையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று கூற விரும்புகிறேன்.

மற்றும் தொழில் வளர்ச்சி பெறுவதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். பல்வேறு தொழிலதிபர்கள் கூட்டிய பல கூட்டங்களிலும் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். வர்த்தகக் குழுவினரிடம் தெளிவுபட எடுத்துச் சொல்லியிருககிறார்கள். இந்த மாநிலம் தொழில் துறையில் வளர்ச்சியடைய தொழில்களை ஆரம்பிக்க முன்வருகிற போது தக்க உதவியை இந்த அரசு செய்யும், தக்க வகையில் ஆரம்பிக்கப்படுகின்ற தொழில்களுக்கு ஊக்கம் தரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் எடுத்துச் சொல்லியபடி அரசாங்கத்திற்கு வருமானம் தரக்கூடிய தொழில்களும் மேற்கொள்ளப்படும். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை தொழில்களை ஆரம்பிப்பதற்குத் திறமையுள்ள தொழில் நுட்ப வல்லுநர்கள், தொழில் நுட்ப அறிவு பெற்றவர்கள் இருக்கிறார்கள். இந்த மாநிலத்தில் இருக்கிறவர்கள், வேறுபல மாநிலங்களில் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை செய்கின்ற அளவுக்கு தொழில் நுட்பத் திறமை பெற்ற



வர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துகிற வகையில், அவர்களுக்கு ஊக்கம் தருகிற வகையில் இந்த அரசு பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. லைசென்ஸ்கள் வழங்குகின்ற வகையில் சிலபல ஊழல்கள் இருந்து வருவதாகச் சொன்னார்கள். அவற்றைத் தவிர்ப்பதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. இதைப் பற்றியெல்லாம் இந்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்து சிக்கல்கள் இல்லாது வேறு பல தொழிற்சாலைகளை விரிவாக, எளிமையாக உருவாக்க முடியும்.

லைசென்ஸ்களில் வரும் சிக்கல்கள் காரணமாக நீண்ட காலதாமதமாகிறது. தொழிற்சாலைகள் ஆரம்பிக்க மூன்று நான்கு ஆண்டுகளாகியும் கூட அவை உருப்பெறாமல் சிலர் சோர்ந்து விட்டுவிடும் நிலைமை இருக்கிறது. அது இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. அந்தச் சிக்கல்களைத் தீர்க்க இந்திய அரசுக்கு எழுதி அதைப் போக்க வேண்டுமென்று கேட்டு வருகிறது. அப்படிப்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதால் பரவலாக தொழிற்சாலைகள் ஏற்பட முடியும். அப்படி பரவலாக தொழிற்சாலைகள் ஏற்படுவதால் பின்தங்கிய பகுதிகள் வளர்ச்சியடைய முடியும். அதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்க முடியும். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல் இந்தப் பிரச்சினையில் அங்கத்தினர்கள் அத்தனை பேர்களும் அக்கறையும் ஆர்வமும் கொண்டு நல்ல ஆதரவைத் தருவதன் மூலம் எல்லாப் பகுதிகளிலும் முறையான வளர்ச்சியை காண முடியும். அதற்கு அங்கத்தினர்கள் கூறியுள்ள பல்வேறு கருத்துக்களும், திட்டங்களும் பயன்படும். அதை மனதில் கொண்டு தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்று உறுதிமொழி கூறி இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

கோரிக்கை எண் XX-க்கு கொடுக்கப்பட்ட திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

ஏனைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்** : பேரவையின் முன் உள்ள கேள்வி.

"கோரிக்கை எண் XX-தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் 2,06,60,700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1967 ஜூலை 8

மானியக் கோரிக்கை எண் XL- தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்பதன் பேரில் வெட்டுத் தீர்மானம் கொடுத்த திரு. வி. கே. கோதண்டராமன் பேரவையில் இல்லாததால் அத்தீர்மானம் திரும்பப் பெற்றதாகக் கருதப்பட்டது.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** பேரவையின் முன் உள்ள கேள்வி.

"கோரிக்கை எண் XL தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் 9,38,08,700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 10—7—1967 காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பிற். பகல். 2-15

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. Statutory Rules and Orders.

226. *Notification issued with G.O. Ms. No.* 1943, *Education, dated the* 28th *October* 1966, *approving the list of all the Parks and Play-fields set out in the schedule of the notification in the area within the jurisdiction of the Virudhunagar Municipal Council. [Laid on the Table of the House under section* 14 (3) *of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act,* 1959 *(Madras Act* 26 *of* 1959)].

227. *Notification issued with G.O. Ms. No.* 399, *Rural Development and Local Administration, dated the* 27th *February* 1967, *making an amendment to the rules relating to the assessment and collection of taxes published at pages* 4 *to* 18 *of Supplement to Part V of the* Fort St. George Gazette, *dated the* 31*st July* 1963, *as subsequently amended. [Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 *(Madras Act XXXV of* 1958)].

228. *Notification issued with G.O. Ms. No.* 966, *Revenue, dated the* 26*th May* 1967, *appointing the first day of July* 1967, *as the date on which certain provisions of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act,* 1948 *shall come into force in the Kasi agraharam inam estate in Hosur taluk of Dharmapuri district. [Laid on the Table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act,* 1948 *(Madras Act XXVI of* 1948)].

229. *Notification issued with G.O. Ms. No.* 923, *Revenue, dated the* 19*th May* 1967, *making certain amendments to the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Rules,* **1965,**

2

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |